

சொந்தமற்றுப் போன
மண்ணைப் பற்றிய சித்திரமொழி

# மஜீத் கவிதைகள்

எதிர்
வெளியீடு

முழுத் தொகுப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்
வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஜீத் கவிதைகள்



எதிர்
வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலை ரூ. 150

மஜீத் கவிதைகள் ● ஆசிரியர் : மஜீத் ● உரிமை : ஆசிரியருக்கு ● முதல் பதிப்பு : ஆகஸ்ட் 2012 ● வெளியீடு : எதிர் வெளியீடு, 96, நியூ ஸ்கீம் ரோடு, பொள்ளாச்சி 642 002 ● தொலைபேசி : (04259) 226012, 98650 05084 ● மின்னஞ்சல் : ethirveliyedu@gmail.com ● வலைத்தளம் : www.ethirveliyedu.in ● அச்சாக்கம் : ஜோதி எண்டர்பிரைசஸ், சென்னை.

Majith Kavithaikal (Poetry) ● Author : Majith ● © Author ● First Edition : Aug 2012 ● Published by Ethir Veliyedu, 96, New Scheme Road, Pollachi -642 002. Phone : 04259 - 226012, 98650 05084 ● Email : ethirveliyedu@gmail.com ● www.ethirveliyedu.in ● Printed by : Jothy Enterprises, Chennai ● Price Rs. 150

## வலியும் காதலும் அவை நிமித்தமும்.....

எனது கவிதைகள் மொத்த தொகுப்பாக வருவது மிக்க மகிழ்ச்சியாக இருக்கிறது. எனது வாசிப்பின் ஊடாகவும் தொடர் எழுத்து செயல்பாட்டாலும் ஈழத்து இலக்கியப் போக்கில் சிந்தனை மாற்றம் ஏற்படுத்துவதற்கு முயற்சித்தேன். அது எந்த அளவுக்கு வெற்றி பெற்றுள்ளதோ, எனக்குத் தெரியாது. ஆனால், எனது முயற்சி தொடரும். எனது இலக்கிய நண்பர் ரியாஸ் குரானா, இலையின் மரணம் தொகுப்புக்கு எழுதிய அறிமுகம் மிகவும் சந்தோஷம் தந்த ஒன்றாக இருந்தது. எனது கவிதையை நேசித்த வாசகர்களுக்கும் நண்பர்களுக்கும் இந்நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

'வாழ்வின் மீதான எளிய பாடல்கள்' தொகுப்பு, நவீனத்துவம் சார்ந்த கவிதைகளாக இருந்தது. 'இலையின் மரணம்' அதிலிருந்து சற்று விலகிய கவிதைகளாக அமைந்தது. 'கள்ளிக்காடும் செம்பொடையனும்' தொகுப்பில் பின் நவீனத்துவத் தன்மைகள் மேலோங்கியதாகக் கருதுகிறேன். தொடர் அறு முறை எழுத்தை அதில் என்னால் கையாள முடிந்தது. காதல் கவிதைகளும் புறவயக் கவிதைகளுமாய் பலவகைக் கலவையாக அத்தொகுப்பு வந்தது. பன்மைத்துவத்தை விளிம்பு நிலை மக்களின் அபிலாஷைகளை வார்த்தைப் படுத்தும் பின் நவீனத்துவ உத்தியை அறிமுகம் செய்த நண்பர்களுக்கு நன்றி.

'புலி பாய்ந்தபோது இரவுகள் கோடையில் அலைந்தன' தொகுப்பு இனவாதம் பற்றிய கடும் சாடல்களை முன்வைத்தது. நான் நடுநிலையான எழுத்தையே எப்போதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பினேன். விடுதலைப் புலிகளின் காத்தான்குடி படுகொலைகளுக்குப் பின்னர், அவர்களது நடவடிக்கைகளை சித்திரமாக வடித்ததன் விளைவே அந்தத் தொகுப்பு. வடக்கிற்கும் கிழக்கிற்கும் தொடர்பற்று இருந்த சூழலில், எனது தொகுப்பு வெளியாகும் முன்பே அதைப் படிக்காமல், வடக்கிலுள்ள ஆயுதக் குழுக்கள் என்னை அச்சுறுத்தின; துரோகிப் பட்டம் சூட்டின. முதலில் பிழையாக நினைத்தவர்கள், தொகுப்பைப் படித்த பிறகு என்னிடம் மன்னிப்பு கேட்டார்கள்.

இந்த எல்லா தொகுப்புகளிலும் நிறையவே வலிகளைப் பாடியிருந்தாலும் காதலைப் பாடுவதற்கும் ஒருபோதும் நான் மறந்ததில்லை. இந்தப் பெரும் தொகுப்பு வெளியாக உதவிய எதிர் பதிப்பகத்தின் அனுஷ், செய்தியாளர் பீர் முகமது ஆகியோருக்கு நன்றி.

மஜீத்

ஆகஸ்ட் 19, 2012

சொந்தமற்றுப் போன மண்ணைப் பற்றிய சித்திரமொழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிஞர் மஜீத்
சில குறிப்புகள்...

இலங்கை அக்கரைப்பற்றை வாழ்விடமாகக் கொண்ட கவிஞர் மஜீத் தமிழ்ப் பேரினவாதத்தின் அச்சுறுத்தலால் தற்போது கொழும்பில் பதுங்கி வாழ்கிறார். 1990களில் புலிகள் முஸ்லிம்களை வடக்கிலிருந்து வெளியேற்றியதைக் கூட தந்திரோபாயம் என்று சொல்லி வாழ்வின் மீதான எளிய பாடல்கள் எழுதிய இவர் இப்போது தமிழ்ப் பேரினவாதமும் சிங்களப் பேரினவாதத்திற்கு நிகரானதுதான் என்பதை பகிரங்கமாக பிரகடனப் படுத்தியிருக்கிறார். தனது பண்பாட்டுப் படிமங்களை சின்னஞ்சிறு கதைகளாகவும், சகமனிதர்களின் வாழ்வியலாகவும் எடுத்துரைப்பதில் தனி நுணுக்கங்கள் பெற்றவர். தமிழில் காதலைப் பாடுவதில் மஜீதை போன்ற தனித்துவம் நவீன தமிழ் கவிதை பரப்பில் யாருக்கும் வாய்க்கவில்லை.

## உனக்கென எழுதிக்கிழிக்கப்பட்ட கடிதங்களில் சில வரிகள்

### 2009.01.04

உன்னுடன் பேசுகிற வேளையில் நீ
மௌனமாகிவிடுகிறாய்
நான் பேசாதபோது
நீயே உனக்குள் பேசிக் கொள்கிறாய்.
நீ மௌனமாக இல்லை
என் பேச்சின் உதவியின்றி
நீ மௌனமாக இருக்க முடிந்தால்
பேச்சு அவசியமில்லை.
அந்தக்கணத்துக்காகவே நான்
காத்திருக்கிறேன் . . .
ஏனெனில் நம் வார்த்தைகளுக்கு
எதிர்முனையில் துப்பாக்கிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2009.04.20

மலர்கள் சம்மதிக்காத ஒரு ராத்திரியில்
உனது மென்மைகள் வலிக்காதபடி
எந்தச் செல்லப் பெயரால்
உன்னை அழைத்தேனோ
அந்த
மயங்கும் சொற்களால் மீண்டும் . . .
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
தீயில் பறிபோன நமது நிலம்



## 2009.04.26

இன்றுதான் உன் ஓவியம் வந்து சேர்ந்தது
வார்த்தைகளுக்கப்பால் கடந்து செல்லும்
ஒரு புள்ளியைத் தேர்ந்தறிந்திருக்கிறாய்
நான் மௌனத்தை தேர்ந்து கொண்டேன்
இனி நாம் பேசிக் கொள்ளலாம்.

## 02

ஒரு ராக்குருவியின் பாடல் ஓய்ந்ததற்குப் பின்
இரவினது விளிம்பில்
தூரத்து நட்சத்திரத்தை
தடவிக் கொண்டிருக்கையில்
முடிந்து போன வைகரைக்கு அடுத்த நாள்
ஒரு ஓவியத்தை நீ அனுப்பியிருந்தாய்!
உலர்ந்துவிடாத கண்ணீர்த்துளி
சிதறிக்கிடப்பதற்காக நெஞ்சை நோகச்
செய்து விடுகிற உனது வெள்ளைப் புடவை
சரிந்து விழ–விழ இரவுகளை
மூடிக் கொண்டிருப்பதாய்
எவருக்கென்றும் சேமித்து வைக்காமல்
உனது அகதிமுகாமின் முற்றத்தில்
உதிர்ந்து கிடக்கும் சிறகுகளுக்குருகில்
சொந்த நிலத்து கடலின்
ஒரு அலைவந்து துடிப்பதாய்
வர்ணங்களும் கோடுகளும் பேசின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழந்த மேகங்களையும்
வால் நோண்டப்பட்ட சில பூச்செடிகளையும்
அதன் குறியீடுகளாய்
தேர்ந்தெடுத்திருக்கிறாய் ?
உனது தனிமையும் அதன் வலிகளும்
வரையப்படாமல் விடப்பட்டிருக்கிறதே
அது எனக்கான தொன்றா ?
காற்றை விட சற்றுக் குறைந்த
தென்றலின் ஓசையை
எப்படி நீ வரைந்திருக்கிறாய் ?

வண்ணாத்திப் பூச்சி
குந்தியிருக்கவென்று வரையப்பட்ட
புல்லின் இதழ்களைத் தொட்ட எனது விரல்
ஈரம்பற்றிக் கொண்டது.

சற்றும் எதிர்பாராத அவசரத்தில்
விரல்களில் ஒட்டிய ஈரம் காய்வதற்குள்
சித்திரத்தில் இருந்த பறவை
தன்னை விடுவித்துக் கொண்டு
ரெக்கைதட்டிப் பறந்து விட்டது
அத்துடன்.
பாதச்சுவடுகளையும்,
குழந்தைத்தனங்களையும் விட்டுச் சென்ற
உனது சொந்த மண் இன்னும் துயருடன்



03.

மூடப்படாத ஜன்னல்களைக் கொண்ட
எனது படுக்கை அறையில்
உனது வாசம் மெல்லத்துளிர்த்துவிட்டது
சுவரில் விழுந்து நொறிங்கிய எனது நிழல்
சருகுகளாய் ஒலி எழுப்பி அழுது கிடந்தன
கொஞ்சம் பிந்தி எந்தக் காரணங்களுமற்று
கூவிச் செல்லும் சித்திரத்திலிருந்து
தப்பித்த பறவை
அறைக்கு வெளியே
என்னை அழைக்கத் தொடங்கிற்று
வறண்ட தொண்டையின்
ஆழத்திலிருந்து முணுமுணுப்பதாய்
காற்று வெளியில் எழுதத் தொடங்கிற்று

எனது விலா எலும்பின் வர்ணங்களை
ரெக்கைகளில் பூசியிருக்கும்
அந்தச் செல்லப் பறவை
மீளவும் என்று சித்திரத்தில் நுழையும் ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரிக்க முடியாத நிமிடங்களின் உடைந்த சம்மதம்

தனித்த நிமிடங்களில்
எனக்குள் எங்கோ ஒரு இடைவெளியில்
நீ இருக்கிறாய்

எது கொண்டும் நிறைத்துவிடமுடியாத
வெற்றிடத்தில்
நீ இருந்து கொண்டிருக்கிறாய்

மாயும்
ஒரு வண்ணத்துப்பூச்சியின்
மெல்லிய பாடலைக் கேட்டுக் கொண்டு
மலர்களின் மாயச் சிறகுகளை
நான் வருடிக் கொண்டிருக்கையில்

நீ நிலவை ஊதி அணைத்து விடுகிறாய்.

காற்றின் தூரிகையினால் நதியினை – தொட்டு
நிலவில்
சப்திக்கும் இரவினை
எழுதிக் கொண்டிருக்கையில்

நீ கடலலையின் துடிக்கும்
இமைகளை நிறுத்திவிடுகிறாய்

நீளும் வெளியில் படபடத்து
சிறகெறிந்து செல்லும்
பறவைகளின் நளினங்களில் மயங்கி
நான் சிலித்துக் கிடக்கையில்



நீ வெட்கத்தின் விரல்களை கொளுத்திக் கொண்டு
மௌனித்து விடுகிறாய்

மென்தூறலில் தோகைவிரிக்கும் புல்லிதழில்
நான் உறங்கி விட நினைக்கையில்

நீ பெருமூச்சின்
அக்கினி குளிரின் விளிம்புகளை
உலர்த்திவிடுகிறாய்

இன்னுமின்னும்
நம்முரண்பாட்டை பின்னங்களால் பிணைத்து
பின்னிக்கிடந்தாலும்
தனித்த நிமிடங்களில்
எனக்குள் எங்கோ
ஒரு இடைவெளியில் நீ இருக்கிறாய்

எது கொண்டும்
நிரப்ப முடியாத வெற்றிடங்களில்
நீ இருந்து கொண்டுதானிருக்கிறாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1999.09.29 நடு இரவு

படுக்கையறையிலிருந்து
ஜன்னல் வழியே கண்கள்
என்னைக் கொண்டு செல்கிறது
தெருவில் குரைக்கும் வெறிபிடித்த
நாயின் வயதை ஒத்த பனி
மெல்ல இறங்கிக் கொண்டிருக்கிறது

அன்பிலிருந்து விடுபட்டு
தப்பித்து வந்த காற்று
எங்கள் நகருக்குள் நுழைந்து
திரும்புகின்றது நகரில் மனிதர்கள்
தவிர மற்றவைகள் மறைந்தன.

உறங்கியமாதிரி புணர்ந்தமாதிரி
நடந்தவர்களாய் நடந்ததாகவும்
இருந்தவர்கள் இருந்ததாகவும்
உறைந்த தரைமட்டுமிருந்தது
மறைப்பை அகற்றிவிட்ட
வெட்டவெளியானது எங்கள் நகரம்

காற்று திரும்பிப் போனவழியால்
ஒரு வனம்;
நடந்துவந்து நகரத்தில் வேரூன்றியது
அவள்;
மான் துள்ளித் துள்ளி
பற்றைக்கள் குதிக்கிறாள்
எனது நண்பன்
பாம்பு சீறபடமெடுத்து நிற்கின்றான்
தனது உயிரினங்களை
கூட்டிவராத காட்டில்;
பழைய நகர மக்கள் வசிக்கிறோம்.



இரவு தனது சட்டையில்
படிந்திருக்கும் இலேசான புழுதியை
ஒரு தரம் மெதுவாக உதறினால்;
பகலாய் மாறக்கூடிய
அண்மையிலிருந்து அதிகாலை
நகரத்து மக்கள்
மனதை கைவிட்டுச் சென்று
வாழும் கணங்கள்;
ஒரு நாளைக்கு அய்ந்து பொழுதுகள்
அதில் ஒன்றுதான்
இந்தக் காலைப்பொழுதும்

மனதுக்கு வெளியே
உறவாடிக் கொண்டிருந்தனர்
மனதை மயக்கும் இடமான புதருள்
கொல்லப்பட்ட நகரவாசிகளில்
ஒருவர்; காலை மற்றவரும்
மற்றவர் தலையை இருவருமாக
கையில் பிடித்து தப்பிய கதை ஒருபுறம்

நகரை வனமாக்கிய புலி
நுழைந்தபின்தான்; இது நிகழ்ந்தது
என்பதும் ஒரு கதை
எப்படியாகினும்
எங்கள் நகரத்தில் அழிவு தொடர்பான
எல்லாமே நிகழ்ந்தபடி இருக்கின்றன.

இப்போது பகல்
நாகங்கள் நகரத்தில் தான் வசிக்கிறோம்
எமது நினைவுகளில்
இன்னும் புலி அலைகிறது
காட்டின் முன் வாசலில்
காலசைத்து உறங்குகிறது புலி

நகரத்தின தீராத ஓலம்
கடைசிச் சொற்களை மாற்றி
பல்லிடுக்குகளில் சிக்கிய
இறைச்சித் துண்டுகளை
சுத்தம் செய்கிறது வேறொரு மிருகம்
நமது நகரம் காடு
என்பதன் ஒத்த கருத்துச் சொல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2000.07.27

கிழக்கின் இசை நிரம்பிய கடல் அலைகளையும்
அதன் எல்லைகளையும்
எனது வாள்களின் பளபளப்பையும்
பாடிக்கடந்து சென்ற
ஒரு மொழிக்கான பயிற்சிதான் நமது முரண்

இங்கு
அழுகிச் சிதைந்த பிரேதங்களை
ஆசையோடுதின்கிறேன்.
நானும்
இருளும்
இரவுமாகி

பின் தன்னம் தனியே நானே உண்டேன்
எல்லா உயிர்களும் பிரேதமானது

பிரேதங்களை தின்னா ஓநாய்களையும்
இப்போதுதான் கண்டேன்
சிதைந்த பிரேதங்களின் துர்நாற்றம்
காற்றின் திசை முழுவதும் அலைந்து செல்கிறது

உன்னுடன் இணைதல்
உன்னுடன் முரண்படுதல்
என்ற பாடலை இசைத்தபடிதான்
எனது விடுதலையை எழுதுகிறேன்.



மறுநாளும் பசி அதிகரிக்க
நானே மீதபிரேதங்களை விரும்பி உண்டேன்
சுவையுமில்லாது போயிற்று
பிரேதங்களை பற்றி வாழ்வை
இனி எழுதமுடியாதுமாகிற்று
கனவு மனதை இழுத்துச் செல்கிறது

சுவர்களின் நிழலில்
இன்னும் இன்னும்
அதிக அதிகமான பிரேதங்கள்
வந்த வண்ணமிருந்தன காட்சியாக
நானே
விரும்பியும் சுவைத்தவண்ணமிருந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2000.10.11

அசிங்கமான கனவுகள் பற்றி
கொடிய இரவுகளில்
ஒரு கவிதை காணாமல் போயிற்று
கண்கள் சிவந்த மிருகமொன்றும்
காவலிற்கு நிற்கையில்

நெடு நாளைக்குப் பிறகு
ஓயாத நடனம்
விரகம் தீட்டிய வார்த்தை
இமை நுனியின் இருளில் தெரியாதிருந்த
அது
எல்லாக் கடவுளரையும் ஏற்று
உலர்ந்து போகிறது நிலவு

விழியின் பாலைவனத்தின் ஆழத்தில்
ஒரு பாடலின் இனிமையில் மீண்டும்
ஓயாத நடனம்;
நேற்றைய மகிழ்வையும்
இன்றைய துயரையும் இழந்தேபோயிற்று

அது நிகழாது போயிருப்பின்
இவைமுறைகேடாக நிகழ்ந்திராது
ஏன் நிகழ்ந்தது என்பதும் கேள்வியே. . !
ஆழ்மன புலம்பலில்
இதுவும் இடர்பாடுகளாய்தான் தோன்றின.

அன்று வேகமாய் நிகழ்ந்த
அச்சத்துடனும் அவசரத்துடனும்
எல்லா அனுபவங்களிலும்
பயமுறுத்தும் இரவுகளில்
மிரளாமலிக்க முடியவுமில்லை.

இப்பவும்
கனவுகளின் துரத்தல்கள் மட்டுமே
இறுதியாக எஞ்சியிருந்தன



## 2000.01.03

குலுங்கி குலுங்கி அழுது விட்டு
தனிமையாக தூங்கிவிட்டேன்
ஒரு காலையில்
ஒரு பறவையின் பாடலால்
செந் நிலம் கிளறுகிறது
கண்களை மூடிவிட்டேன்
எனது
ஓவியங்களின் வர்ணங்களிலும்,
ஒரு பனித்துளி சுற்றியலைகிறது
மெல்லிய உனது பார்வையும்
மனதை கீறி விறாண்டுகிறது
நீயும்; எவ்வளவு நேரமாய்
மல்லிகைக் கொடிகளடர்ந்த
நிழல்வாகையடியில் தனித்து நிற்பாய்
உனது உடலின் கால்பகுதியில்
ஆறாது ஊனம் வடியும் காயத்தோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2

தெளிவற்று
ஒழுங்கற்று எழுப்பிக் கொண்டிருக்கும்
ஓசைகளின் நடுவிலும்
சிறுசிறு பறவைகளைப் பாடச் சொல்லி
ஒளிக்கீற்றாய் மனமெங்கும் பாய்ந்து
அந்த நதியின் குளிரையும்
உனது உள்ளங்கையிலிருந்து
எவ்வாறு உன்னால் பிரித்துவிடமுடியும்

எனது நிலத்தை
அசைத்துக் கொண்டிருக்கும் உனது
பலம்
எனது
நிழல்களோடு போராடிக் கொண்டே
வெற்றிகொண்டதாய் நினைக்கையில்
எளிமையான மென்மொழிகள்
தொடுக்கும் போர்
ஒரு கொடூரமான நாளில்
வெளிச்சத்தின் அருகே
மெல்லிய பனித்துளியாய் விடும்
அப்போ
இருளிலேயே சூழ்ந்தனர் படையினர்
இனி எதுவும் கிட்டாது
முன்னர் அமைதியாய் இருந்த
அழகிய கிராமத்தின் அழகையும்
விட்டு விட்டு எங்கோ போகிறோம்



## 2000.08.12

நான் பார்க்கும் ஒவ்வொரு பொருளிலும்
இனம் புரியாத இருள் கோளங்கள்
இறங்கிக் கொண்டிருக்கின்றது . . .
ஒரு பித்துப் பிடித்தவனாய்
திசைகள் தெரியாமல் அங்கும் இங்குமாக
அலைந்து திரிகிறேன்

உருளும் பூகோளத்தில்
என்கேள்விகளும் மூர்க்கமாகமுட்டி
விடை தெளிவில்லாமல்
திரும்பிவந்து என்னில்தான் மோதுகிறது

உயிர் இருக்கிறதா இல்லையா. . ?
இதைக்கூட என்னால் தீர்மானிக்க முடியாது
நடுச்சாமம் எழுந்து படுத்தபாயில்
கால் மடித்துக் குந்துகிறேன்.

இன்னும் விடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2

பூமி சுழல்கிறதோ. . . இல்லையோ. . .
சிந்தனைக்கிரகம் காற்றை துளைத்து
நீரில் விழுந்து
சூரியனைத் தொட்டு
பகுத்தறிவுக்குள் சிறைப்படாது
எங்கோ செல்கிறது.

நேற்று இருந்த நானோ
சில நிமிடங்களுக்கு முன்னிருந்த நானோ
தற்போது இல்லை.
பழையது ஒவ்வொன்றிலும்
ஒவ்வொரு புதிது அமர்ந்து செல்கிறது.

மரணமில்லையானால்
என்னை வெறுத்த இந்த
காட்டு மிராண்டி வாழ்க்கை
எங்கு கொண்டு புதைப்பேன்

மரணமே எப்படியாவது என்னிடமும் வா

வாழ்க்கையின் சொர்க்கத்து மடியில்
உறங்கிக் கொண்டிருந்த நான் எழுந்து
மரணத்தின் நுனி நூலில்
என்னை தொங்கவைத்திருக்கிறேன்.



## 2000.06.20

உன் மீது அளவற்ற
அன்பை வைத்திருந்தேன்
அது காற்றில் நழுவவிட்ட
ஒரு பட்டத்தைப் போன்று
உன் உருவவையும் வரைந்தது.

பின்
நான் மயங்கி கணம் ஒன்றில்
ஞாபகத் தீபத்தில் உருகி
கனவின் வாயிலில் இடறி
காத்துக் கிடந்தேன்.

நம் மனதுகளின் உறவுகளில்
வேதனை தொடுத்து
துடிக்காத இரவுகளேயில்லை.

நீ வருவதாகச் சொன்னாய்
அந்த வாகை மரத்தடிக்கு.

என் ஆன்மாவின் புதைந்த உன்னையும்
நீ வராமல் விடிந்து போன
இரவின் துயரங்களையும்
நான் எப்படிச் சொல்ல ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2000.11.02

சொல்ல வேண்டியதை முழுமையாக
உன்னிடமும் நான்,
சொல்லித்தானே ஆகவும் வேண்டும்.

கொலைவெறி கொண்டு அடங்காத அவன்
என்னையும் ஒரு சில பொழுதுகளில்
கொன்றே போடுவான்
இன்னும் வெளிப்படையாகச் சொல்லின்
துப்பாக்கிகளும்
அவனது படைகளும்
அதிக அதிகமாக ரத்தவாந்தியே போடுகின்றன.

எனக்கு நன்கு தெரியும்
நடந்தவைகள் பற்றி
நீ இன்னும் உயிரோடுமில்லை
இருப்பினும்
சொல்ல வேண்டியதை அவகாசமின்றி
சொல்லித்தானே ஆகவும் வேண்டும்.

நான் இழக்கவிருக்கும் உயிர் பற்றி
சற்றும் கலங்கிக் கொள்ளவில்லை
எல்லாவற்றிற்கும் காலமே போதுமானது

அகவெளியின் மகிழ்வில் கொடிய தனிமையும்
இறுகி உறைந்த இருள் குமுறும்
வேற்று நிகழ்துயரும்
மீழ. . .
நான் இதிலிருந்து மீழ்வதாயினும்
ஒரு தடவை உயிர்; மனப்பாறையில்
வீழ்ந்து துயருடன் மிதக்கத்தான் போகிறது.

இன்று
திடீர் சிதைவில் மிதக்கும் கனவின் ஓசை
ஒரு சிற்றோடையாக வளர்ந்து
ஒரு ஓவியக் கீற்றாக மாறலாம்.

இனியென் கனவின் வெளிப்பாட்டுக்கு
உருவமுமில்லையே; என்ன செய்ய.



2009.11.22

நானும் நிலமற்றவன்
நான் உறங்க வீடற்றவன்
கூடிப்பேச மொழிகளற்றவன்
காற்றின் இன்னிசையில்
செவிகளை இழந்தவன்.

அலைந்து திரியும் பறவைகளின்
சிறகினிலும்
எனது இனிய வாழ்வையும்
தொலைத்துவிட்டவன்.

இனி
இறையடி நோக்கிய பயணமுமாகிற்று
வாழ்வும், இப்படி
பல தடவைளும் நடந்து விட்டது.

இந்த இடத்தில் நான்
நான் அவனை சந்தித்தேன்.

வாழ்வு கவிழ்ந்த சோகம்
வறுமை எரிந்த வயிறு
உறவு வெறுத்த தனிமை
இந்த இடத்திலேயே
தனிமையே, வறுமையை
சோகத்தை இழந்தேன்.
கண்ணீரைத் துடைத்தேன்.

கொடியதான வாழ்வை விட
அனுபவிக்காத சுகத்தைவிட
ஒரு பூரண சுகம்
அவனிடமிருப்பதாய் தெரிந்தது.

என் ஆத்மாவின்
அடி நிலத்தைக் கிளறிக் கிளறி புன்னகைத்தான்

வைகறையை தொழுதேன்
ஆத்மாவை சந்தோஷத்தில் பறக்கவிட்டேன்
சொற்கம் காலடியிலானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் சொன்னான்
"என்னை விட உன் அவளின் அழகை விட
ஒரு இரவின் மௌனத்தை
ஒரு பறவையின் பாடலை
ஒரு நதியின் சங்கீதத்தை ரசித்துக் கொள்"

நான் மௌனியாகி
அவனையே ரசித்துக் கொண்டிருந்தேன்

இத்தனைக்குள்ளும்
இரவு முடிந்துபோனது
உயிர் பெரு மூச்சு விட்டது.



# புலி பாய்ந்த போது இரவுகள் கோடையில் அலைந்தன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுபான்மைக் கதையாடல்
## Minority Discourse

இனம், தேசம் போன்ற சொற்கள் அறிமுகமாகி அவைகளின் அடிப்படையில் பிரதிகளை வாசிக்கும் ஒரு தொகை நிறுவனங்களும், நபர்களும் இருப்பதை இதுவரை காண்கிறேன்.

இந்த சொற்கள் உலவும் எழுத்துச் சூழலில்தான் சிறுபான்மைக் கதையாடல் என்கின்ற சொல்லை முன்னிறுத்தி செயலாற்ற விளைகிறது என்னுடைய இப்பிரதி. உலகில் மிக அண்மைக்காலத்தியதாய் இருக்கும் இந்த சொல்வகை மாதிரி தனக்குள் கொண்டிருப்பதாக கருதும் அரசியல் தன்மையின் காரணமாகவே என்னால் அது பயன்படுத்தப்படுகிறது. இன்றுவரையானதும் ஒருபடித்தானதாகவும் கருதப்படும் வரலாற்றிலிருந்து துரத்தப்பட்ட, தப்பியோடிய மிச்சங்களின் அரசியலின் பால் பணியாற்ற முயற்சிப்பதாக இச்சொல் அறிவிப்பதால் அதை இலங்கை போன்ற இடங்களுக்கும் பயன்படுத்தும் பொருத்தப்பாட்டை உணர்ந்தே கதையாட முற்படுகிறேன்.

இனம், தேசம் போன்ற கதையாடலுக்குள் விளிக்கப்பட்டவர்களை அரசியல் முக்கியத்துவமுடைய சிறுகதையாடல் சமூகமாக முன்னிலைப்படுத்துவதற்கான வாய்ப்பைக் கொண்டிருக்கிறது. அதுமாத்திரமல்ல மேலுள்ள சொற்களின் கதையாடலால் பேசிவிட முடியாத பல அம்சங்களை துணிச்சலுடன் கதையாட முடிகிற நிலைப்பாட்டை தன்னிடம் கொண்டிருப்பதையும் அவதானிக்கிறேன்.

சமூகங்களாக கண்டுணர்ந்த விளிம்புநிலை மக்களை - இச்சொல்லாடல் ஒரு அரசியல் சமூகம் என்ற நிலைக்கு உயர்த்தி விடுவதையும் நீங்கள் அவதானிக்கலாம்.

மஜீத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேநேரம், சொந்த விதிமுறைகளையும், சூழலையும் நிறுவப் போராடும் கதையாடலாகவும், "பெரும்பான்மை" என்பதன் சிக்கல்களையும், தத்துவார்த்த நிலைப்பாடுகளின் சிதைவுகளையும் உருவாக்கி விடுவதாக இதன் மீது குற்றச்சாட்டுக்களும் முன்வைக்கப்படுவதை அவதானிக்கலாம்.

அது பெரும்பான்மைக் கதையாடலினால் முன்வைக்கப்படுகிறது என்ற புலத்திலிருந்து அவைகளைப் புறக்கணித்து விடுகிறது சிறுகதையாடல். பெரும்பான்மை அரசியல், இலக்கிய மரபுகளினிடையே அத்துமீறி நுழைந்து சிறுகதையாடலை ஒலிக்கும் மக்களின் பக்கம் புன்னகையோடு வீற்றிருக்கிறது. பெரும்பான்மைக் கதையாடலை அதற்குள் ஒளிந்திருக்கின்ற வன்முறையை அம்பலப்படுத்தியபடி தனது நிலைப்பாடுகளை முன்னிறுத்துகிறது என்ற அளவில் அதை நான் தேர்ந்திருக்கிறேன்.

காப்பாற்றப்படுகிற அரசியல் மற்றும் இலக்கிய மரபுகளைக் கலைத்துப் போடுவதுடன் பெரும்பான்மைக் கதையாடலின் கோட்பாட்டு விவாதங்களை குறுக்கீடு செய்வது என்ற வகையில் இரு பெரும் செயற்பாட்டை இது நிகழ்த்திக் கொண்டிருக்கிறது. அத்துடன் உலகளாவிய ரீதியில் கறைபடியாததும் புதிதுமான தன்மைகளையும் கொண்டிருப்பதை அவதானிக்கலாம்.

பெருங்கதையாடலின் தகர்வு
சிறுகதையாடலின் மீதான கவனாசர்ப்பு
இனி இந்தப் பிரதிக்குள் நீங்கள் நுழையலாம்.

மஜீத்

2007.07.11



எனக்கும் என் எழுத்துக்கும் முன்பாக காத்திருக்கும்
இனம் தெரியாத துப்பாக்கிகளுக்கும்
இனம் தெரியாத தோழர்களுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் கோடை

பளீரென அறையும் சிகப்பு, நாட்களைப் பின் தொடரும் குறுகுறுப்பான வாசனையுடனும் பெருக்கெடுக்கும். இரத்தம். கோடையின் நிறமாக இரத்தம். நாட்களின் மீது பரவுகிறது. இரத்தத்தாலான மரங்கள், இலைகளின் நுனியிலிருந்து விழுந்து கொண்டிருக்கும் இரத்தத்துளிகள் இரத்தம் உறைந்தது போன்ற நிலத்தில் விழுந்து சிதறிக் கொண்டிருக்கிறது. காற்று இரத்தத்தை நினைவூட்டியபடி அலைகிறது. உலர்ந்து தகிக்கும் காற்றின் இடையிடையே திட்டுத்திட்டாய் கறுத்துப்போன இரத்தத் துளிகள் மிதந்தபடி இருக்கின்றன. இது இரத்தத்தாலான கோடை என்பதால் வெயிலின் நிறம் சிகப்பு. சிகப்பால் நிறைந்திருக்கும் வானம், அறிவிப்புக்கள் ஏதுமற்று எரிவதும், அணைவது மான காற்றுவெளி. கிணறுகளிலிருந்தும், ஆறுகளிலிருந்தும் பொங்கி வருகிற இரத்தத்தில் மிதந்தபடி மீன் உடல்கள், புகைப்படங்கள், திரையரங்குகள், சித்திரங்கள், எழுத்துக்கள் எங்கும் இரத்தத்தால் அழகுபடுத்தப்பட்ட கலைப்பொருட்கள், உலகெங்கும் இந்தக்கோடை இரத்தத்தின் அழகியலை கொண்டாடியபடி கழிகிறதோ?

சடங்குகளில் பலியிடல், உணவுக்காக கொல்லுதல், விடுதலை, போராட்டம், அமைதி, சமாதானம் என்ற சமூக அக்கறைகளினால் பெருக்கெடுக்கும் இரத்தங்கள், குளிப்பதற்கு, பசியால் வாடும் மக்கள் நீருக்குப் பதிலாக குடிப்பதற்கு இரத்தம், எழுதுவதற்காக யாராவது இரத்தம் சிந்த வேண்டும். மரங்களும், நிலவொளி கசியும் பனியிரவுகளும், நதிகளும், காடுகளும், இருந்த அழகின் இடங்களுக்குப்பதிலாக இரத்தம் ஒரே இரத்தம் கலைகளில் இரத்தம் ஏன் பயன்படுத்தப்படுகின்றன? இலக்கியங்களிலும், அதை உற்பத்தி செய்வதற்கும் பின்னணியில் ஏன் இரத்தம் அதிகமாக இன்று அமைகின்றன? என்ற கேள்விகள் அதன் கவர்ச்சியையும், கொடூரத்தையும் நம்முன் விரித்துப்போடுகின்றன. வரலாற்றில் இரத்தத்தின் பங்குதான் மிக முதன்மையானது. இரத்தம் இல்லாமல் வரலாறே சாத்தியமற்றது என்னும் அளவிற்கு இரத்தம் பரவுகின்றது. இரத்தம் கசியாத இடங்களே சரித்திரத்தில் இல்லை. வரலாறு முதல் பெண்களின் கன்னித் தன்மையை சோதிக்கும் கட்டில் வரை இரத்தக் கசிவுகளும், அதன் வாசனையும், அதிர்ச்சியளித்த படியேதானிருக்கிறது. நன்மை என்ற பெயரிலும், தீமை என்ற பெயரிலும் இரத்தத்தின் பின்னால்தான் மனிதர்கள் கவர்ந்திழுக்கப்படுகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகு, புனிதம், கொடூரம், ஜனநாயகம், பாசிசம் இப்படி எதை நாம் பேசமுற்பட்டாலும் அதன் பக்கங்களில் படிந்திருக்கும் இரத்தக்கறை எல்லோருக்கும் நினைவில் வரக்கூடும். எங்கும், எதிலும் ஒரே இரத்தம்தான் அதனால் இந்த முதலாம் கோடை இரத்தத்தாலானது. இந்த முதலாம் கோடை என்ற சித்திரத்தில் இரத்தம் மாத்திரமே பல தளங்களில் வர்ணங்களாக உபயோகிக்கப்பட்டிருக்கிறது. அடிக்கிவைக்கப்பட்ட பல இன, பருவ, பால் வேறுபாடுகளையுடைய உடல்களெல்லாம் பருத்த ஆண்குறிகளிருந்து வடியும் இரத்தத்தில் மிதக்கிறது.

முஸ்லிம்களை ஏற்றிச்செல்லும் ஒரு சிறுபடகு அதில் மூழ்கியபடி இருக்கிறது. இந்தச்சித்திரத்தை மூன்று இரவுகளாகப் பிரித்து எழுத்துக்களாக மாற்றியிருக்கிறேன். அதை இனி வாசிக்கலாம்.

தமிழர்களாலும், சிங்களவர்களாலும், கவர்ந்து இழுக்கப்பட்டு ரசிக்கப்பட்ட முஸ்லிகளுடைய இரத்தத்தைப்பற்றி பேசுகிற சித்திரம் அது என்பதை நீங்கள் வாசிக்கும் போது நினைவில் வைத்திருப்பது பொருள் விளக்கத்திற்கு இலகுவாக இருக்கும்.



## இரவு – 01

குகையிருட்டில் பதுங்கியிருந்த புலிகள்
தெருக்களில் நடமாடத் தொடங்கின
வீதிகளில் உலவுவதன் பயங்கரம்
ஒரு வதந்திபோல பரவி,
ஊரெங்கும் அதிர்ச்சியாக மிஞ்சியது
மஞ்சளாலும்,
கறுப்பாலும் ஆன உடல் வர்ணங்கள்
நீண்டு வரைந்து கிடக்கும் வால்
வேட்டைப் பற்கள் போன்ற
திடீர் ஆபத்துக்கள்
கனவுகளை கலைத்தபடியிருக்கின்றன.
தெருக்களுக்கு எந்தத் தேவையின் நிமித்தமும்
செல்ல முடியாத அவலம்
பகல்களையும் இரவாக்கியிருந்தது.
அவளுடைய கண்களிலிருந்த
புலிகள்தான் தப்பித்து வந்துவிட்டதாக
ரகசியமாக நினைத்துக் கொண்டேன்.
தமது பொம்மைகள் எழுந்து ஓடிவிட்டதாக
குழந்தைகள் நினைத்திருக்கக்கூடும்.
இப்படி ஒவ்வொருத்தரிடமும்
ஒவ்வொரு வகைப் புலிகள்
நிரம்பிக் கொண்டிருந்தன.
துப்பாக்கிகளும், புலிகளும்
உடைத்துக்கொண்டு வீட்டுக்குள் பாயாது
என்ற நம்பிக்கையில்
தொலைக்காட்சிப் பெட்டிகளோடு
மிக நெருக்கமாக இருக்கிறேன்
இரத்தத்தின் வாடை
தெருக்களிலிருந்து தப்பித்து
ஜன்னல்களின் வழியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடுகளுக்குள் நுழைந்தபடியிருக்கிறது.
பகலுக்கும் இரவைப்போன்ற நிலவரம்
சதை நடுங்கும் பீதி
மிகப் பெரிய நிசப்தம் பகலை மூடியிருந்தது.
குகைகளிலிருந்து வெளியேறிய
விதம் விதமான புலிகள்
சிறுத்தைகள்
பல ஆண்டுகளாக நீளும் இந்த இரவில்
இரவு போன்ற கொடூரமான பீதியில்
இடையிடையே
குறிக்கப்படாத பல சந்தர்ப்பங்களில்
வீடுகளுக்குள்ளும் புலிகள் பாய்ந்த கதைகளுண்டு
வரலாற்றின் மூலை முடுக்கெல்லாம்
நீண்டு வளர்ந்திதுருக்கும் வாலை மாத்திரமே
புலிகள் எங்களுக்காக விட்டுவைத்திருக்கின்றன.
சிலர் பிடித்தபடியும்
சிலர் விட்டுவிடுவதுபற்றியும்
நினைத்தபடி இருக்கவும் அவர்களை வாழ்க்கை
அனுமதிக்கின்றது.



## இரவு – 02

தெருக்களைக் கண்காணிப்பது
புலிகளென்றால்
வீடுகளையும்,
வாழ்வின் அந்தரங்கங்களையும்
சோதித்தபடி சிங்கங்கள் குடியிருக்கின்றன.
வானொலிப் பெட்டிகள்,
தொலைக்காட்சிப் பெட்டிகள்,
எல்லாவற்றையும் உடைத்துக்கொண்டு
பாய்ந்து வந்த சிங்கங்கள்
மூளை வெளிகளையும் கைப்பற்ற
முயன்றபடி இருக்கின்றன.
கண்களிலிருந்தும்,
நாவுகளிலிருந்தும்
சித்திரங்களிலிருந்தும்
எதிர்பாராத நேரங்களில்
கர்ஜித்தபடி பாய்ந்த
சிங்கங்கள் அச்சுறுத்துகின்றன.
சொற்களை கடித்துக் குதறும்போது
அதன் கடைவாயிலிருந்த
கசியும் இரத்தத்துளிகள்
கோடையை நனைக்கின்றது
எனது வெளியை
பங்கு போட்டு
சிங்கங்களும், புலிகளும்
பகிர்ந்து கொண்டன.
இரண்டின் வால்களையும்
முடிந்து விட்ட எவனோ
எனது இடத்தின் மீது நிரந்தரமான
காயத்தை ஆரம்பித்து வைத்தான்
அதிலிருந்து வடியும் இரத்தம்
நிரந்தரமானது என அடிக்குறிப்பும்
எழுதி வைத்துவிட்டான்.
எனது காயத்திலிருந்து வடியும் இரத்தத்துளிகள்
விழும் இடமெல்லாம் இனி எனது வெளிதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரவு – 03

உடல்களோடு
உரையாட எத்தனிக்கின்றான் ஒரு சிறுவன்
இரத்தத்தில் தோய்ந்த
அந்தச் சித்திரத்தில்
புதிய வர்ணங்களை
பெண்ணொருத்தி பூசிக் கொண்டிருக்கிறாள்
இந்த இரு நிகழ்வுகளுக்காகவும்
இந்த இரவு முக்கியமானது
காவலுக்கு நிற்கும்
மிருகங்களுக்கு இடையே
அவர்கள் நடமாடிக்கொண்டிருக்கிறார்கள்
சித்திரத்துடன்
அவர்கள் உரையாடுகிறார்கள்
மிகத் தொலைவிலும்,
மிருகங்களுக்கு கேட்காதபடியும் அவர்களுடைய
உரையாடல் அமைவதால்
தெளிவாக நம்மால் கேட்கமுடியாதுள்ளது.
பதட்டமும், அச்சம் சார்ந்த வர்ணமும்
சித்திரத்தின் மேற்பரப்பில் படிகிறது
சுவரில் இருக்கும்
அவர்களது வர்ணங்கள்
வெகுளித்தனமாய் இருக்கிறது.
அவர்களின் பின்புறத்திலிருந்து
பாம்புகள் வெளிக்கிளம்பின
சுவரில் நிரம்பின
அவர்களின் உரையாடல்களும்
முடிவுற்றது.
பாம்புகளை அவசர அவசரமாக
தின்னும் ராட்சதப் பறவையொன்று
சித்திரத்தில் இப்போது
தோன்றியிருக்கிறது
அது எங்கிருந்து வந்தது ?



## இரண்டாம் கோடை

சற்று முன்புதான் மழை நின்றிருந்தது. வெயிலின் நினைவு நிலத்தில் இருக்குமளவு இந்தமழை நீடித்திருந்தது ஆற்றின் ஒருபகுதியில் இலேசான ஈரம் இருப்பது போன்று உணரமுடிகிறது . ஆனால் மழையின் நிறம் மட்டும் இரத்தச் சிகப்பிலிருந்து மாறவில்லை இரத்தத்தின் அழகை சிதைக்காமல் சற்று முன்புதான் மழை விடைபெற்றுச் சென்றது என முடிவடைகிறது இரண்டாம் கோடை. கோடையில் மழையின் வரவுக்கான முக்கியத்துவத்தை நீங்கள் உணருவீர்கள். அதன் பிடியிலிருந்து பொழுதுகளைக் கைப்பற்ற மழையால் முடியவில்லை காகிதத் தோணிகளும் பூக்களும் தனது பாட்டுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெறுமையை வெளிப்படுத்தின சித்திரத்தில் நிறம் கலங்கவில்லை துண்டாடப்பட்ட உடல்கள் மிதப்பதற்கு ஏதுவாய் மழை இருந்ததாய் அவர்கள் பேசிக்கொண்டனர். மழையை நினைவுறுத்தும் பாடல்களை அவர்கள் பாடத்தொடங்கினர்.



## இரவு – 04

அந்த மண்டபத்தில்
ஒரு பரபரப்பு
வளர்ந்து கொண்டிருந்தது
யாரோ வருவதற்காக அறிகுறியும்
எவருக்காகவோ காத்திருக்கும் அவஸ்தைகளுமாய்
மண்டபத்தின் உட்புறம்
வறண்டு கிடந்தது.
ஒவ்வொருத்தராய் எழுந்து
உரையாற்றி
தங்களது ஒத்திகையை
சரிபார்த்துக் கொண்டிருந்தனர்.
சித்திரத்தை திருத்தியமைப்பது தொடர்பில்
இவர்களின் உரைகள்
உரத்து எதிரொலித்த படி இருக்கின்றன.
குறுக்கிட்ட ஒருவன்
இரத்தத்தின் அழகும்
அதன் போலித்தன்மையும் பற்றி
கூக்குரலிட்டபடி இருந்தான்.
நேரம் நெருங்கிவிட்டது
இனி அவன் வரக்கூடுமென்ற
அவசாரம்
ஜன்னல்களை மூடுவதிலும்
கண்களின் நிறமாற்றத்திலும்
அறிவித்தலாய் அமைந்தது.
மண்டபத்தின் உட்புறக் காற்று
கோடையை மனனஞ்செய்தபடி இருந்தது.
இதோ என்ற அறிவிப்பாளனின்
சத்தத்தை தாண்டி
மக்களின் ஆரவாரம் பெருக்கெடுத்தது.
வரவேண்டியவர் இறந்துவிட்டது தெரிந்தும்,
அவருக்காக அவர்கள் காத்திருந்ததை
அந்த இரவு பாடிக் கொண்டிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரவு – 05

எல்லோரையும் போல்
அவள் குளிர்காலத்தை
தேர்ந்தெடுப்பதில்லை
குளிரும்
கதகதப்பான கூதலும்
அவளை வெறுப்பேற்றுகின்றன
ஈரத்தை எப்போதும்
அவள் கண்ணீரோடுதான்
ஒத்துப் பார்க்கிறாள்.
அவளிடமிருந்து தப்பித்த
அனேகம் பறவைகள்
மழைக்காலத்தின் குறியீடுகளுக்குள் வந்துவிடுகின்றன.
துயரத்தின் நீண்ட வரலாற்றை
மழைக்காலத்துக்குள்ளிருந்து
கண்டெடுக்கின்றாள்
குளிர் காலத்தின் போதாமையை
சிறுநீர்கழித்தபடி தவிர்க்கிறாள்.
சோலைகளையும்
கிளிகளையும்
அவள் மழைக்காலத்துக்குரியதாகவே
கருதுகின்றாள்.
நெருப்பைப்போல
எரியத்தொடங்கும்
கோடைகளில் உரசிக்கொண்டு
திரிவதை
சிபாரிசு செய்கிறாள்.
இரத்தத்தின் அழகியலுக்கு மாற்றாக
வியர்வையை முன்மொழிகிறாள்.
கோடையை
எதிர்ப்பின் அடையாளமாக
கருதுகிறாள்.

மழைக்காலத்தின் மயக்கத்திலிருந்தும்
காதலின் மாயத்திலிருந்தும்
பெண்களை விடுவிப்பதுபற்றிய
கோடைக்கதைகளை பரப்புகிறாள்
கோடை வசீகரமானது
வரலாற்றின் ஆழத்தில்
வறட்சியுற்றுக் கிடப்பதாய் சொல்லும்



பெண்குறியை கோடையுடன்
வெளிப்படுத்துகிறாள்
கோடையில் மிஞ்சும்
தண்ணீரின் அழகை
உடலின் காலத்துக்குள்
கலைத்துப் போடுகிறாள்
எல்லோரையும் போலில்லாது
அவள் தனது கோடையை
மிக நுட்பமாக ஆய்கிறாள்
இரத்தத்திற்கும்
கோடைக்கும்
இடையிலிலுள்ள எல்லைகளை
தகர்த்தெறிவது தொடர்பில்
எனக்குதவ விரும்புகிறாள்.
அவளது பறவைகளை அனுப்பி
எனக்குள் வெயிலை நிறைக்கிறாள்
கண்களில் வெயிலோடுவந்து
சொற்களில் வெயிலாகப்பேசி
மழைக்காலத்திலிருந்த
என்னை காப்பாற்றுகிறாள்
வெள்ளம் பற்றிய அச்சத்தை
ஒவ்வொரு கோடையிலும்
எழுதிவைத்துப் போகிறாள்
எல்லோரையும் போலில்லாது
அவள் மழைக்காலத்துள் மூழ்கியது பற்றி
மூன்று கோடைகளுக்குப்பிறகுதான்
பேசத் தொடங்கியிருக்கிறாள்
சித்திரத்திலிருந்த
இரத்தத்துளிகள் வெயிலாகமாறின
இரத்தத்தின் வெயில் துளிகள்
கோடைச் சித்திரங்கள்
அவளை நம்பியே
தனது மழைத்துளிகளை
உதறிக்கொண்டிருக்கின்றன.
அவளிடமிருந்து
புறப்பட்ட பறவைகள்
இரத்தமாகவும்
கோடையாகவும்
எனக்குள் பறக்கத் தொடங்குகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரவு – 06

அவள் குறுக்கிடும்
இந்தச் சித்திரத்தில்
கோரப்பற்களுடன்
முதலைகள் காத்திருக்கின்றன
வாலை அசைத்தபடி
மூடாத வாய்களுடனும்
தீராத வெறிகளுடனும்
பசித்திருக்கின்றன.
சித்திரத்துக்குள்
அகப்பட்டுக்கிடக்கும்
ஒரு தேசம்
தற்கொலைக்குத் தயாராகிக்
கொண்டிருக்கிறது
மூச்சுமுட்டியபடி.
உடல்கள் மோதியபடி அலைகின்றன
கோடையில் வெப்பத்தில்
சொற்கள் வற்றிவிட்டன.
தசைகள் உக்கிவிட்டன.
வெளியே வலியில்
முடக்கப்பட்ட உடல்களும்
திணறியபடி மார்பகங்களைத்
தேடும் குழந்தைகளுமாய்
சித்திரம்
மாறத்தொடங்கிவிட்டது.
குழந்தைகள் பிசாசுகளை
அழைக்கும்படி கேட்கிறார்கள்
எங்களிடமுள்ள பழங்கதையொன்றில்
பிசாசுகள் இரத்தம் குடிக்கும்
என்ற செய்தி அவர்களை
நம்பிக்கையூட்டியிருக்கக் கூடும்
பிசாசுகள் வருவதாக நான் அறிவித்தேன்
குழந்தைகள் மீட்பர் வருவதாக
குதூகலப்பட்டனர்.
நான் பிசாசு என்றுதான் அறிவித்தேன்
அந்தச் சொல்லுக்கான
இன்றைய நாளின் பொருளை
அவர்கள் அறியாதிருக்கக்கூடும்
எனினும்
அவர்களின் சந்தோசத்தை
கலைக்க விரும்பவில்லை.



## மூன்றாம் கோடை

கோடையை விரும்பும் பெண்களை அவன் தேடித்தேடி அழித்துக் கொண்டிருந்தான் சித்திரம் இயல்பு நிலையை இழந்திருந்தது. பெண் உடல்களை ருசித்துக் கடித்துத்தின்றபடி சிலரும் தீயிட்டு எரித்தபடி சிலருமாய் சித்திரம் முழுவதும் சிதறிக்கொண்டிருந்தன பெண்ணுடல்கள். ஒவ்வொருத்தரின் கைகளிலும் ஒவ்வொரு பாகமாய் பெண்கள் அழிக்கப்பட்டுக் கொண்டிருந்தவர். கவிதை எழுதும் ஒரு பெண்மட்டும் பாடி பெண்களைக் கொல்பவர்களை உற்சாகப்படுத்திக் கொண்டிருந்தாள். அவள் பொந்துகளையும், குகைகளையும் உருவாக்கி அதற்குள் கொலைகாரர்களை பாதுகாத்துக்கொண்டிருந்தாள் அவர்களுக்கு பாலூட்டியபடி அவள் பாடிக்கொண்டிருந்தாள் இடையிடையே நடனமாடவும் அவள் மறந்ததில்லை பெண்களெல்லாம் அழிக்கப்பட்டபின் (அவள்தவிர) கொலைகாரர்கள் கடந்து செல்ல எத்தனித்த ஒரு ஆற்றில் அழகிய மீன்கள் ஓடிக்கொண்டிருந்தன. வெறிபிடித்த அவள், உரத்துக் கத்தினாள் இது மீன்களல்ல, நாம் அழித்தொழித்த பெண்களின் கண்கள் அவைகளைப் பிடியுங்கள். கொல்லுங்கள் உரத்துக் கத்தத் தொடங்கினாள் அவளுடைய பாடல் அவளைவிட்டு வெருண்டோடியது. கொலைகாரர்கள் சித்திரத்தை விட்டு வெளியேறியதற்காக கடவுளுக்கு அவளையும் பலியிட்டனர். சித்திரத்திலிருந்து ஒரு ஆறு கண்களை மீன்களாகக் கொண்டு நகரத் தொடங்கியது. அதன் ஓரங்களில் பலியிடப்பட்ட பெண் புல்லாக முளைக்கத்தொடங்கினாள். சிங்கங்களும், புலிகளும் நீரருந்த அந்த ஆற்றங்கரைக்கு வரத்தொடங்கின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரவு – 07

எந்தக் காரணமுமற்று
வானம் கரையத் தொடங்குகிறது
தானாகவே
பூக்களும் நிலவும்
வளரத்தொடங்குகின்றன
இப்போதெல்லாம்
மழைக்காலம் வருவதேயில்லை
வீட்டுக்குள்ளே வசிக்கும்
இந்த ஊரில்
பெண்ணின் வாசனையுமில்லை
கவிதை
இசை
போன்ற எவையும் முக்கியமற்று கழிந்தன
மரங்கள் சிரிப்பதில்லை
தொல்பொருட்காட்சியகத்தில்
மாத்திரம்தான்
பெண் என்ற சொல்லும் இருக்கிறது.
வழி தப்ப உதவும்
கூந்தலும் எமக்கில்லை
மழைக்காலம் அருவருப்பாகவும்,
கூதல் ஒரு வியாதியாகவும்
எம்மை அச்சமூட்டுகின்றன
எனக்குள்ளிருந்த பறவை
தூக்கிட்டுக்கொண்டது.
எழுத்துக்கள் புழுக்களாகி
என்னை மூடிக்கொள்கின்றன
எனது பறவையை
பாட அழைக்கிறேன்
எனது சொற்கள்
துள்ளிச் சென்று
அவர்களின் கண்கள் மீன்களான
ஆற்றில் குதித்துச்
சாகின்றன.



## இரவு – 08

எனது சகோதரனை
புலி கொன்றது
எனது நண்பனை
சிங்கம் குதறியது
எனது பெண்களை
புலியும் சிங்கமும்
கைகோர்த்தபடி கொன்றன
அழிக்கப்பட்ட எமது ஊர்களிலிருந்து
இரத்தமும்
உடல்களும்
மீண்டு கொண்டிருக்கின்றன
பூட்டப்பட்ட அறையைப் போல
பாதுகாப்பாக எதுவுமில்லை
மடுக்களை வெட்டி
நாங்களாகவே விழுந்துவிட விரும்புகிறோம்
எங்களது
மூளைகளுக்குள்ளிருந்தது
உங்களைத் துரத்தியடித்தோம்
நிலங்களையும்
உயிர்களையும்
பறித்துக்கொண்றீர்கள்.
என்று சுவரைவிட்டு
இந்தச் சித்திரம் கலையத் தொடங்கும்.
உங்களது கற்பனையை
வரைவதற்கு
எமது சுவர்கள் பொருத்தமற்றது
எமது நிறங்களையும்
எமது சித்திரங்களையும்
எமது குழந்தைகள் வரைவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரவு – 09

சித்திரத்தை வரைவதற்கு
ஆரம்பிக்கிறார்கள்
காற்றை ஊடறுத்து
சிறு இசை நடந்துவருகிறது
வாகனங்கள்
இரைந்தபடி புறப்பட்டுச் செல்கின்றன
(சுவரில் இவை பதிகின்றன)
அணியணியாய்
தொழுகைக்காக திரள்கின்ற மக்களும்
அந்த அமைதியும்
பேரிரைச்சல்களையும்
ஓலங்களையும்
சித்திரத்தை விட்டு அப்புறப்படுத்துகிறது.
புதிய வர்ணங்களாலும்,
புதிய நறுமணங்களாலும்,
சுவரெங்கும் கோடுகள்
சுழித்து ஓடத் தொடங்குகின்றன.
ஆற்றில் நீந்தும் கண்கள்
சுவரின் மேற்பரப்பில்
நீந்தியபடி வாலை அசைக்கின்றன.
பேராவேசத்துடன் சுழன்றுவந்த
புயல்,
மரக்கிளைகளுக்குள்
பதுங்கிக் கொள்கின்றது.
வரலாற்றில் தொலைந்ததாகச் சொன்ன
எமது சொற்களை
கண்டெடுக்கப் புறப்பட்டவர்கள்
திடீரெனத் தோன்றி
சித்திரத்துக்குள் நடுவே இருந்தபடி
உரையாற்றவும்,



சொற்பொழிவாற்றவும்
தொடங்கிவிட்டனர்.
தமது சித்திரத்துக்கான
பெயரை முஸ்லிம் தேசம்
என அறிவிக்கின்றனர்.
சித்திரத்துக்கு வெளியே
புலியும்
சிங்கமும்
வெறிகொண்டபடி
பாய்ந்து கொண்டிருக்கின்றன.
உரையாடல் முடிவுறும்
போதுதான்
சித்திரத்திற்குள் அவர்களால்
நுழைய முடியும் என
சித்திரத்திற்கு காவலுக்கு
நிற்கும் எனது கவிதை
எச்சரிக்கிறது.
சற்றுப்பின்வாங்கி
சித்திரத்துக்குள் பாய்வதற்கு
தயாராகிக் கொண்டிருக்கும்
புலிக்கும்
சிங்கத்துக்கும்
ஒரேயொரு கவலை
எனது கவிதை பற்றியதுதான்
உரையாடல்
தொடர்கிறது
சித்திரம் மாறிக்
கொண்டேயிருக்கிறது
மெல்ல மெல்ல
அச்சம் மறையத் தொடங்கியிருக்கிறது
குழந்தைகளும் சித்திரத்துக்குள்
வந்துவிட்டனர்.
அவர்களின் குழந்தைகள்
வரையத் தொடங்குகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்காம் கோடை

மழை வலுக்கத் தொடங்கி நீள்கிறது வருடங்களாக நீள்கிறது கோடையை விரும்புபவர்களை அச்சமூட்டாதபடி மழை இறங்கிக்கொண்டேயிருக்கிறது வெயிலின் நிறமோ, சூடோ சிறிதும் சிதையவில்லை சித்திரம் கலக்கங்கள் எதுவுமின்றி பளிச்செண காட்சியளிக்கின்றது தலைமுறை தலைமுறையாய் பணி கையேற்கப்படுகிறது எவரையும் மழை நனைக்கவில்லை பெருக்கெடுக்கும் வெள்ளம் மூழ்கடிக்கவில்லை குளிரில் ஒடுங்கி குழந்தைகளோ பெண்களோ இறக்கவில்லை எதற்கும் பாதுகாப்பாய் சித்திரத்தை வரைய கற்றுக் கொண்டோம். எமது நிறங்களும் எமது சொற்களும்

மலைகளை சிதறடித்து வீடுகளைப் பாதுகாக்கத் தொடங்கிவிட்டது. மழையினுள்ளும் எமது கோடையைப் பாதுகாக்க சித்திரங்கள் உதவுகின்றன. எமது குழந்தைகள் கற்றுக்கொண்டனர் கோடைக்குள் இருந்துகொண்டு மழையை பரிகசிக்கின்றனர் மழையில் கரையும் இரத்தத்தைக் கண்டு புலியும் சிங்கமும் அதிர்ச்சியடைத் தொடங்கிவிட்டன ஒரு பறவை தனது இறக்கைகளி லொன்றால் வரையும் சித்திரம் வலிய மிருகங்களை கலங்கடிக்கிறது. அவைகள் தங்களுக்குள்ளும் தாங்களாகவும் சண்டையிட்டுக் கொள்கின்றன. ஒரு வெறும் சிறகு எங்கள் கைகளில் ஆயுதமாக நிமிர்ந்து நிற்கிறது.



முன்னெச்சரிக்கையாய்
யுத்தத்துக்கு
சொற்கள் புறப்பட்டுச்
சென்றுவிட்டன
அவர்களின்
கொலைவெறிக்கு முன்பாக
ஆக்கிரமிப்புக்கு முன்பாக
கொடூரங்களுக்கு முன்பாக
அச்சுறுத்தலாக
வெடிக்கத்தொடங்கிவிட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரவு – 10

தூரவிலகி துழாவி
முகத்தில் வேறு முகமொன்றைப் பதித்து
மயிர்சிலிர்க்க பாழ்கிணற்றடியில்
நனைந்து கொண்டிருக்கிறது
0560 ம் ஆண்டு

அன்று பகலில் புறப்படத்தயாராகும்
அந்த வண்டியின் ஒரு திசையில் நீயும்,
பல நூற்றாண்டுகளாய் காத்திருக்க,
என்னைக்குறுக்கிட்டுச் செல்லும்
பறவைகளில் ஒன்றிடம்
முன்னர் வாழ்ந்த மக்களின் தேசியப்பாடலை
பாடச்சொல்லிக் கேட்பேன்.

அது
பல பழம் பெரும் செய்திகளைப் பாடும்.
அந்த நதியின் சிறு அலைகளுக்குள்ளும்
நட்சத்திரங்கள் மிதந்து சென்றன.
ஒற்றைப் பயணத்தில்
உயிர் பெற்ற கல்லொன்றும் இறங்கிவிட்டது.
ஆன்ம நெடுங் கோடையின் வெளியில்
உள்ளியக்க மர்மத்தில் கல்லொன்றுமிருந்தது
அது விசம் உறுஞ்சும் கல்லாக

அக்கல்லுள் ஒரு கணத்தில்
உயிரின் இடைவிடாத்துடிப்பில் நுழையும்
ஒரு நதியின் சிறு அலைகளுக்குள்
ஒரு நட்சத்திரம் மிதந்து செல்கிறது
ஒரு நிலவு காற்றின் சுழியில் சிக்கி நெகிழ்ந்து செல்கிறது
எழுதப்பட்ட சொற்களின் வகைகளும்
ஒரு பொட்டுப்பூச்சியாய்
கனவுகளற்ற விழிகளுக்குள் விழுந்து காட்சியானதும்
0999ம் ஆண்டில்
பாறைகள் கரைந்து
நதியாய் கசிந்துவடிகின்றன.



## இரவு – 11

காரணமேதுமின்றி காற்று வீசுவதாய் நம்புவனின் முன்...
மரக்கிளையை அசைத்தேன்
ஒரு சிறு அலைக்காற்று தடவிச் செல்கிறது
பிறகொருதரம்
எனது உசுப்புதலில் பெருகிய காற்று
நிலத்திலிருந்து பிரித்து
அந்தரத்தில் தூரத்துகிறது.
ஓலமிட்டு துடித்தபடி அலையும் அவனுடைய பயணத்தை
என்னால் முடிந்தளவு அழகு படுத்துகிறேன்,
மரங்களையும், மலைகளையும்
அந்தரத்தில் புரண்டபடி சந்திப்பதற்கு
அவன்
கொள்ளும் அவஸ்தை காற்றிலிருந்து நிலத்திற்கு
மெதுவாக சரிந்து கொண்டிருக்கிறது
தெருவில் நின்ற நாயொன்று
அவன்
விழக்கூடிய இடத்தைதேடி அலைகிறது
எங்கிருந்து வந்தது
இந்த நாயென்று உண்மையில் எனக்குத்தெரியாது
அவன் நினைக்கக்கூடும்
நாயை அனுப்பிய என்னை மிகமோசமாக
காரணமேதுமின்றி
நாய் துரத்துவதாக நம்பாத பட்சத்தில்
அசைத்த கிளையின் மரம்கூட
இன்று இல்லாத நிலையிலும்
அந்தரத்திலிருந்து
அவனால் இறங்கமுடியவுமில்லை.
மண் சிவப்பாகின
பிறிதொரு இடையே வேர்முறியும் மண்ணறை
அதன் மடிபடர் நீண்டு படரும்பனியுள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓரள்ளினுள் நீயிறுகிச் சுழன்று பறந்திட
காற்றேது சொல்லினில்
தெறித்துச் சிதறிய துயரங்களெங்கெங்கோ...
அது ஒவ்வொன்றாய் ஒட்டியும்
நிரம்பிக்குவிந்து குவிந்து நிரம்பும்
நெஞ்சுள் ஒரு கூடைத்துயர்.

துயரா அது
தத்தித்தாவிச் சுழன்றெழுந்து கிளம்பி
பறபறவென சொல்லிமுடியுமுன் மேகத்திலிருந்து
ஒரு நாள் வானில் தூவிய தலைமுடி
உறையுமோரிடத்தில் நின்று சுழலும்
நிலமொட்டி நிற்காநெஞ்சு துடிக்க
கூனாகி முள்ளில் கிடக்கும் நம்பிக்கை
அதன் பின்
இரு நகமுரசிப் படபடத்து எரி உணர்வே...
நின்றெரியும் நெடுநாள் விளக்காகி
திசையற்று
கசக்கிச் சுருட்டியுன்னுள்ளங்கையில்
குறுக்குமொரு புள்ளித்துணிவு
சுள்ளென எழுந்தெரிந்து சலசலவெனப் பொழியும்
மழை இடி
மின்னல் இனி
எதிருணர் நரம்புகள் தெறிக்கும் அறுந்தறுந்து
பெருவிரலூன்றிக் குத்துமிடம் மையமென உணர
நான் நீளுவேன் எளிதாகாது

உன்னுள் உன்னைப் பிணைத்து அடுக்கடுக்காய்
ஒவ்வொன்றாய்
மொத்தமாய் வலிதாய் மறுத்து
இருகைகளும் ஒன்று சேரகோர்த்து
உனக்கென எனக்கொருவிரல் முளைக்கும்.



## இரவு – 12

நிழல்கள் பிரிந்துவந்து
படுக்கையறைப் போர்வையில் தூவிக்கிடந்தன.
கால்கள் நீட்டும் பக்கம்
திரும்பிப்போகாத கடலின் அலையொன்று
சத்தமிட்டு மாய்கிறது.

கடைசியாய்
நிலைக்கண்ணாடியில் பார்த்த உருவின்
முன் பகுதி அப்பி அழியாதிருக்க
எப்போவோ தீர்க்க முடியாத நிமிடங்களின்
தனிமையில் ஏறிஓயாது படபடத்து
விலகிச் சென்று துயரில் வரண்டு கிடக்க
வறிய கணங்களின் மர்ம இமையொன்றில்
பனித்துளி விழுவதுவும்
அண்சிறகின் ஓரங்களிலிருந்து
விலா எலும்பின் வர்ணங்கள் அழிவதுவும்
இவை பறவையின் குரலால்
பாடமுடியாதுமாகின.

ரெக்கைகள் வலிக்கும் வரை பறப்பேன்
சொண்டுகள் வலிமையானதுதான்
எனினும்
சொண்டும் எனது நிலத்தை தூக்கிச் சுமக்க,
கூடுகட்ட குஞ்சு பொரிக்க
அடர்ந்த மரங்கள் நிறைந்த காடுகளுண்டு
முட்செடிகளும், விப்பூண்டுகளும் நிறைந்த
பற்றைகளும், கடல்களும், நதிகளுமுண்டு

மழை அழகானது
போர்வைக்குள் என்னால் ஒதுங்கமுடியாது
குளிரிலும், வெயிலிலும் தூக்கம் வரத்தான் செய்கிறது
அழைக்காதே

மலரின் மெல்லிய மொழியினைப் போன்ற
அழைக்கும் குரல் வந்தடையும் போது அச்சமுறுகிறேன்
திடுக்கிடும் கனவுகளை ரெக்கைக்குள் மூடிக்கொள்கிறேன்
அழைக்காதே
உன்னிடம் வரமுடியாது
ரெக்கைகளை நீ பிடுங்கி விடுவாய் அல்லது
சிறகு இனி முளைக்காது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரவு – 13

'பனிக்காலத்து அமைதியான மரங்களை தொலைவிலிருந்த தடவும் அந்தி இளஞ்சூட்டை பதிவு செய்யம் கவிதையை எழுதுகிறவர்'

குளத்தில் விழும் பனியின் நிழல்
ஓசை எழுப்புவதாயும்,
இல்லாத ஓசையைக் கேட்கும் செவிகள்
தமக்கிருப்பதாயும்,
கற்பனித்தவாறே..
அந்த வெற்று ஒலியின் அசைவு பற்றிப் பேசி
பூச்சிகளின் குழம்பிய ஓசையில் பரவி
யாருமற்றிருக்கும்
மலைப்பள்ளத்து புல்வெளியை மறக்கச் சொன்னால்

அழகற்ற அப்பொழுதிடம் தோற்க்கிறேன்
ஆண்களை வசீகரிக்கும் சிறகுகள்
அவளுக்கிருப்பதாய் ஒருமுறையேனும் எவரும்
சொன்னதில்லை
அடர்ந்த இருளுக்குப்பின்னே
சருகுகளுக்கு நடுவிலிருந்து நாட்டுப்பாடலுடன்
கருப்புப்பனிக்கட்டி உருகியெனது
நரம்புகளுள் ஓடிக்கொண்டிருக்கிறது



குறிப்பு:

எனது காதலியைப் பற்றிச் சொல்வதானால் இப்படி தற் செயலான சிலவரிகள் போதும் வசந்தம் பரவியிருக்கும் முன்புகளில் மௌனிக்கும் வார்த்தைகளைக் கொண்டிருந்தவள் இடையிடையே இது ஒரு கவிதையென்று வலியுறுத்திக் கொண்டு, அருவியின் காட்டுப் பாடலாக பேசத்தொடங்கி விட்டாள். அவள் இறக்கும் வரைஅது ஒரு கதையென்றே எனக்குத் தெரியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரவு – 14

## பிரதி – 01

வைகறையில் தெளிவற்று
ஒழுங்கற்று
எழும்பிக் கொண்டிருக்கும் ஓசைகளுக்கு நடுவில்
சிறுபறவையைப் பாடச்சொல்லும் ஒற்றை ஒளிக்கீற்றாய்
அவை எனது நிலமாகின.

சலமேடுகளின் மீது படர்ந்து கிடக்கும் கொடிகளின் பசுமையை,
மெல்லிய முணுமுணுப்பைக் கொண்ட
பெயரற்ற அந்த நதியின் குளிரை
இதயத்திலிருந்து அகற்றமுடியாது.

அவ்வூர் கதைக்கத் தொடங்கியபிறகு
நகரங்கள் அதிர்ச்சியடைந்தன
நகரங்களில் பூத்திருந்த நாகரீகம்
மெல்ல வடிந்து கொண்டிருக்கிறது.

இப்போது நான்
ஊருக்குள் நுழைந்த இடத்துக்கு
திரும்பி வந்து நிற்கின்றேன்.
முழுமையாகச் சுற்றிப்பார்க்க முடியாது
அவ்வூரைப்பிரிய மனமற்று திரும்புகிறேன்.

பல வருடங்களாக அலைந்து திரிந்த
அவ்வூரில்
ஒரு மனிதனையாவது
முதல் முதலாக காண முடிந்தது
காண்கிறேன்
என் கேள்விக்குப் பதிலாக
புன்னகைத்து விட்டு
விரைந்து செல்கிறாள் . . .

தூரத்தில்போய் நின்று கேட்டாள்
"உனது பழைய கவிதை நான்
மறந்து விட்டதா . . . ? "

2005-06-12



## பிரதி – 02

எனது உள்ளங்காலிலிருந்து பிரிக்கமுடியாத
மலைகளை அசைத்துக் கொண்டிருக்கும்
உனது பலம்
சுதந்திரமாய் வழியும் கண்ணீரையும் உலரச் செய்துவிடாது
நீ பறித்த மண்ணை இன்னும் நேசிப்பேன்
நிழல்கள் பிரிந்து
என் மண்ணிலேயே போராடிக் கொண்டிருக்கின்றன.
காட்டுக்குள் கிடக்கும் காற்றாய். . .
புது விசை கொண்டு.
கண்களுக்குள் தூசியாய் வந்த விழுவேன்
எதிர்பாராத ஏதாவதொரு கணத்திலேனும்
நான் தோற்கடிப்பேன்.
வலிவற்றதாய் கருதும் எளிமையான போர்
ஒரு நாளில்
உனது வைகறையின் வெளிச்சத்தைப் பறிக்கும்,
அது எனது நிலம்.

சிறுகுறிப்பு:

கருஞ்சிறகுகளையுடைய பறவைகளின் பெருமூச்சு
என்னை அழைத்திருக்கவேண்டும்.
அதன் தனித்த குரல்கள் காற்றின் மாயக்குகைவழியே
இருகரைகளும் மலர்ந்த கிடக்க,
வறண்டு தூரிமணல் நதியாய் கிடந்தாய்
சில நாட்களுக்கு முன்புதான் அது வற்றியிருக்கவும் கூடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு இலையின் மரணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செப்பனிட்டு உற்பத்தி செய்த கவிதைகளல்ல மாறாக கவிதையை உயிர்க்கும் பிரதிகள் மஜீதினுடையவை

மஜீத் தனது பிரதிகளைத் தந்து எனது வாசிப்புப் பிரதியைக் கேட்டிருந்தார். அவருடைய அவசரம் வாசிப்புப் பிரதியைத் தாக்கி இயக்குமென்று அவருக்குத் தெரியும். எங்களுக்கிடையான உறவின் உயிர் நிலைப்பு அசாதாரணமானது என நான் நினைப்பதுண்டு. கவிதைச் செயற்பாட்டுக்குள் நானும் இவரும் சமகாலத்தில் இயக்கமுற தொடங்கியவர்கள். இது மேலும் ஒரு திரையற்ற வெளியை எங்களுக்குள் விரித்தது எலாம். அது ஒரு புறமிருக்க...

மஜீத் கவிதைச் செயற்ாட்டில் இயங்க ஆரம்பித்த காலம் ஈழத்தில் முக்கியத்துவம் வாய்க்கப்பெற்றது என பரவலாக ஒரு கருத்துண்டு. அக்காலம் எப்படி முக்கிய அமைப்புப் பெறுவதாக கருதுகிறார்கள்? முக்கியத்துவம் என்பதனை முன்னிறுத்த மேற்கொண்ட புனைவுகள் யாது? ஆழத்தில் மிக நுட்பமாக மாறும் சமுக அடிப்படையின் கூறுகள் எது? போன்ற கேள்விகளை சிதைப்பதினூடு எனது வாசிப்புப் பிரதியை எழுதுவதுதான் மஜீதின் பிரதிகளை உற்றுக் கவனிக்க உதவமுடியும், அதற்க்குமுன் கடந்த கால இலக்கியச்செயற்பாட்டை திசை மாற்றிய வரலாற்றை வாசிக்க வேண்டும்.

அதாவது இலங்கை என்ற ஒற்றைப் பெருந்தேசியத்தில் அய்வுற்று வன்மங் கொண்ட அதன் இயக்கத்தில் அலைக் கழிக்கப்பட்டு புறந்தள்ளப்படுகையில் வரைப்படுத்தப்பட்ட ஒற்றைக் கருத்தியலை உடைத்துக்கொண்டு பேராவேசத்துடன் வெளிக்கிளம்பிய தமிழ் தேசியம் நிறுவப் பட்டு நிலை கொண்டது. அசைவுற்று அத்தேசியம் சமுகத்தில் ஊடாடும் அரசியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் இலக்கிய இயந்திரங்களைத் தீவிரப்படுத்தின. அத்தீவிர இயங்கியலில் 80களில் தொடங்கி ஒரு வரலாற்றை எழுதி முடித்தது. அதுவே சமுகப் பொது உண்மை யாகவும், சமுக ஆன்மாவாகவும் இறுக்கமடைந்து முடிவாகி நின்றன.

அப்போதுகளில் உயிர்ப்புடன் மேலாண்மை செலுத்திய இவ்வரசியற் பிரச்சினை சமுக மையத்தை தனது விருப்புக்கு சார்பாக அசைக்கத் தொடங்கியது. ஆகவே பன்மைத் தன்மை மறுதலிக்கப்பட்டு பொதுப் புரிதலை அடைவாக நிலைநிறுத்தி நகரத் தொடங்கியிருந்தது தமிழ் தேசியம். இச்சமுக ஆன்மாவின் தடுமாற்றம், போதாமை அல்லது ஒருங்கிணைப்புக்கான வெறி முற்றாக திரட்சியுறா நிலையிலிருந்து பிற சிறுபான்மைத் தேசியத்தை குறுக்கியதுடன் செயலிழக்கச் செய்ய முயற்சித்தது. சமுகப் பரப்பின் அடையான அழிப்பை உணரத் தொடங்கியிருந்தது தமிழ் தேசியம். இச்சமுக ஆன்மாவின் தடுமாற்றம், போதாமை அல்லது ஒருங்கிணைப்புக்கான வெறி முற்றாக திரட்சியுறா நிலையிலிருந்த பிற சிறுபான்மைத் தேசியத்தை குறுக்கியதுடன் செயலிழக்கச் செய்ய முயற்சித்து. சமுகப் பரப்பின் அடையாள அழிப்பை உணரத் தொடங்கிய சிறு தேசியம் தமிழ் தேசியத்தின் இறுகிய கட்டுக்கோப்புகள்., ஒழுங்குகள் அனைத்தையும் கலைத்துப் போடுவதினூடாக தனது இயக்கத்தின் மறுக்கப்பட்ட, மறைக்கப்பட்ட, சிதைக்கப்பட்ட பகுதிகளை இணைத்து தனக்குரியதான ஒரு இயங்கு தளத்தை நிறுவியது, இது 90களின் நிகழ்வு.

இப்படி மிகக் குறுகிய கால அமைவுக்குள் பேரதிர்ச்சி தரக்கூடிய சமுக இயக்கச் சிதைவுகளை தன்னகத்தே கொண்டதுதான் ஈழத்துத் தமிழ் சிந்தனை வரலாற்றுப் பெரும் சமுகம். வேறு மாதிரி சொல்வதானால், அடுக்குக்காய் இரட்டைச் சிதைவுகளைக் கொண்ட ஒருடல் எனலாம்.

தேசியம் என்ற கருத்தின் பின்னுள்ள



செயற்பாடு கலைந்து கிடக்கும். சிதறிக் கிடக்கும். ஒரு பேராபத்தான சமுக நிலையாக அறிவிப்பதடன் அதைச் சரிசெய்யும் முயற்சியில் பங்குகொள்ள வைப்பதும் எனக்கொள்ளலாம். இது சமுகக் கூறுகளுக்குள் ஊடுருவி நிலையான ஒரு இருப்பாக "சாரம்சம், பொது" போன்ற ஒற்றைப் புாதலை முன்னிறுத்தும் வரலாறு என சமுகத்தின் எல்லா இயக்கங்களையும் ஆக்கிரமித்து விடுகிறது.

இந்த உள்வாங்கலும், அதன் வன்மமும் இலக்கியச்செயற்பாட்டில் மிகத் தீவிரத் தன்மை கொண்ட அதிகாரங்களை அரசேற்றியது. அதை உண்மைப்படுத்தி பிரதியியல் நிகழ்த்தும் ஒரு புனிதப்பாட்டை உருவாக்கியததுடன் அதற்கு ஆதரவளிக்கக் கூடிய மதிப்பிடுகளை நிறுவி மாற்றுப் படைப்புக்களை தாழ்த்தப்பட்ட ஒரு நிலைக்கு துரத்தியது எனலாம்.

"இலக்கியம் என்பது வரலாற்றின் சிசு"

"இலக்கிய ஆக்கம் என்பது ஒரு சமுக அழகியல் நிகழ்வாகும்"

"இலக்கியத்துக்கு ஏற்பட்டுள்ள "சமுக மவுசியினைப்" பயன்படுத்திக் கொண்டு அதனைச் சமுக ஆய்வுக்கான ஒர சாதனமாகவோ, அன்றேல் சமூகப் பிரச்சினைகளையும், அப்பிரச்சினைகள் வழிவரும் மனித இடர்பாட்டு நிலைகளையும் விமாசிப்பதற்கான ஒரு கலை முயற்சியாகவோ கொள்ளாது" "ஒவ்வொரு காலப் பிரிவிலும் மேலாண்மையுடையதாக அமையும் வட்டமும் அதன் உறவுகளுமே பிரதான சமுக அனுபவத்தின் தளமாகின்றன. அந்தச் சமூக அனுபவமே மேலாண்மை யுடைய இலக்கியப் பண்பாக அமைந்து விடும். அதனால் இலக்கியத்தில் இவை இடம்பெறுகின்றன"

- கா. சிவத்தம்பி

மேலுள்ள கூற்றுக்களை வைத்து

1. வரலாற்றை இலக்கியம் எழுதிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்கிறது

2. ஒரு சமூகத்தின் சாராம்சப்படுத்தப்பட்ட உண்மையாக இலக்கியச் செயற்பாடு இயங்குகிறது.
3. சமூக அனுபவம் என்ற ஒரு பொதுப் புரிதல் அதிகாரங் கொண்ட ஒரு இயந்திரமாக இலக்கியம் உயிர்க்கிறது.

என்ற முடிவுகளுக்கு வரலாமா? ஆமெனில் இம்மதிப்பீடுகள் முதன்மைப்படுத்தப்பட்டு தீவிரமடைந்திருந்த காலமாகிய 80க்குப் பிறகு மிக அதிப் பிரதிகள் சமூக வாழ்வாதாரம், அய்வுறும் இருப்பியல் பொதுமை, திறம்படச் செப்பனிடப்பட்ட வரலாற்றின் இயங்குதல் உள்ளிட்ட சமூக ஆன்மாவின் மையக் கூறுகளையும், உப கூறுகளையும் சுமந்த அலைவுறும் படைப்புக்களை ஈழத்தில் காணமுடியும் என்பதனை மறுக்க முடியாது என்பது எனது கருத்தும்தான்.

இதற்கிடை ஒரு அம்சம் குறிப்பிடப்பட வேண்டும். அதாவது, உண்மைப்படுத்தப் பட்ட சமூக பொது இயக்கம் வெடித்து தனக்குள்ளே ஒரு எதிர் அல்லது மாற்று இயங்குதலை 90களில் மெய்ப்பித்த போது, அச்சிறு சமூகத்தின் பதிவுகளும், வரலாற்றுப் புறக்கணிப்புகளின் எழுத்துகளும், அத்தேசிய ஆன்மாவின் வேற்று அனுபவங் களும் இலக்கியப் பொதுமையை கேள்விக் குள்ளாக்கி தனித்துப் பயணிக்கத் தொடங்கி யது. ஆனால் தமிழ் தேசியம் ஏலவே உண்மைப்படுத்திய மதிப்பீடுகளை முன்னிறுத்தி சிறுபான்மைத் தேசியத்தின் பிரதிகளை வாசிக்கவில்லை. தங்கள் எதிரியை கவனித்தளவு உறவுகளை கவனிப் புக்குட்படுத்தவில்லை. சிறுபான்மைத் தேசியத்தின் பிரதிகள் அவர்களிடம் திறக்க முடியாத படி மூடப்பட்டுக்கிடந்தன.

இப்படி தனது உதாசீனத்தை ஒரு சிந்தனையாக விரிப்பதினூடே சிறுபான்மை இலக்கியச் செயற்பாடுகளையும், அதன் மாற்று இலக்கியப் புரிதல்களையும் அடக்கி நசித்து செயலிழக்கச் செய்துவிட விரும்பியது. அதுமட்டுமல்ல. மாற்று இலக்கியச்செயற்பாடு தொடர்பிலான கதையாடல்கள் முனைப்புப் பெறுவதை அழித்தொழிக்கும் வன்முறை ஆசையில், தமிழ் தேசிய மொழி நிலப்பரப்பை, பிராந்தியங்களாகப் பிரித்து, (உதாரணம் - மட்டக்களப்பு, வன்னி, யாழ்ப்பாணம், திருகோணமலை, மன்னார், மலையகம், மேற்க்குக் கரையோரம், தென்பகுதி) எனக் கலைத்துப் போட்டுவிட்டு மொழிச் சமூகங்களாக வழிப்படுத்தி நெறிப்படுத்து வதினூடாக "வேறுபாடுகளின் ஒருமைப் பாடு" என்கின்ற ஒரு பொது அடைவுக்குள் இயங்கவைக்க முயற்சித்து வெற்றி கண்டதான நினைவுதான் கடந்த வரலாறு.

தன் தேசிய . உயிர்ப்பின் இலக்கியச் செயற்பாட்டை மெய்ப்படுத்தும் அதேவேளை பிற தேசியத்தின் இலக்கிய உயிரோட்டத்தை நிறுத்தி விட எத்தனித்ததை நினைவு கூருவதுதான் சரி எனக் கருதுகிறேன். மேலே சொன்ன வன்முறை களால் குறுகி ஒடுங்கிப் போனவர்களையும், சார்ந்து ஓடிப்போனவர்களையும் தவிர போராடி எதிர்த்துக் கிளம்பிய பிரதி யியலாளர்கள் சிலருண்டு அதில் மஜீத் மிகக் கவனிப்புக்குரியவர். கவிதையின் பரப்பை சற்று விசாலப்படுத்தியவர்களாகக் கருதக் கூடியவர்கள் மிஹாதும் மஜீதும் என்பது எனது அபிப்பிராயம். அதில் மஜீத் பிரதியிலிருந்து கவிதைகளை பல அடுக்கு களாக உயிர்ப்பித்துக் கொண்டே செல்லக்கூடிய உத்தியை நிகழ்த்தியவர். இவ்உத்தி மிக அதிர்வுகளைத்தருவது அவரது "கள்ளிக்காடும் செம்பொடையனும் என்கின்ற பிரதிக் குழுமமாகும்.

90களில் தொடங்கி எதிர்த்தும், இயைந்தும் நெகிழ்ச்சித் தன்மையான போக்கை இலக்கிய இயக்கத்தில் செலுத்திக் கொண்டிருந்தவர் திடீரெனத் தாவி கவிதைக்கு புதுமொழியை உற்பத்திக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிடத்துக்கு வந்து விட்டார் எனலாம். இவருடைய ஆரம்பகாலக் கவிதைகள் செப்பனிட்ட வடிவமைப்புக்குரிய வேலைகளை முதன்மைப்படுத்தியதாக அமைந்திருந்தது. பின்னர் கவிதையின் மையத்துக்கு சொற்களை இழுத்துவரும் செயற்பாட்டை நிகழ்த்தக் கூடிய பிரதிகளை வரையத் தொடங்கியிருக்கிறார். கவிதையாக தயாரிக்கப்பட்டு முழுமைப்பட்டிருக்காது ஆனால் பிரதியின் ஒவ்வொரு சொல் அடுக்குகள், இடைவெளிகள், படர்ந்து கிடக்கும் புரியாத மௌனங்கள். அது நகரும் புறவெளி

என எல்லாத் திசைகளிலிருந்தும் உயிர்த்து உயிர்த்து கவிதைகள் வெளிவரும். இவை புதிய புதிய நிலைகளை கட்டமைத்து நிறுத்துவதும் அதைப் பின்தொடர்ந்த வண்ணம் சிறு அனுபவக்கூறுகள் வெளிப்பட்டு அழித்துச் செல்வதுமான ஒரு நிலையை எய்துகின்றன.

(செப்பனிடல் என்ற ஒரு புனைவு கவிதைச் செயற்பாட்டில் முக்கிய முடையதான ஒரு கதை பரவிக்கிடக்கிறது. அது வளரும் ஒரு மரத்தைச் செதுக்கி அழகு படுத்துவதற்குரிய வன்முறையோடு நெருக்கமுற்றது, மரத்தை அதன் பாட்டிலே விட்டுவிட்டு வாசிப்புச் செய்யும் முறைமையை இன்னும் அடையாதது ஏன்)

பொது அனுபவங்களையோ அல்லது ஏலவே மனதில் எஞ்சிய சமூகப் பிரதி பண்ணலையோ இவருடைய பிரதிகளில் காண முடியவில்லை. அனுபவங்களை தானே உற்பத்திக்கும் பிரதிகளாக விரிகிறது. திறந்த வெளியின் பன்முக ஆற்றலோடு நம்மை வழி நடாத்த முயற்சிக்கிறது. கதை சொல்வது போலவும் காவிய வெளியில் அலைவுறுவது போலுமாகி நமக்குள் ஒரு முடிவுறாத துடிப்பை இயக்கிக் கொண்டிருக்கிறது. காற்றின் விருப்பத்துக் கேற்ப இழுபட்டு பரபரத்து ஓய்ந்து நிலத்தில் விழும் இலை நம்முள் ஒரு மௌனமாக





பரவுவதைப்போல மஜீதின் பிரதியியல் நிகழ்வு கவிதையின் உள்ளீட்டை பிரதியெங்கும் பரப்பி விடுகிறது.

பிரதிக்கும் பிரதியாளனுக்குமிடையான உறவை குறித்துக் காட்டுவதோ அல்லது பிரதியாளனின் முகம் பிரதிக்கு வெளியே துரத்திக்கொண்டு அச்சமூட்டுவதாகவோ இல்லை. பிரதியும், பிரதியாளனும் துண்டித்துக்கிடக்கும் மிகத் தெளிவான புள்ளிகள் நிறைந்து கிடக்கின்றன. மஜீத் பிரதியை தனது பயன்பாட்டுப் பொருளாகக் கருதி உரித்தாக்குவதாகத் தெரியவில்லை, மாறாக பயன்பாட்டுக்குட்படாத பிறிதொரு உலகை, கவிவெளியைப் பிறப்பித்துக் காட்டியிருக்கிறார் என்று சொல்லத் தோன்றுகிறது.

எனது வாசிப்புப்பிரதி மையங்கொண் டிருப்பத அவருடைய கவிவெளியில் உலவும் எறும்பின் தொடர் நடைக் காட்சி ஒரு இலையின் மரணம் ஆதிக்கக்காரனின் ஒரு ஆதிகாலம் இடைவெளியிட்டு கைதவறிய விலங்கு வேட்டைக் காட்சியிது பூக்காடுகள் கனவுகளாககி புதையுண்ட நதி ஆகிய பிரதிகளாகும். இப்பிரதிகள் கவிதை ஒரு அனுபவத்தின் சாரமல்ல, தனக்கென ஒரு அனுபவத்தை அது பிறப்பிக்கிறது" என்ற பின் நவீன சிந்தனையை மிகச் சரியாகவும், தெளிவாகவும் கதைக்கின்றன.

"ஒரு இலையின் மரணம்" எனும் பிரதி சொற்களின் எல்லையைத் தாண்டிச் சென்று விடுகிறது. சொற்களோடு பயணித்துச் சென்ற நமக்கு திடீரென ஒரு விளிம்பு, ஒரு முடிவு வந்து விடுகிறது. சொற்களின் எல்லை முடிவுறும் இடத்தில் அனுபவம் தன்னை ஆரம்பிக்கிறது. முடிவுற்ற சொற்களின் எல்லைக்கு அப்பால் உள்ள அனுபவத்தின் கூறுகளை சென்றடைய எதுவிதப் பாதைகயையும் பிரதி கொண்டிருக்கவில்லை. வாசிப்போன் ஒரு பாதையை அமைத்து வெளியே சென்று விட்ட கவிதையோடு மிதக்க வேண்டியிருக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறது. ஏதும் புரியாத ஆனால் மன ஊடாட்டத்தின் புரிதலுக்குள் நாம் தனித்து விடப்படுகிறோம். நம்மைக் கைவிட்டுவிட்டு கவிதை மிதந்து கொண்டேயிருக்கிறது.

இவ்வகை இயங்குதல் இப்பிரதி அதனோடு பயணிக்கக் கூடிய ஆற்றலை நமக்குள் நிறைத்துவிட முயற்சிக்கிறது. ஒரு அசாதாரணப் புரிதலை பிரதியெங்கும் நிறைத்து விட்டு நம்மை அருகே அழைக்கிறது. பெரும் சமுத்திரத்தின் நடுவே சிறகடித்துக்கொண்டு நம்மை அங்கு வரத் தூண்டுகிறது. படகோ, பாதையோ ஏதுமில்லை. ஆயினும் கட்டாயம் போய்த் தானாக வேண்டியிருக்கிறது. ஏனெனில் நமது புரிதலை அது தன்வசப்படுத்தி வைத்திருக்கிறது.

"கிளையில் ஒட்டியிருக்கும் போது
உற்றுக் கவனிக்காத இலைதான்
இன்று எனது முழுக்கவனத்தையும்
தின்கிறது"

இப்படி உதிர்ந்து விழுந்த ஒரு இலையை மஜீத் கதைக்கும்போது, நமக்குள் நிறையும் மௌனம் மேலெழுந்து மர்மமான ஒரு அனுபவத்தை எழுதி வாசித்துக் கொண்டிருக்கிறது.

"அவ்விலையை கிளையுடன் இணைக்கும்
சாத்தியங்களை எழுதுகிறேன்"

எழுதி எழுதி இலையைக் கிளையுடன் இணைத்தல் ஒன்று செப்பனிட்டு வெட்டிச் செதுக்கி மரத்தை அழகு படுத்துவது ஒன்று.ஒன்றின் அடையாளத்தையும், அதன் தனி உரிமத்தையும் அனுமதிக்கும் புது மொழியை பேச எத்தனிக்கிறது.

"இன்னுமொரு இலை விழுகிறது
இலையைக் கிளையுடன் இணைப்பது
பற்றிய சாத்தியங்கள்
மறந்தும் போயின"

மரம் ஒரு நாளைக்கு ஒரு இலையை மட்டுமா உதிர்க்கும் இல்லையே உதிர்க்கும் எல்லா





இலைகளையும் இணைக்க என்ன செய்ய முடியுமென இயல்பாய் பேசும் பிரதியாக முடிவுறுகிறது. நீங்களும் உங்களது வாசிப்புப் பிரதியை நிகழ்த்திப் பார்க்கலாம். இன்னும் நிறையவே கதைக்கும் எனக் கருதுகிறேன்.

"ஒலிகள் கவுண்டு
காற்றில் கொட்டி விட்டன
விளையாட்டாக எனது மகள்
அதைப் பொறுக்கிக்கொண்டிருக்கிறாள்"

இதற்கு எதுவும் எழுதவில்லை உங்கள் வாசிப்புக்காக விட்டு விடுகிறேன். சாராம்சப்படுத்தப்பட்ட புரிதலோ, சமூகப் பொது அனுபவமோ ஊட்டப்பட்டு வளர்ந்த பிரதிகளல்ல இவை ஐந்தும், மாறாக தனித்து நின்று அனுபவத்தை பிறப்பித்துக் கொண்டு மட்டும் நிற்காது நம்மீது கவிந்து விசிறச்செய்யும் பிரதிகள் இவை.

கதையும், கவிதையுமாய் ஊடாடி ஒன்றுக் குள் ஒன்று விரிந்து பரவி தன்னைத்தானே சிருஷ்டிக்கும் கவிதை வெளி மஜீதினுடையது. அல்லது செப்பனிட்டு உற்பத்தி செய்த கவிதைகளல்ல மாறாக கவிதையை உயிர்க்கும் பிரதிகள் எனலாம்.

கவிதைச் செயற்பாட்டின் பின்னே எதிரெதிராய் இயங்கும் சொற்களின் அலைவு வாசிப்பின் திறந்த வெளியில் புயலாகச் சுழன்று தணிகிறது. இது இன்னும் புதிய அசாத்தியங்களை நிகழ்த்த மஜீதுக்கு உதவலாம் என்பது என் அபிப்பிராயமாகும்.

("ஒட்டகமாகத் தெரியும் ஏவாளோடு ஒரு முறை," "ஒரு ஊரின் நடு வழியில் காணாமல் போனவெனது கவிதை" என்ற இரு பிரதியும் இவ்வுரை எழுதியதன் பின்னரே இணைக்கப்பட்டுள்ளது)

றியாஸ் குரானா

28.10.2005



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியச் செயற்பாடு குறித்த புரிதல்கள் மாறிமாறி பின் நவீனத்துவம் என்ற திறந்த வெளிக்குள் துரத்தப்பட்டிருக்கிறது. அதைப் புரிவதும், புரிவதினூடு சுய விமர்சனம் செய்வதுமாய் பிறந்துவிட்ட இப்படைப்புக்களை உங்கள் வாசிப்புக்கு வைக்கிறேன். அத்தோடு ஏறுவெயில், வாழ்வின் மீதான எளியபாடல் என முன்பு வெளியான எனது படைப்புக்களையும் மறு வாசிப்புச் செய்தும், நினைவுள் முடிவான பிறகு "கள்ளிக்காடும் செம்பொடையனும்" என்கின்ற ஒரு மாற்றுப்படைப்பை முடித்து விட்டிருக்கிறேன். எனது சிறை களுள் இருந்த இறுகிய சொற்கள் பாவாத் மாக்களைக்காண சிறகடித்து சிறகடித்து குதூகலம் கொள்கின்றன, பின் நவீனத்துவ சிந்தனைகள்.

இத்தொகுதி வெளிவர உழைத்த எல்லா நண்பர்களையும் நெஞ்சில் இருத்தி, ஒரு பொழுது அன்பை பருகுகிறேன்.

அன்புடன்
மஜீத்

10.11.2005



## ஓநாய்களை வரவழைத்தல்

இது கோடைகாலமல்ல
இது மாரிகாலமுமல்ல
முன்பு
வந்து போன ஒரு காலமுமல்ல.
நான்
எனது மக்களுக்காக
ஓநாய்களை அழைக்கிறேன்.
வார்த்தைகள் சலித்துவிட்டன
அழமுடியாது
காலம் ஓய்வடைந்துவிட்டது.

புன்னகை
அது ஒரு பெருந்துயர்
பேராவல் மிக்கயெனது புன்னகையும்
ஓநாய்களை அழைக்கிறது

காலங்களை குறிவைத்துப்பாயும்
ஓநாய்கள்
எனது மக்களுக்காக இரங்கும்.

எமது அழகுரல்களை
குடித்து அது வெறிகொள்ளும்
ஓநாயே எனது காவலனே
வா!...
மிக விரைந்துவா

எமது மக்கள்
இரவைத் தொலைந்து விட்டனர்.
மேலுமவர்கள்
வாழ்வும் ஒரு இறைச்சித்துண்டும்.
அவர்களிடமிருந்து பறித்து
நீயாவது உண்ணு

ஆனாலெனது அழைப்பை மட்டும்
ஏற்க மறுத்துவிடாதே.

தினகரன் 2004-08-03



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தூர வெளியின்
## இருள் முகட்டில்

நீ காண்பாய்.
மிக அவசரமாக நீகாண்பாய்
ஒரு பௌர்ணமிதினத்தினிரவில்
எல்லா சமுத்திரங்களிலும்
குருதிபொங்கி வழிய
கண்களை நெருப்பாக்கும் நிகழ்வுகளையும்.
நீ காண்பாய்.

நிலவின் நிழலில் பாம்புகள்
வெள்ளிக் கொடியாய் ஒன்றுடன் ஒன்று பின்னிப்படர்ந்து
வாலில் நின்று
தலையை உயர்த்திப்புணர்ந்த மகிழ்வதையும்
மிகத்தெளிவாக நீ காண்பாய்.
என்னுடைய அன்பிற்கும்
மன நிம்மதிக்கும்
நீண்டயிரவுகளிலும்
குறுகியயிரவுகளிலும்
இளம்மிக இளவயதடைய பெண்களின்
குருத்துக்கன்னமும்
குருத்துக்கழுத்தும்
குருத்திடையும் குருத்துமார்பகங்களுடனும்
நீ யென்னுடன் நிர்வாணமாகவும்
கலந்து
புணர்ந்து மகிழ்வதையும் நீ காண்பாய்.
நிச்சயமாக நீ காண்பாய்
கண்களை இறுக்கி மூடு.

இந்தியா டுடே
இலக்கிய மலர் 2002



## அறியப்பட்ட போராட்டமும்
## அறியப்படாத போராளியும்

பிழைத்திருந்த அவன்
என்னைக் கடந்து செல்கிறான்.

எனது கண்களை
நடுக்க முற்ற அவனினது உடல்
இமைக்கத் தடுத்தன.

முகத்தில்ரத்தம் பிசுபிசுத்தது
இறுதி வார்தையையும்
அழுது முடித்திருந்தான்.

இரவிடம் தோற்று
பகலிடம் சார்ந்திருந்த
அவனதுயிதயம் துவண்டு போயிற்று.
பிழைத்திருந்தவன்
என்னைப் பிரிந்து செல்கிறான.
குறிவைத்துத்தப்பிய
ஒருதுப்பாக்கி ரவயைப்போல
திக்கற்று செல்கிறான்
இப்போதுதான்
அது நிகழ்ந்திருக்க வேண்டும்

எது ?
அவனது அடையாளம்
அறியப்படாத போராளி.
வாழ்வும் அவனுக்குரியதல்ல
நிலமும் அவனுக்குரியதல்ல
எனினும்,
அவனொரு பொதுமகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் பொதுமகன்தான்
தவறு
அவனொரு போராளியாக மாறவுங்கூடும்.

சிறுவனென்று கணிப்பதற்குள் வளர்ந்துவிட்டான்.

ஆம்
மனிதனாக இல்லாது போனால்
அவனொரு பொதுமகன்தான்.

2002-12-01



## ஒலிக்குறிப்பும்
## தின்னக்காத்த நெடுந்தூக்கமும்

ஆழங்களுக்குள் மிதக்கும்
இமைப்புயல் விழித்த உள்புலம்பலில்
நீ ஒலித்த படி மிதந்தாய்.

உனக்குள்
உன்னைத் தேடும் கணங்களில்தான்
பாதாள வெளியின் இருள் பாறைகளில்
அதைப்புதைத்து புதிய நிழல் வெளிப்பட்டதும்
சிக்கிய எனது விழிகளில்
திரும்பவும் மூழ்கினாய்.

உனது உணர்தலின் பின்
என் நிழலிடமிருந்து தப்பிக்க
என்னை பதுக்கிக்கொள்ள
அப்போதும்
நீ உணர்ந்திருந்தாய்.

மீன்கள் பறந்து செல்வதுபோலவே
தோற்றமும் நிகழ்ந்து
ஒவ்வொரு முறையும்
பனிக்கடல் ஆழத்துள் நீந்துகிறேன்.

சுழல்களை விளைவிக்கும்
போதைப்படிமங்களையும் சந்தித்தேன்
திகைப்புகள்
உள்ளிருந்து தீண்ட எத்தனித்தபடி
மூடிய இமைகள் புணர்ந்தது
அதுபற்றிய அச்சங்களேதுமின்றி.
திசைகளுக்கப்பாலிருந்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாறைத்தளத்திலிருந்தும்
மிக மெதுவாக
மிகமிக மெதுவாக எழுந்து மறைந்தது.
உருவங்களின் இருளும்மறைந்தன
அவ்வுருவங்களில் நம்மில்யாரோ ?

தொலைந்து போவதற்கு
அது
நானாகவுமிருக்கலாம்.

ஒலிக்குறிப்பை இருளிள்வைத்தேன்
உனக்கு இப்பொழுதுதான்
நிகழ்ந்தவைகள் பற்றியும்
அதன் தேடுகையின் பின்னும்
அவைகள் பற்றிய குறிப்பை
சிக்கலாக நிரப்பியுமிருந்தாய்.
அதுமிகவும் சிக்கலானதுதான்
பதில்கள் பிரபஞ்சத்திற்கு வெளியேயும்
ஒன்றின் உள்ளிருப்புகளுடைனேயும்
வேறு இடத்திலுமிருக்கலாம்
மௌனத்தின் இருள்த்திரள்களை
கூர்மைகளாக்கி
கனத்த திசைகளற்ற கங்குப்பாறைகளில்
அப்படியொரு ஓவியங்களுமிருக்கவில்லை.

இனி மிதக்கும் நிறப்புகையுறைய
கூர்மையாய்க்குடைந்தது
வெளிநோக்கிய விழிப்புகளில்
தின்னக்காத்த நெடுந்தூக்கமுமானது
உனது போலி
வாசகங்களும் சாய்ந்து அடங்கி மார்புக்குவைவுகளில்
சுருங்கும் உள்வேட்டையில்
புயலாய் அதனியல்பாய்
பெருகிப்படர்ந்தது அதுவும்.



## தாய் நிலத்தில்
## ஓயாது அலையெழும்

ஒரு ராக்குருவியின் தூரத்துப்பாடலால்
பல வருஷாந்திரக் கனவினது மாயப்புரமும்
மூச்சுவிடத்தொடங்கலாகிற்று.

ததும்பித்தும்பி கொந்தளிக்கும் விழிகளுக்குள்
எவள் ஞானராகத்தை நிறைந்து வைத்திருக்கிறாளோ
இரு நகமுரசி படபடத்துயர்ந்து
உள்வெளியெரிய காதலின் மர்மத்தை

அதன்ரகசியமுடிச்சுகளை அவிழ்த்து
மனத்துடிப்பின்
மெல்லிய சொற்களில் பாடினாளே...
அவளின் குரலில்
அல்லது
ராக்குருவியின் தூரத்துப்பாடலால்
நான் தொடங்கவுமில்லை

தொடங்கி முடிக்கும்
வறண்ட சொற்களையும் நானிழந்து
வெகு நாட்களுமாகிற்று . . .

இறைவா
பனித்துளிகளின் பூஞ்சிறகு போன்ற
உனது மென்விரல்களிடையே
இந்த
உயிர்மொட்டின் மென்மைகள்
இப்போதைக்கு கசங்கிவிடாது தானே . . . !

என் ஆழ் மனதின் தவிப்புகளால்
ஒரு ஓடையும் வற்றிவிடாது தானே . . . ?
நான் தொடங்க நினைக்கிறேன்.
நீ முடிக்க நினைக்கிறாய்.
நிச்சயமாக நீதான் முடிப்பாய் . . .

**2001-12-07**
***மூன்றாவது மனிதன்* (2002 மே ஜூலை)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவ்வாவின் மண் குடிசை

இப்படித்தான்
அன்பு யென்னைப்பைத்தியமாக்கிவிடும்.
இதற்காகத்தான் போய்விடு
இழப்பதற்கு எங்களிடமேதுமில்லை.
போய்விடு . . .

அது அவளுடைய குடில்
எங்கள் பாசறை
வலிமை பெற்றுக்கொண்டிருக்கும்
எனதுணர்வுகளை
கலைத்துவிடும் படி பணிக்காதே
போய்விடு . . .

ஆரத்தழுவிவிடும்
அவளது முதுமையடைந்த விரல்களை
அதன்
நடுக்கத்துள் கிளர்ந்தெழும் எதிப்பை
மலினப்படுத்திவிடாதே
போய்விடு . . .

குப்பிவிளக்கின் வெளிச்சத்தில்
நிலா இருண்டு கிடக்கிறது
அவளுடைய அரிசிப்பானையுள்
ஒரு தேசத்துக்கான கனவுவேகிறது.
அதை குழப்பிவிட முயற்ச்சிக்காதே...
போய்விடு . . .

அவளின் குடில்
ஒரு தேசத்தின் உயிராதாரம்.
விழிப்புணர்வின் நாற்றுமேடை
போய்விடு . . .



அலட்சியப்படுத்தாதே
என்னிதயமே போய்விடு . . .

குர்மத்து நாச்சியா உம்மா
குடிலோடு காத்திருக்கிறாள்
புறப்படப் போகிறேன் . . .
போய்விடு...
என்னருமையிதயமே.
இப்படித்தான்
அன்பு யென்னைப்பைத்தியமாக்கி விடும்.
சிலநேரம்

2004-11-02



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிலா எரித்து குடில்கள் சாம்பலாகின

ஒநாய்களை
அழைத்த யெளதிரவுகளுக்குப்பின்
கால்கள் நெடுதூரமலைந்து கடந்தன.
கைகள் சோர்வுற்றன
மக்கள்
அச்சமுற்று பரபரத்துத்திரிகின்றனர்.

நாவில்
சொற்கள் காய்ந்து வரண்டுபோயிற்று.
ஒநாய்கள் வரவுமில்லை.
கனவுகள்
மரித்து தாக்கத்தின் வெளிமயானமாகிற்று.
பேரிரைச்சல் அழுகையாகி கலந்த காற்று
ஊரின் எல்லாத் தெருக்களிலும்
மரங்களில் தலையடித்து புலம்பின.

வானம் கைதவறி விழந்த நிலா
எமது கிராமத்தில் சிதறின
அவர்களிட்ட தீ.
எரிந்து முடிந்திருந்தது.

ஒரு கிராமம்
தனது தரையெங்கும்
சாம்பலில் புரண்டு கிடந்தது.

ஒநாய்களை
அழைத்த குற்றத்திற்காக
ஒவ்வொரு கிராமமாக
இழந்திருந்தோம்

2004-12-06



## கவிதை ஒன்று

அன்று பின்னேரம்
என்னுள் ஆயிரம் குருவிகள் கூடு கட்டின
நாம்
இருவரும் சந்தித்து மிக நாட்களுமாயிற்று

வெட்டுக்கிளியடித்து
துள்ளித்திரிந்த
புழுதிபடிந்த கிராமத்து மண்வெளியது

பார்வையின் படர்வில் எங்கும் பச்சை
ஒவ்வொரு விடிகாலையிலும்
தாத்தாவின் பின் தொடர்வேன்
அவர்வாயில் துண்டு பீடி
சுகமாக புகையிழுத்துக் கொண்டு
அரைப் பொக்குவாயை அசைத்து
ஈச்சம் பத்தைக்குள் நுழைவார்

மறுபக்கம்
ஒரு சிற்றோடை
காலை சூரிய செவ்வெளிச்சக் கீற்றில்
அது தங்கம் போல பள பளத்தன
மீன் கொத்திப் பறவைகள் பறக்கும்
நீளமான ஓடையது
சற்று நேரத்தில் தாத்தா
சாரத்தை ஒதுக்கியபடி வருவார்
பின் தொடர்வேன்
புல்வெளியில் வெட்டுக்கிளிகள் பாயும்
பூக்கமிலாத்தால்
வெட்டுக்கிளி அடித்து காற்சட்டையுள் பதுக்குவேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையிலிருந்த இறப்பர் வில்லில் கல் வைத்து
குருவிகள் பறவைகளென
அடித்து மகிழ்வேன்

சிலநிமிடங்களுள் என் கனவுகளுள்
உன் வண்ணாத்திப்பூச்சிக்கும் சிறகுகளிருந்தது
கால்களிருக்கவில்லை

மீளவும்
கனவுகளுக்குள் வர்ணமிருந்தது
அதன் சிறகுகளில்
ஓவியங்களிருக்கவில்லை

கடைசியில் கண்கள் திறக்க
நீயுமொரு வண்ணத்துப்பூச்சியானாய்.
அதன்
அழகையேனும் தின்ன இயலவுமில்லை.



## கவிதை இரண்டு

இன்றிரவுக்கு
நட்சத்திரங்களும் சாட்சியில்லை
ஆனாலும்
அது நிகழ்ந்தது
நெடுந்தெருவழியே அடர்ந்துகிடக்கும்
பூவரசமரநிழலும் அதற்குச்சாட்சியில்லை

அன்று இரும்பு உருகிநெகிழ்ந்தது
ஒரு
பகற்பொழுதினில் கும்மிருட்டும் நீண்டு விரிந்தது
காற்றும்
சிலிர்ந்தெழும் கடுங்குளிரும்
சிறகு விரித்தது
கரைந்தழியும் நெஞ்சம்
வான வெளியில்
கைதவறி விழுந்ததும் படர்ந்ததும்
சாட்சிகளாகவுமில்லை
வெள்ளிநிலா வீதிகளில்லாது
அலைந்து திரிந்ததற்கும்
மெல்ல சுவடுகள் பதித்த
மலைகளுக்கும் நிச்சயமாக சாட்சியில்லை

உணர்வுகளையும் கடந்து
அடிமனதில் ஒரு வலியைத் தந்ததற்கும்
சத்தியமாக எதுவித சாட்சிகளுமில்லை

மனித மதிப்பீடுகளில்
உள்ளதை உள்ளபடி நெடுமனக்கொடுமைகளில்
இரு கூறுகளாக பிளந்த மனதினிடையே
உறவுகள் சிதைந்ததற்கும் சாட்சியில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ விரும்பினால்
எனது உண்மைகளை ஆழப் புதைக்கலாம்
அல்லது
எழுதமுடியாது கைகளைத் துண்டிக்கலாம்

நீ விரும்பினால்
சாட்சிகளும் தேவையில்லை
கடைசியாக குருதித்துளியுயிர்த்தது
எல்லா நிகழ்வுகளுக்கும்
சாட்சிகளும் உண்மைகளும் இல்லாமல் போயின
என்னுள் அன்றிரவு ஆயிரம் கனவுகள்
சாட்சிகளின்றி மனம் கொத்திப் போயின

2005-02-10



## நடுயிரவின்
## நீள் பயணம்

எப்போவும் போலவே மெல்லத்தழுவியதுயிரவும்
மகள் தோளில்
இறுக அணைத்தமாதிரி தூங்கியும் விட்டாள்
வலது பக்கம்
மனைவியின்முகமும் சாய்ந்து கிடந்தது
குளிறுறைந்தயிதமான அமைதியில்
விழிப்புடனேயே கழியும்
எனது எல்லாயிரவுகளுமிப்படியேதான்.

மனக்குழியின் ஆழத்துள்
நான் எதையும் ஒடுக்கி மறைத்ததும் கிடையாது
கடந்து போன ஞாபகங்களும்
தாவித் தாவி மொய்த்துக் கொண்டேயிருந்தன.
வாழ் நிலைகளே
உணர்வுகளையும் தீர்மானிக்கின்றன
இவைகள் பற்றிக்கனவுலகில் மகிழ ஓடி ஒளிய
என்னால் இயலவுமில்லை.

ஓராயிரம் ராக்குருவிகளும்
அழகியயிரைச்சலுடன்
எனது செவிகளுள்
அமிழ்ந்து இனிமையாகபாடியும் சென்றன.

பிரபஞ்சத்தைத்தழுவ நீளும் பார்வை
தோள் பட்டையிலிருந்து
மெல்ல மெல்ல விடிகிறதுயிரவு.

நானும்
மகளும் மனைவியுமில்லாது போயிற்று.
பூரித்து மன ஆழம் வரையும் புதைகிறேன்.
துவளவைக்கிறது
எல்லாநிகழ்வுகளும் கிளர்ச்சியுற்ற அற்புதங்களைத் தேடி...

காலச்சுவடு ஜூன் 2005
2005-03-19



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எறும்பின் தொடர்
## நடையின் காட்சி

பாறை இடுக்குகளில் ஒரு எறும்பு
உணவுப் பருக்கையை இழுத்துச்செல்கிறது
ஏற்ற இறக்கங்களில்
மிகச் சிரமப்பட்டு
அவர்கள் மது அருந்துகிறார்கள்
இவர்கள் உணவு உண்கிறார்கள்
வயிறு நிரம்பிய சிறுவர்கள்
வாசலில் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள்
நான் விரதம்
இறைவன் இந்தப் பட்டினியைப் பறிமாறி
எனது வயிற்றை நிரப்பிவிடுகிறான்
பாறையிடுக்கில்
சுமந்து செல்லும் எறும்பின் சிறு நெஞ்சில்
இறைவனுடைய அக்கரை
விரிந்து கிடக்கிறது
மனிதர்கள் மனிதர்களுடைய இறைச்சியை
கடித்துத்தின்று எலும்பை உறுஞ்சும் போது
நான் எறும்பை நினைக்கிறேன்
அதன் நெஞ்சு
என்னிடம் வந்துவிடுகிறது

உணவுப் பருக்கையை இழுத்துச் செல்லும்
எறும்பின் காட்சி
இன்னும் முடிவுறவில்லை
முடிவுற்ற பிறகு
எனது இக்கவிதை முழுமையடைகிறது
நீங்கள் வாசிக்கலாம்.

2005-03-30



## ஒரு
## இலையின் மரணம்

வயதைக் கணிக்க முடியாத
அந்த மரத்திலிருந்து ஒரு இலை
காற்றை விலக்கிக் கொண்டு நிலத்தில் விழுகிறது
மரத்தடியில் கால் நீட்டி நான் அமர்கிறேன்
அந்த இலை முதுமையடைந்திருந்தது
பழுக்கவுமில்லை
கிளையில் ஒட்டியிருக்கும் போது
உற்றுக் கவனிக்காத இலைதான்
இன்று எனது முழுக்கவனத்தையும் தின்றது
அங்கு இடையிடையே வீசும் காற்றில்
ஒத்திவிடப்பட்டு தாவி
நிலத்தில் உரசி நகர்கிறது
வெய்யிலில் உலர்கிறது

கிளையில் இருக்கும் போது
நிலத்தில் விழாது காத்த கடைசி மழைத்துளியை
இன் நேரங்களில் நினைவு கூரலாம்
அவ்விலையை கிளையுடன் இணைக்கும்
சாத்தியங்களை எழுகிறேன்
இலையை பொறுக்கிய எனத மனைவி
குப்பையில் போட்டு விட்டுச் செல்கிறாள்
வயதைக்கணிக்க முடியாத அம்மரத்திலிருந்து
இன்னுமொரு இலை என் நெஞ்சில் விழுகிறத
மறு நாள் காலையில் பார்க்கிறேன்
நெஞ்சில் விழுந்த அவ்விலை
இன்னும் உதிரவில்லை
இலையை கிளையுடன் இணைப்பது
பற்றிய சாத்தியங்கள்
மறந்த போயிருந்தன

2005–04–07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆதிக்ககாரனின்
## ஒரு ஆதிகாலம்

ஜீப் வண்டி தார்ச்சாலையைக்கடந்து
மணல் வெளியில் முக்கிச் செல்கிறது
ஜீப் வந்த சேர்ந்தயிடம்
ஒரு நகரம்.

வண்டியின் அழகை மக்கள் வியக்கின்றனர்
ஒரு சிறுமியும்
அதைத் தொட்டு முத்தமிடுகிறாள்
பஞ்சு இருக்கைகள்
இளஞ்சூட்டில் கதகக்கிறது
வண்டி நிற்பதற்கு எதிரேயிருக்கும்
எனது இருக்கை தலைகீழாய்க்கிடக்கிறது.
ஒவ்வொரு வீதியிலும் நுழைந்த
மூன்று வாகனங்கள்
மிகவேகமாய் பாய்ந்து வந்து
மூளைக்குள் மோதிச் சென்றன.

எல்லோரையும் போல்
நானும்
பொறாமைப்பட்டேன் ஒரு முறை.

2005-04-20



## இடைவெளியிட்டு
## கைதவறிய விலங்கு வேட்டைக் காட்சியிது

உடல் தீப்பற்றிக் கொண்டது போல
அவன் பதறிக் கொண்டு ஓடினான்.

அலறியடித்துக் கொண்டு
ஒன்றன்பின் ஒன்றாக ஊரே விரைந்தது

காற்று
அந்த நேரத்தில் இரைந்து
பொங்கும் ஓலத்தைத்தவிர
வேறு எதையும் ஏற்கவில்லை.

கைதவறி விழும் குழந்தைகள்
மிதிபட்டு நசுங்கினர்
ஆடைகள் பற்றிய அக்கரை
எவருக்குமேயிருக்கவில்லை

நீச்சல் தெரியாத ஒருவன்
நீரில் விழுந்து விட்டதைப்போல
இரவு நிறத்து முலைகள் தத்தளித்தன.

அடுத்ததாக
ஒரு நிலப்பரப்பு நீரில் மூழ்கிக்கிடந்தது.
நீரின் மேற்பரப்பில்
அலைகளுக்கு வாசியாய்
உடல்களும், பறவைகளும்
இன்னும்
பெயர்தெரியாதவைகளும் அசைந்து நின்றன.
திரைப்படம் முடிவதற்கான
கடைசிக் காட்சியாகத் தானிருக்க வேண்டுமென்று
நான்
யூகித்துக் கொண்ட பிறகு . . .

எனது வீடு பூட்டப் பட்டிருக்கிறதா ?
இல்லையா ?
என்ற சந்தேசம் எழுந்து விட்டது.
எங்கு தேடியும் திறப்பைக் காணவில்லை
கொஞ்சம் கொஞ்சமாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் சேமித்து
வீட்டுக்குள்ளிருக்கும் பொருட்கள்
கண்களில் ஆடிய

நான் இரண்டாய்ப்பிரிந்து
திரைப்படத்துக்கொன்றாகவும்
வீட்டுக்கொன்றாகவும்
எதிரெதிரே பயணிக்கிறேன்.

என் வீடு நெருப்பாகி என்னில்
எரிகிறது
திரையில் ஆடைகளை உரிந்த விட்டு
ஆடிக் கொண்டிருக்கிறாள் நடிகை.

பூட்டப் பட்ட வீட்டுக்கு வெளியே
நான் அடைபட்டுக் கிடக்கிறேன்.

2005-05-03



## பூக்காடுகள் கனவுகளாகி புதையுண்ட நதியிது

தனித்தனியே
தொடங்கி நீள்கிறது பாதை
நடந்து செல்கையில்
முடிவும் நகர்கிறது.

எனினும் விரிந்து
மஞ்சளடித்துக்கிடக்கும் வானத்தின் கீழே
நாமும் ஒருவர்.
வேறு வேறாய் முடிவுகளானதும்
இரு கரைகளையும்
இணைத்துக்கொண்டிருக்கிறது.....

மகள் என்ற பெயரில்
பாய்ந்து செல்லும் நதி
ஒரு கரையில் நீயும்
மறு கரையில் நானுமாய்

தனித்தும்
இணைந்தும்
அலைந்து திரியும் காற்றில்
ஒலிகள் கவிழ்ந்து கொட்டிவிட்டது

விளையாட்டாக
எனது மகள் அந்த ஒலிகளை
ஓயாது பொறுக்கிக்கொண்டிருக்கிறாள்.

2005–05–29



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு ஊரின் நடுவழியில் காணாமல் போனயெனது கவிதை

மனிதர்களற்ற
ஒரு உச்சி வெயிற் பொழுதில்
அந்த ஊர் கதைக்கத்தொடங்கியது

வேலிகளற்ற இணைப்புகளும்
கிடுகுகளாலான வீடுகளும்மாய்
ஒரு கதை சொல்லி அவ்வூர்.

தெருக்கள் எதில் நடந்தாலும்
சுற்றிச் சுற்றி ஓரிடத்துக்கே கொண்டு வரும்
ஆச்சரியக் குறிபோல திடீரென முடிவடையும்
ஒரு தெருவில் இப்போது நான் நிற்கிறேன்.

கொஞ்சம் சொஞ்சமாய்
நான் கேட்ட கதைகளில்
எதிர் எதிரான சம்பவங்களும்
முரண் பாடான வரலாறும் மோதி
புதிய வெளிச்சத்தையிருட்டாக்கியது.



## ஓட்டகமாகித்தெரியும் ஏவாளோடு ஒரு முறை

பாலைவனத்தில்
ஓட்டகமொன்று அலைகிறது
எல்லாத்திக்கிலும்
ஓடி ஓடி மாய்கிறது
மூடி வைக்க கதவுகளுமில்லை
எனினும் வெளியேற வழி கிட்டாது மாய்கிறது
ஒதுங்க நிழலோ
அருந்த நீருள்ள சிறு குட்டையோ
கண்ணெட்டும் தூரம் வரை
இல்லை.

அதைப் பற்றி

01. ஓ – ஓட்டகம் தப்பித்து விட்டது

02. e - செத்து மண்ணோடு
மண்ணாகிப் போயிற்று

03. J - வாழவும் முடியாது
சாகவும் முடியாது தவிக்கிறது

இச்செய்திகளைக்கேட்க்க முடியாத நான்
ஏவாளை வாசிக்கிறேன்
புரியும் வரை
எனது அக்கரையெல்லாம்
அவள் பற்றியது தான்
இலைகளை அணிவதற்கு
முன்பான காலத்தில்
எனது கண்களையும் தாண்டி
நெஞ்சை நெருக்குகிறாள்
என்னை
அவளோடு விட்டுவிட்டு
ஆதம் எங்கு போனான் ?

2005-10-29



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுள்ளிக்காடும் செம்பொடையனும்

---

*வடிவங்களை மீறிய கட்டுடைப்பு*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு
காலத்தின் வார்த்தைக்குவியல்
யாருக்கும் வலிக்காமல்
கட்டுடைப்பினூடே
நிகழ்ந்து கொண்டே போயிற்று



## கட்டுடைத்தல் அல்லது உதறிவிடுதல்

ஒரு பின் நவீனத்துவ கலைஞன் அல்லது எழுத்தாளன் ஒரு தத்துவவாதியின் நிலையில் உள்ளான். அவன் எழுதும் பிரதி, அவன் உருவாக்கும் கலை வடிவம் என்பன தமது அடிப்படையாக முன் தீர்ப்பு ஒன்றின் மூலம் அவற்றை மதிப்பிட முடியாது. பரிச்சயமான அளவுகோல்கள் மூலம் அவற்றை அணுக இயலாது. அந்த விதிகளையும் அளவுகோல்களையும்தான் அந்தக் கலையாக்கம் தேடிக்கொண்டிருக்கிறது. கலைஞன் அல்லது எழுத்தாளன் விதிகள் எதுவும் இன்றி பணியைத் தொடங்குகிறான். என்ன நடந்திருக்க முடியும் என்பதற்கான விதிகளை உருவாக்குவதே அவன் நோக்கம். எனவே கலையாக்கம் அல்லது பிரதி என்பது ஒரு நிகழ்வின் பண்பைக் கொண்டுள்ளது.

ஒரு படைப்பாளியின் பங்களிப்பென்ன? படைத்தவற்றிலிருந்து விலகியோ அல்லது மாறியோ நிகழ்த்தும் அடையாளம் எது? எனக் கேட்கத் தோன்றுகிறது. அச்சமயங்களில் பழைய பிரதிகள் காலாவதியாகி விட்டனவா என மீளவும் வாசிக்கத் தூண்டுகிறது. பின் கட்டுமானங்கள் தத்துவார்த்த உள்ளீடுகளைக் கொண்டமையும் கோட்பாடுகளின் வக்கிரங்களை சுமந்தலைகிறது. படைப்புகள் மதிப்பீடுகள் மீளாய்வு செய்யப்பட வேண்டியிருந்தாலும், மிக நீண்டதொரு பெருங்கதை உருவாக்கம் இன்றியமையாத காரணத்தினால் ஒர தத்துவார்த்த மதிப்பீடே நீண்ட காலத்துக்கும் பிரதிகள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கிறது.

நவீன சிந்தனைகளின் போதாமைகளால், பின் நவீனத்துவத்தின் பன் முகத்தன்மை மேலெழுந்து மதிப்பீடுகள் கைமாறின. அதன் பின்னும் ஏதாவது ஒரு கோட்பாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டனான மதிப்பீட்டை படைப்பின் மீது கட்ட விழ்த்து விடுகின்றனர். எதிர்ப்படும் பன்முகத்தன்மையை, அல்லது பிறதை ஒதுக்கிவிட்டு மதிப்பீட்டாளர்களுக்கும், அது சார்ந்தவர்களுக்கும் தெரிந்த ஒன்றாய் மாற்றி விடுகின்றனர். அப்படைப்பு அதன்பின் எதிர்புரிதாயினும் ஏலவேயுள்ள மதிப்பீட்டடிப்படையினூடே தான் வெளிக்காட்டப்படுகிறது என்பது பின் நவீன பன்முகத்தன்மை புரிந்த கொள்ளப் படவில்லை என்பதையே காட்டுகிறது.

அடையாளங்களினூடு பிரதிகள் மீது திணிக்கப்பட்ட வரையறைகள் படைப்பின் பன்மைத்தன்மையை பாதிக்கிறது. அத்தோடு ஒரு சிறு அடைவுக்குள் சுருக்கி விடுகிறது. பிரதியாளனே மீண்டும் மீண்டும் பல திசைகளில் நின்று பேச வேண்டியு முள்ளது. சமூக அல்லது ஒரு கூட்டு அல்லது தனி நிகழ்வுகளின் கலவையில் பிரதியாளன் தெரிவு செய்து மொழியிலிடுவது என்பது உண்மை. ஆயினும், அவன் அவை கொண்டு வடிவமைக்கும் தனி நிலைக் குறிகளான சொற்கள், முறை, வடிவம், என்பன ஆழமாய் அலசப்படுவதில்லை, குழு அல்லது தத்துவார்த்த எல்லைகளுக்குள் முடக்கி விடப்படுகிறது.

பிரதியில் முறைகளை அல்லது படைப்பு களை வழி நடாத்தும் உள்ளார்ந்த பண்புகள் உடைக்கப்பட்டு பிரதியிடப்படுவதும் அதிகரித்து வந்திருக்கிறது. எனினும், மிகப்பல்லாண்டுகளாய், கவிதை, சிறுகதை, நாவல் என்கின்ற எல்லைகள் மீறப்படாது அதற்குள் சுருங்கிய பிரதியாக்க மனம் அல்லது சிந்தனை மிகப்பலமானதும், உறுதியானதுமான வன்முறையாகும். இது பிரதிகளின் மீது ஆழப்புதைந்து புரை யோடிப்போன ஒரு நோயாகத் தெரிகிறது.

இந்த வடிவங்களை உதறிவிட்டு, துடைத் தெறிந்துவிட்டு பிரதியிடும் கருத்தாடல் களைச் செய்யவேண்டுமென்று





நினைக்கிறேன். அந்தச் சிந்தனையை முன்வைக்கும் ஒரு வட்டமாக நானும் நண்பர் றியாஸ் குரானாவும் நிறையவே கருத்துப்பரிமாறிக் கொண்டு வருகிறோம். இப்பிரதி தனக்குரிய மதிப்பீடுகளையும், கோட்பாடுகளையும், விமர்சனங்களையும் இனி தான் உருவாக்க வேண்டும். மாறாக அவை வேண்டியும் நிற்கிறது. கட்டுடைக்கப் பட்டு அல்லது பழைய எல்லாவற்றையும் உதறிவிட்டு உயிர்த்த பிரதி இது வென்று கூற முன்வரவில்லை. ஆனால் நம்முன் மிகப்பெரும் 'பிரதியியல் நிகழ்த்தும் மாற்று' என்கின்ற தேவையிருக்கிறது. அதை ஆய்வுக்குட்படுத்தி முயற்சிக்க அழைப்பதுதான் இது.

கட்டுடைத்தல் அல்லது உதறிவிடுதல், நிகழ்த்தப்படவேண்டி காத்திருக்கிறது. பிரதியிலிருந்த விடுபட்ட மற்றொர பிரதியாக காணவே விரும்புகிறேன். அம்முயற்சிதான் ஒரு படைப்பாளிக்கு நிறைய வேலைகளைத் தருகிறது எனவும் கருதுகிறேன். இல்லை யெனில், பழக்கப்பட்டுப்போன மொழி, சொல்லும் முறை, தத்துவார்த்த மதிப்பீடு, வடிவம் இப்படி ஏதாவதொன்றின் வழி நடாத்தலில் படைத்துக் குவித்து விடலாம். இருந்தாலும், எனது பங்களிப்பு என்ன என்ற கேள்வி முடிவுறவில்லை.

மஜீத்

08.07.2004

763, கடற்கரை வீதி
அக்கரைப்பற்று
இலங்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னுடைய நிகழ்வுக்குறியியல்

ஏற்றுக்கொள்ள முடியாத, புரிந்துகொள்ள முடியாத இலக்கியத் தன்மையை பழைய விதிகளுக்குள்ளும், பழைய மதிப்பீட்டுக்குள்ளும், படைப்புகளுக்குள்ளும் ஒடுக்கி அளவிடுவது சரியானதல்ல.

கருவாகி, குயிலாகி, சிறகுவளர பறந்து திரிந்த பொழுது, கானமும், வாசமும் கவிதையாகி பாம்புகளுக்கஞ்சி எனது சிறுவன் உலவினான்.

அந்தக் காலத்துக்குச் செல்ல இன்னும் முயல்கையில் இயலாமையின் நெடிய தூரத்தில் இருளிரவாகி தடுமாறி நிற்கிறேன். தடுமாற்றம் மலையினை விட மிகப் பெரிய தடுமாற்றம். எல்லோரையும் போல் வார்த்தைகளுடன் உறவான ஆரம்பகாலம், கவிதைகளை தந்தது. நான் சொல்லவிரும்பிடாத அன்றைய நாளின் உணர்வுகளும், அது பிரவாகிக்கும் பதிவுகளும், முதல் நிகழ்வுக்குறியிலிருந்தே உறங்குகின்றன.

எரிவதும் அணைவதமாய் ஊத ஊத பிரகாசிக்கும் அதன் நினைவுகள் நெருப்பாகியும் நான் எரிந்ததில்லை.

இனி

எனது சிறுவன்
உங்களைச்சந்திக்க வருகிறான்.

நான், சுள்ளிக்காடு, செம்பொடையன்
காட்டைத்தாண்டும் வரை அச்சமில்லை

சுள்ளிக்காடு
நான்
செம்பொடையன்
ஒருமுறை நீரூற்றியதில்
எனக்கு காடு கடமைப்பட்டுள்ளது
காக்கும்.

சுள்ளிக்காடு
செம்பொடையன்
நான்
யாரென்னைக் காப்பார் ?

எல்லாச் சந்தர்ப்பங்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணமாகியலையும் வாழ்வில்
செம்பொடையனுடைய உறவு தொடங்கியது
பூமியை விழுங்கி
பின் துப்பியதாயும் தொடர
ஒரு சுள்ளிக்காடு எனது இருப்பிடம்.
அவரவர் துயரில் மூழ்கிய அரவவழியிலிருந்து
பிரிந்தன

எனது தனிமையின் அரவம் ஊர்ந்த வருகிறது
பல ஆண்டுகள்...

சுள்ளிக்காடு
நானும் செம்பொடையனும்
செம்பொடையன்
சுள்ளிக்காடும் நானும்

நானும் சுள்ளிக்காடும், செம்பொடையனும்
தொடர்கிறத
மிக நல்லுறவாகி

90களின் பிரதிகளிலிருந்து

நதிக்குள் விழுந்த மௌனம்
மௌனம் ஒரு புதையல்
தோண்டத்தோண்ட
வார்த்தைகள் சுரந்த கொண்டேயிருக்கும்

மௌனம் ஒரு மந்திரம்
ஆறுதலாக வந்து
சொர்க்கத்திற்கும் கடத்திச் செல்லும்

மனதுள் துடித்து
நரகத்திலும் குளிப்பாட்டும்
மௌனம் விசித்திரமானது
ஒவ்வொன்றிலும் குந்தியிருக்கும்

ஆணின் மௌனம் பலவீனம்
நிலவின் மௌனம் நிம்மதி
அறிவின் மௌனம் அழகு
தாக்கத்தில் மௌனம் நாகரீகம்

விஞ்ஞானத்தில் இறக்கைகட்டி



நிலவுக்குப் பறந்தாலும்

மௌனத்திற்கு அர்த்தம் சொல்ல
வலிமையில்லை மனிதனுக்கு

என்னை நேசித்தாளோ
இல்லையோ கவிதைபாடி
நெளிந்து நெளிந்து நடனமாடிவரும்
அந்தக் கிராமத்து
மெல்லிய ஓடையில்
முகங்கழுவும் ஒவ்வொரு காலையிலும்
என்னைப் பார்த்துச் சிரிப்பாள்
அவ்வினாடிகளில் மட்டும்
உதடுகளுக்கு நடுவிலிருந்து
நழுவிவிழும் அவளின் மௌனச் சொட்டு
இச்சிறிய நதியில் விழுந்து
கடலிலும் கலந்து
சமுத்திரம் வரை ஓடி விட்டது.

இனி
சமுத்திரத்து மீன்களும் பேசிக்கொள்ளாது
நீர் ஆவியாகி
மழையாகக் கொட்டினாலும்
மௌனமாகவே பொழியும்.

அது வேர்களுக்குள்ளேயிறங்கி
கலங்களிலே கருக்கட்டி
மரங்களில் மௌனம்
குலை குலையாக தொங்கும்.

எத்தனை ஆயுதங்கள்
அடுக்கடுக்காக வந்து அச்சுறுத்தினாலும்
மௌனத்திற்கே அஞ்சுவேன்
மரணத்தை விடவும்
மௌனத்திற்கே அஞ்சுவேன்.

**இன்றின் நிகழ்வுகளையும், நம்ப மறுக்கிறது மனது. மனிதன் உள்ளிட்ட எல்லா உயிரினங்களும் விடுதலை, வாழ்வுரிமை, சுதந்திரம் பற்றி அவசியமாக மீள முடியாத எல்லா உரிமைகளையும், மறுப்புகளையும், வெளிப்படையாக இன்று பகல் கடுமையாக வெடிக்கச் செய்தது. எல்லாச் சிதைவுகளிலிருந்தும், ஈழதேச போராட்டங்களிலிருந்தும், சிறுபான்மையினிழப்புகளிலிருந்தும் வெளிப்படவுமாகிற்று.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனியெப்படியாகினும்
அவகாசமற்ற மனிதர்களாகவும்

எழுச்சியும் வாழ் போராட்டமும் தொடர
இதுவே தொடக்கமாகவும்
இதுவே முடிவாகவும்
வாழ்வை உலுக்கி அதிர்வூட்டி
எம் நிலத்தில்
எம் காற்றில்
புதைந்து போதலுமாகிற்று.

நாளைய பொழுதுகளில் அறிவிக்கப்படலாம் அல்லது பிரிவுத்துயரில் கரைந்து கிடக்கலாம். பட்டமரத்தடியில் நிழல் தேடிய என்னைப்போல், நீயுமென் ஞாபகங்களில் சுடப்பட்டுக் கிடக்கலாம். கடைசிக் கடிதத்தின் கடைசி வரிகளால் என் உயிர்த்துடிப்பு நிறுத்தப்பட்டது நீயெழுதியிருந்தாய்...

"வீட்டில் கல்யாண வேலைகள் கடுமை
நீங்கள் ஊருக்கு வராவிட்டால்
என்னுயிர் பிரிந்து விடுமென்று"

என்னைக் கொஞ்சம் விட்டுவிடு
போலிகளைத் தாண்டி
நிஜங்களை ஜெயிக்கப்போகிறேன்
என்னைக்கொஞ்சம் விட்டுவிடு

பூகோளமும் இருட்டி விட்டது
வெளிச்சம் புலர்வதற்குள்

நானும்
கொஞ்சம் தூங்கியெழ வேண்டும்
என்னைக் கொஞ்சம் விட்டுவிடு

மனது கசிந்து
நெருப்புத் தணல்களைக் கக்குது
குருதியும் பொங்கி ஆவியாவதற்குள்
என்னைக் கொஞ்சம் விட்டுவிடு

நிலவும் உருகி
ஈயப் பாளங்களை ஓடைக்குள் ஒழுக்குது
அக்கரையில் குந்தியிருந்த
அவ்வழகை ரசிக்க
என்னைக் கொஞ்சம் விட்டுவிடு



கருகிய கூந்தலிலிருந்து, சாம்பலான நிறத்திலிருந்து அம்மெல்லிய குரலிலிருந்து மீண்டும் மீண்டும் சிறகுகளை அசைத்தது திருமலையிலிருந்து கொழும்பு ரயில் நிலையம் வரையிலும், விழுந்து எழுந்து தொடரும் பயணத்தில் அதுவுமென்னுள்ளே தொடரலாகிற்று.

நீரற்று வதங்கிக் கிடக்கும் செடியை
நீ காண வருகையில்
ஓர மலரைப் போல மலர்ந்து கிடப்பேன்

எக்காலமும் தாண்டிய வலிகளுடன்
கலந்திருக்க
தூரத்தே மிதக்கும் கடற்பறவைகளின்
சத்தங்களை மட்டுமே
காதுகளின் ஆழத்துள் இறக்கி
எப்போதாவது எழுதும் நாட்குறிப்பில்

'கைகளில் வாழ்வும்
குழவிக்கூட்டைப்போல் பரிசளிக்கப்பட்டது'

உறைந்து போன மலைகளுக்கும், எல்லா இடவெளிகளுக்கும், எல்லா புலன்களுக்கும் அப்பாலிருந்து காதலும், கவிதையும் இன்னும் புலரும், எல்லா இடவெளிகளுக்கப்பாலுமிருந்து இன்னுமது புலரவுமில்லை.

இனி . . .
காதலும், கவிதையும், புணர புலரும் காலவெளியாகவுமாகிற்று. இப்போது இவைபற்றியொரு கவிதை சொல்கிறேன்.

காலத்தின் போலிகளிலிருந்து
வாழ்வின் போலிகளிலிருந்த
காதலின் கிளிக்குஞ்சு மட்டும்
ஒருத்தியின் ஞாபக உருவில்
உயிர் வாழலாகிற்று

ஒரு நிலாக்காலப்பின்னிரவில்
நீயும் நானும்
என்ன பேசிக் கொண்டிரந்தோம்
ஞாபகமிருக்கிறதா ?
முத்தம் சூழ்ந்த மங்கிய வெளிச்சத்தில்
ஏகாந்தமான இவ்விரவில்
தலையிலிருந்த பனியினீரத்தை
உன் தாவணித்துண்டு ஒத்தியெடுக்கையில்
என்னுயிர் நீண்டுபோனது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ சொல்லாமல் போன சேதி
இதயக்கடுப்பை
அதிகமாக்கிவிட்டது.

மறுபடியுமிங்கு
எப்போது வருவாய் ?

நீயுமொருயிடத்திலிருந்து
பச்சையணிந்தாய்
நானுமொருயிடத்திலிருந்து
சிவப்பணிந்தேன்.

இருவருமேயுறைந்து விட்டோம்
அவரவர் சுயவிருப்பில்

இனித்தனித்தனியாகப் பிரிகையில்
நமது உடைந்த காதலின்
குறுகிய கால முரண்பாடுகளில்
தடுக்கி

சிருஷ்டித்திறன்... சிருஷ்டித்திறன்
எனப்பேசிக் கொள்ளும்
சிவப்பு நிறத்திற்கு
இன்றைய முரண்பாடுகள் பற்றியெப்படிப்புரியும் ?

புதிய காலமும் முரண்பட்டு
புணருலாக் காலங்களில்
பல்லிகள், எலிகள், பாம்புகள் பூனைகளென
கலவிப்புணர்வின் உச்சக்கடுப்பில்
கண்முன்னேயே அவ்வுரு வெளிப்பாடுகளும் தொடர
தவிப்புகளாய்
காதலின் தவிப்புகளாய்,
அழகான மார்பகங்களாய்,
நீண்டு போன கூந்தலின் நாட்டியங்களாய்
தண்டுக்கால்களாய்
கைவிரல்களாய்
பட்டை தேய்ந்த நகங்களாய்
குறுக்கும்
நெடுக்குமாய் நினைவிலேறித்தவித்து
பின்னிக்கிடந்த பாம்புக் குகைகளுள்
ஒரு புள்ளியாய் நினைவிழந்து குவிந்தேன்.



கொலுசுகள் பேசும் ஞானராகத்தில்
என்னுள்ளுமவள் மெல்லெனச் சிலிர்க்க
மூழ்கி மூழ்கி எழலானேன்.

இருள் நுனிகளில் மல்லிகை வளர
நினைவின் குடைமயிலிறகு தடவ
தொலைவின் நினைவின்றி

நீ கண்ணிமைகளால் பேச
எதையும் புலர்த்தவுமில்லையே ?
உதடுகளும் மடிய
புலராததை மீண்டும் புலர்த்த
மரண சுகமும் விரிதல் கூடின

கண்முன்னேயொருவுயிர் அறையப்பட்டது
ஒரு குயில் மரணப் பாடலைப் பாடியது

மரக்கிளையும் உடைந்து வீழ்ந்து
வாழ்வின் மீது விலங்கிட்டு
என்னைச் சுமக்கச் சொன்னதும்
உள்வலிகள்
புன்னகையை கசக்கி வீசின,
ஒரு பௌர்ணமி பூத்த
இவ்விரவின் குளிர் அலைகளிலும்
அதன் கிளுகிளுப்பான ஓசைகளிலும்
வெற்றி வெளியாகி
கொலுசுகளும் பேசுதல் கூடின.

மென்தேடலில் ரகசியமாய்ப்புகுந்து
காலக்குறியில்
இனிமையான பாடலையும் சும்மச் செய்து
இராத்தாகத்தில் எரிந்து போன
சாம்பல் வழியே வெளிச்சமில்லாது
மணல் வெளிகளையும் நீளமாக்கி
ஜென்மவிரோதிகளையும் பயன்படுத்தி
உயிரைப் பிடுங்கி

அந்த ரேநத்தில் தங்கம் பளபளக்கும்
ஒரு சிற்றோடையில் எனையும் கரைத்து விட்டுப்போ
பின்னே
என்னைச் சார்ந்தவர்களையும்
சும்மா சும்மா பயங்காட்டி மிரட்டாதே

ஒரு விதமான நடுக்கம், கண்களுக்குள் புலப்பட்ட அவன், பின் இருள் உருவில் நிழலாகினான். மரணம் பற்றிய கதவுமொன்று அக்கணத்தில் திறந்த கொண்டதையுமுணர்ந்தேன். நினைவுகளுக்குள் வராத ஒரு உருவாய் திரும்பவும் கிளர்ந்தெழுந்தது.

இதுவரையிலும் அவன் எதையுமென்னிடம் சொல்லவுமில்லை.
நேரடியாகவல்லாது சொல்லித் தெரிந்ததுமில்லை.

நட்சத்திரச்சூட்டில்
உருகிவடியிதுவுயிர்
அவன் முன்னர் சொன்னதும்
வழிமுழுக்க ஞாபகமுமில்லை
எதையும்
காலங்கடந்து ஞாபகித்தால் எப்படி ?
பிளந்து கிடக்கிறது அவ்வுரு
சுவரில் அடர்ந்த சிவப்பும் செம்மஞ்சளுமாய்
அழகாகவே பிரிந்து, விரிந்து செல்கிறது.

துயரற்ற காதும் மனதும் அறுபடுகிறது
எப்படியும் விடியவும் வேண்டுமே . . .

கட்டாயமாக காதும் மனதும் அறுபடுகிறது
எப்படியும் விடியவும் வேண்டுமே . . .

கட்டாயமாக வேதனையில்
எனதிடம் சொல்ல வேண்டிய செய்தியை
வெறுமனே சூது கபடமேதுமின்றி
சூட்சுமமாக
அவனால் காண்பிக்கவும் முடிகிறது.

அத்தெருவிலும்
மனிதரற்ற வெறுமையில்
ஒரு பிணமும் காகங்களும்
நெளிந்து நெளிந்து மேய்ந்துதிரியும்
புழுக்களும் காத்துக்கிடக்கின்றன
இன்னுமொருவுயிருக்காக.

கம்மிய தொலை தூரத்தில்
மயக்கக் குரல்கள்
எனது செவிகளின்மீது
முற்றுப் பெறாது படிந்து
சிந்திப்புக்கு அப்பால் நின்று



சீரற்ற மனப்பரப்பில் நடனமிடுகிறது.

பிளந்து கொண்டிருக்கிறேன்.
பயம் தரும் இருளை.
இன்னும் நான்
சுயத்தை இழக்கவில்லை.
வாழ்நிலையை திட்டமிடாது போகையில்
தொடக்கத்தை வழி நடாத்த
சத்தியமாக எனக்குத் தெரியாது.

உலகின் பூமிக்கடியில்
நானுமொருநாள் அழுகிவிடுவேன்
ஒரு நாளில் நீயும் தனிமைப்பட்டுவிடுவாய்.
உனக்கு நிழல்தரும்
சூரியனும், சந்திரனும்
மிக விரைவில் விடை பெற்றுவிடும்

இனி
பறப்பனவும், நடப்பனவும், மிதப்பனவும்,
ஊர்வனவும், பிறந்து மடியும்
நேரமும் இதுவாகலாம்.

மனத்துடிப்பையாவது
நமது பின்னுள்ள சந்ததிக்கு விட்டு வைக்க
நானும் மிக அவசரமாய் மடிகிறேன்.
யாரும் தொடரலாம்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரணித்த பிறகு தேவதைகள்
## உயிர்த்த ஆகுதி

உன்னையென்பது இங்கு எனது இன்னொரு குரலைத்தான். என்னோடு நான் பேசுதல், அல்லது உன்னையும், என்னையுமெனக் கூறுகையிலேயே அதுவும், நானாகி மூன்றாகிறேன். ஒரு நிலையிலேயே பலதாகும் மாயாவியாக்கி யானமும், ஆன்மிகத்தளத்திற்கு அழைத்துச் செல்லும் முயற்சியே அன்றிவேறேதுமில்லை.

இங்கு நான்.
எனது இன்னொரு பரிமாணத்துடன் வாதிடலும் கட்டளையிடுதலு மாகிறது. ஈழத்துக் குடும்பங்களிடையே ஒரு பரவலான கதையிருக்கிறது. வேதங்களுக்கு அப்பால் பட்டது. பழமொழி மாதிரியான வாய்மொழிப் பேச்சாகவும், துயரங்கள் நிறைந்து விழிப்பில் சலித்துக்கிடக்கும் மனித உருக்களை, தேவதைகள் வந்து வானுக்கு அழைத்தச் செல்வதாயும், அவர்களுடைய துயர் தீர்க்க தீராகரிசனம் கொண்டு திரிவதாயும். அத்தேவதைகள் வந்து கடலில் கால்கழுவிச் சென்றிருக்கலாம். இங்கு நான். எனது துயர் அறிந்த இத்தேவதைகள் வந்திருக்க வேண்டும். முன்னெச் சரிக்கையாக நானும், என்னை தயார் செய்து கொள்ள விரும்புகிறேன்.

அவள்...
அழைத்தால் சென்று விட
இங்கு...
சிறகசைக்கும் ஒரு சில வார்த்தைகளில்,
தேவதைகள் மிதந்தெழும்
கனவின் மரணத்தோடு ஆழங்களுள் மிதக்கும்
தனித்த இரவின் புலம்பலோடு ஆகாய வெளியில்
ஒரே கணமுருகி மெல்லியராகத்தில் காடும்
ஒரு பாடலைப் பாடுகையிலும்
நீயென்னோடு ஆகாய வெளியில் சுழன்று

போலிகளாய்போன நிழல்களில்
அசையும் இருளையும் பிளந்த
வெளிப்பட நானம் உடன்பாடற்றவனல்ல.

நறுமணமற்ற இரவுகளில்
என்பற்றிய அனுபவங்களை சொல்ல நினைக்கையில்
அன்று நீயென்னோடில்லை.

அழகான நட்சத்திரங்களுக்கிடையே



சாம்பல் பூத்த காற்றுத்திசையில்
நீவிட்டுச் சென்ற
துயருற்ற பறவைகளின் குரலாய்
பிரார்த்தனைகளில் மீட்கப்படும்
உயிரின் பொருளை
நீயெவ்வாறு வார்த்தைகளில் உணர்வாயோ ?

நான் ரசித்ததாக உன்னிடம் கூறிய
அழகிய வார்த்தைகளுமின்றில்லாது போயிற்று

நீ யென்னைக் கொல்லுதல் வேண்டும்
மறுத்து விடாதே...
நானுனைக்கட்டாயமாகக் கொல்லுவேன்
நீ மூட்டு
காம உரசலிலே எலும்புகளின் இறுகலில்
நீ மூட்டு மனிதவுருவைச் சிதைக்க
மனதின் உள்ளாற்றல்பற்றி நீ
நன்றாக உணரவேண்டும்.

உள்வெளியின் மர்மகோளம் சிதறும் வரை
பறவைகளுடனும், மிரகங்களுடனும்
உனது முகத்தையும் காண்கிறேன்.

உன் உதடுகளும் கண்களும்
அசிங்கமாகவே தெரிகிறது.

மறைந்தெழுந்ததிலிருந்த குமுறுகிறது மனம். வாழ்வின் நரம்பையறுத்து, போலிகளின் காற்று வெளியில் சத்தமில்லாத கனவுகளையும், வாழ்வதைகளையும், விரட்டி விரட்டியெதிர்க்கலாகியும், அதுவும் அந்தரத்திலும் விளிம்புகளிலும் நின்று கொண்டே எதிர் கொள்ளலானேன். நிலைதவறி பாதாளத்தில் யார் விழுவதாயினும், புலர்வுகள் கலைந்த அது மரணத்தில் பலமாகதல் கூடும். உயிர் விலகி ஒடுங்கியென்னுள் நுழைந்த உடல் தளமெங்கும் நுண்ணிய வலியின் கோதுகளாய் தவக்கால ரட்சிப்பின் இடைநிலையே எதிர்ப்பட்டு மறைந்தும் போயிற்று.

நிஜங்களும் மனம் பாய்ந்து விடுபட கருக்கோளத்துள் மையமுற்றது
மனமும் நிழலும்,
ஆழ் கடலின் சங்குகளிலிருந்து
கரைதொடும் அலைகளிலிரந்து
மெல்லியராகத்தில்
கொலுசுகளும் சத்தமிட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த தேவதை அலைகளெழுவதற்கள்
கால்கழுவிச் சென்றளோ
அவளின் கொலுசுகளிலிரந்து
எழுகிறது...
எனது வாழ்வும்.

நீமிக

அவதானமுமாகயிருந்திட்டாய்
அவைபற்றிய தாகிப்புகளுமிப்போதைக்கில்லை.

உனதிடமிரந்து ரகசியமாகப் பேச
கொலுசுகள் நடனமாடும்
கரைகளில் நின்று கொண்டு
நாம் இருவருமே முடிவெடுப்போம்.

இப்போதைக்கு நீ
ஒரு அறையினில் தனித்திடு
நானும் ஒரு பறவைக்குஞ்சைப் போல்
மேலெழுந்து பறந்திட

வண்ணத்துப்பூச்சிகளின் சிறகுகளில் வர்ணந்தீட்டி அவள், படுத்திருந்த தென்னஞ்சோலை நெடுவெளிவழியே தேனமுத வார்த்தைகளையும் வெறுக்கலானாள். பரவசமடைந்ததில் துயரமெழுவதற்குள் சிறகுகளை களவாட முடிந்த அவளால், தனித்து என்ன செய்ய முடியும்.

நீ மனிதப் பறவைகளிலிருந்து
வேற்றுக்கிரகம் செல்ல வருவதாகவும்
என்னுடனும்
கிழத்திப் புணரவிருப்பதாகவும்
சில ரகசியங்களிலிருநது தொடருவதாகவும்,
தொலைவு வடிய மரணம்
மனதின் பதிவுகளாக
இளகிய மழைத் தூறலாய்
மணல் வெளியில் குவித்து
ஒடுங்கிக் கொள்வதிலிருந்தும்

வெறிகொண்டலையும் காலத்தின் மீதான

மெல்லிய மரண கீதத்திலிருந்தும்
அதிவேகமாக உரசத்தொடங்கின.



மீதியாய்
எலும்புக் கூடுகள் புதைந்த
வாழ்வெளியினில் நரகத்தை உணர்த்துவதும்
அதை மெய் நிகாவுகளால் புலர்த்துவதும்
எப்படிதயென்கிறாயா ?
வா அழைக்கிறது வேற்றுக்கிரகம்.

தூர மின்னும் நட்சத்திரக்கற்களுக்கப்பாலும், சமுத்திர வெளிகளுக்கப் பாலும், காலவதைகளையும் வாழ்வதைகளையும், என்னுள்ளிருந்த கனவுகளையும் அதன் வெற்றிட வெளிகளை நோக்கியும், மனம் மிதந்தெழும் அதிர்ச்சியில் விழுந்து சிதறும் வெள்ளிக்கோப்பையிலும் ஒரு மர்மமனிதனின் சிதை வினைப் போலவே குறுகியும், ஒடுங்கியும், புழுக்க ளின் முதல்படி நுகரியாகவும், கட்டியான இருள்வெளியிலும், நிகழ்வாழ்வெச்சங்களையும் நீயும் மறந்துவிட்டாய், நானும் மறந்து விட்டேன். வானமும் அதில் ஆணியிணைத்த பாதி நிலவும், மினுமினுக்கும் வெள்ளிகளும், அந்தரத்தில் கத்திவரும் ஒரு விடியாலாவின் விடியலிலிருந்தும், பனிப்பறவைகளின் மேலெழுதலும், உயிர்ப்பின் வெளிப் பாடும், அறைகளுக்குள் பூட்டப்பட்ட காலவதைகளும் மீண்டும் மீண்டும் எழலாகின.

கண்களினுள் வரும் கனவுகளும் மெய்ப்பட்டு அதன்வசமாகி விழவுமாக இனியும் மகிழத்தொடங்குவது எதன் நிமித்தம், வாழ்வின் கேள்விகள் நேர் எதிராக மனதில் முட்டுகையிலும், மனது எவ்வாறு தீ மூட்டி எரியுமோ அவ்வாறே அதன் வசமுமாக காற்றின் முதுகில் ஏறி எழுதத்தூண்டும் கவிதைகளில் மொழியை புணர்த்தாமல் விடுவது நையாண்டித்தனமாகி நா...தீவதையில் சுருங்கி ஞானத்தேடலையும் நிறுத்தி. நான் நினைக்கிறேன், சுற்றிச் சுழலும் பூமியின் ஆகாய வெளியில் தொடங்கிவிடப்பட்ட ஒரு சிறுவனது பட்டத்தைப் போலவே எப்பவும் மனதின் மகிழ்வும் துயருமாக எதையோ தடுக்குவதினூடே வெளிப்படும், அழகை அல்லது அசிங்கத்தை நகைத்து உமிழும் எச்சிலில் தொண்டை நனையமெல்லிய இறுக்கத்தை தளர்த்தும் சக்தி எதுவென்பதாவது உனக்குப் புரியுமா? இடைவெளிவிட்டு பின் தொடர் கையில் எதையும் ஒரு நிழலாகவே காண வேண்டிவருமா? என்ன சொல்?

சிலந்தியாய் சிக்கி
இனங்காணாத சடங்களில்
போர்வதை நிகழ்வுகளின் சலனத்தை

காண மறுக்கையில் மனம் மட்டும்
வலுவற்ற மனிதர்களிடமிருந்து எதைத்தேட
எது கிடைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலவின் வெள்ளிக் கொடிகளாகி
பின்னிய அலைகள்
மெல்லியராகத்தில் பாடின
இன்றும் நிழல் வெளியில்
காற்றின் இடைவெளி தூரமாகுமா ?

வறண்டு சிக்கிய உதடுகளின்
அழகிய சொற்களில் தொடங்கிய இடைநிறுத்த
அவசரமாகி
மண்படுக்கையில்
குளிரை உரசும் உப்பங்காற்று வீச

மிக
அதிக அதிகமான கவிதைகள்
எழவுமில்லை அவ்வாறான கவிதைகளை
நானின்றும் படிக்கவுமில்லை.

இறுதிப் புறப்பாட்டுக் காலம்
நினைந்தெழ மனம்
தீச்சட்டியை சுமக்க
மெல்லிய வலியை உணர
யாரால்தான் முடியும்.

எனது தனித்த
தியானச்சுவாலையுமசைய
மீளமீள பறந்து பறந்து
கண் சுழற்றிய கழுகும் வேறு திசையை நோக்க...

அதன் மிக்க கூரிய நகக்குறியில்
பெருத்த செம்பொடையனும் சுழன்று நெளிய
வானெல்லை யெங்கும் பறந்து
கள்ளிக்காடுகளிலேயே
அதன் குட்டிகளையும்
பீச்சுவதாயிற்று.

கனா வெளியிலும் விரிந்த உதடுகளில்
தேவதையின் வண்ணத்துப்பூச்சிகளும்
சிறகைவிரித்து
பனித்துளிகளையுமுடைத்து
செவ்வந்திப்பூக்களை காற்றில் தொடுத்து
நீண்ட அழகிய கூந்தலையும் அல்லாடவைத்தன.



அன்றும் இப்படித்தான்
நீயென்னை தீண்டியும் தூண்டியும்
விட்டுச் சென்றாய்.
இரவு கருகிய புல்வெளியானது.

இருள் படிந்த சிதிலங்களுக்கிடையே
ரத்தமும் வியர்வையுமாய் தொடர
அப்பாடாவென ஆனந்தித்தேன்.

முற்றத்து மாமர நிழலில்
கால் நீட்டி விரல்பிடித்து
கிள்ளி நோண்டி செவிகடித்து இடைதடவி
எத்தனை வருடங்களுமாகிற்று.

எனதும்
உனதும் சில
ரகசியங்களுக்கு வெகுதொலையில்
அபூர்வக் கனவுகளில்
மிதந்து மிதந்து நீடிக்கவுமாகிற்று.

இரவு முழுக்க தூங்கவுமில்லை
நிலாமங்கியது காற்றும் ஓய்ந்தது
தாழ மிதந்து போனது மேகம்.

பூமிபிளந்து ஆழமுறுகிறது
புரிந்து கொண்டேன்.
எங்கிருந்தோ
கனாவெளிகளுக்கப்பாலிருந்தோ
அதற்குமப்பாலிருந்தோ
அக்குரல் தொடர்ந்து கொண்டேயிருந்தது.

எனது பற்களுக்கிடையே
உனது கீழுதடு நசிய
மன . . .
நதி . . .
பறவைகளில் ஒன்று மட்டும்
மேலெழுந்து பறந்தது
அழகிய உதடுகளும்
மெல்ல மெல்ல மூழ்கியும் விட்டன

பின் கல்லும் முள்ளும் தடவிவரும்
மெல்லிய காற்றுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீயென்னில் கலந்திருந்தாய்
ஒரு கணப் பொழுதினுள்
மடியில் சாய்ந்து

கனவுகளில் மிதக்க
நிலாப் பழத்தையும் மெதுவாகதடவ

அப்பெரு நதியின்
அலைகள்
கரைகளை உரசிச் சென்றன

மூழ்கித்திளைக்க முடியாத
கண்களும்
விடை கொடுத்துச் சென்றன.

தசைகள் துடித்து
உணர்வுகளும் கிளறி
கனவுகளும்
நீண்டு சென்றன

உன் விரல்களின் நடுக்கம் புரிந்ததும்
மனநதிப் பறவைகள்
மேலெழுந்து பறந்து சென்றன

கட்டுடைத்து
எனது கனவில் வராதபூனை
நேற்றிலிருந்து பால் குடிக்கிறது.
வழியும் நிலவை குடித்து முடிந்த பிறகு
என் இரவுதான் அதுக்கும் கிடைத்தது.
நக்கி...நக்கி
சிறியதொரு இருள் எஞ்சியிருக்க
கனவுக்குள் இடம்மாறியது.

மாறி
தாலீப்பினதும் அலிமினதும் காதலை தவிர
இதில் வேறேதுமில்லை.

பூனையிலேறிச் சென்று
"கட்டுடைக்கப்பட்ட" தமிழ்
எனது ஊமைக்கனவுகளை
குருட்டு வெளிச்சத்தில் நடக்கச் செய்து
வசந்த காலகாடு முழுவதும் உறங்கச் செய்து



கண்களினுள் வாசல் மரமாய்
ஊமைக்கனவுகளும் பேச
விடிவை நோக்கிய
வண்ணத்துப்பூச்சிகளாய்
பூனையிலேனும் ஏறிச் சென்று
கட்டுடைக்கப்பட்டது.

மரணமும் மல்லுக்கட்டி
உன்போன்றோரின் பின்னணியிலிருந்து
ஒரு சரித்திரமும் உருவாகிற்று.

குரங்கின் கண்கள், ஆமைகளின் தலை, குருவிகளின் உதிர்ந்த சிறகுகள், புழுக்களின் கால்கள், பாம்புகளின் இதயங்கள், பெண்களின் மார்பகங்கள், கழுத்துப் புருவங்கள், அடர்ந்த கூந்தலின் மலர்கள், அழுக்குகள். மனமெல்லாம் கவிதைகளாகலாம்.

மனிதனைப்பற்றி பூமியின் அடியிலும் மனதினுள்ளும் ஆழப்பதிந்த அழுத்தத்தோடு வாழ்வை வெளிப்படுத்தி காலங்கள் உதிரும் மனித அரவணைப்புக்காக ஏங்கி மீண்டும் கர்வங்கொண்ட ஒருவனைத்தவிர யாருக்கும் தெரியாது.

புலப்பாடுகளும், வெளிப்பாடுகளும் இருப்பினும் ஒரு இரவு அழுதது செவிகள் கேட்டு கண்கள் புலர்த்தி மனம் தீப்பொறிகளைக் கக்கியது.

காற்றிடையே நிறைந்து மலர்களின் இதம் கொண்ட உணர்வற்ற கற்பாறைகளை வருடி மீட்கப்புடாது விடப்பட்ட வீணையிடம் காதுகளைத் தொலைத்து சுழலும் பூமியின் இறக்கைகளையுமுலர்த்தி ஒரு துளி வாசமும் மலர்களும் சந்திக்க முடியாத புள்ளியில் சுகங்காண முடியாது விடப்பட்ட வறிய கனாவாக ஆன்மாவையும் தழுவாமல் சென்று விட்டது. நம்பிக்கைகள் வெகு தூரத்திலுமில்லை. உறுதியான தியானங்களுக்குப் பின்னால் மங்கிப்போன நாத்திகத்திற்குப் பின்னால் இல்லையென்பதில் எதுவாகினுமிருத்தலென்பது மெய்ப்பட்டிருத்தல் வேண்டும். இதாவத உனக்கு தெளிவாக புரியுமா?

இருண்ட அறையில்
ரகசியத் தொழுகைகளில்
நேர்மையற்ற மனிதாபிமானியாய்
வெறுமையில்
அலையவிரும்பும் பரதேசியாய்
எப்பவுமேயினங் காணப்படல் கூடும்.
சில நாட்கள்
சில மணிகளுள்
சில நிமிடங்களுள்
சில கணங்களுள் மிக கிட்டாகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னையும் தொட்டு விடல் கூடும்.

என்னுள் மீளச்சூழ்ந்து தலைகோதி
அழுது ஆறுதல் கூறும்
எனது மனைவியிடமும்
விரல் நசித்து சுளுக்கிழுத்து மூச்சுவிடும்
எனது உறவுகளிடமும்
நம்பிக்கையூட்டும் நண்பர்களிடமும்
என்னுள் நடந்தவைகள் பற்றி
எவ்வாறு கூறுதல் முடியும் ?

எல்லா மனிதர்களும் நல்லவர்களாயில்லை
உள்ளுணர்வுகளை
வார்த்தைகளில் சித்தரிப்பது கடினம்.

அதுவுமே மனம் உலுப்பிவிடும்
ஒரு உணர்வுப் பூகம்பத்தை
மனித மொழியில் விபரிக்க முடியாது.

புதிது புதிதாய் வரும் வார்த்தை வெளியிலிருந்து
புதிது புதிதாய் வரும் கம்யூனிஸ்ட்டுக்களிலிருநது
கேட்டுத் தெரிந்தே ஆகவுமாயிற்று.

அறிய வேண்டியதை
அறிந்த கொள்ளுமிரவில்
புகைகக்கும் லாந்தர் வெளிச்சத்திரலமர்ந்து
எப்போதாவது
ஒரு நாளில்
குமுறும் மனதின் வெறுமையில்

கட்டாயமாக சித்திரப் பின்னலிற்குள்
ஒரு வண்ணத்துப்பூச்சியை வரைந்து
அதை பறக்க விடுவதற்கு காத்திருந்து
ஓய்வேயில்லாத அதிர்வினில்
இத்துயர் நிகழ்வை
சிறு குடிசைச்சுவர்களிடம்
பெரு வீதியோரத்து மர நிழல்களிடம்
தப்பிக்கச் செய்ய மனம் அவதியுறுகையில்
அதுவெறும் நந்தவனமாயிருந்தால்,
நான் மிக அச்சப்படுகிறேன்.
கேட்கப்படாத கேள்விகளாயும்
சொல்லப்படாத கேள்விகளாயும்



சொல்லப்படாத விடைகளாயும்
பிரார்த்தனையும் வறண்டு கிடக்கையில்
மெல்ல மனது மலர்ந்து காண்பிக்க
தொட்டாச்சிணுங்கியின் சிறு இலையும்
என்னிடமில்லாது போயிற்று.

காற்றுச்சுழல்களின் தழுவல் நிலையில், உனது மௌனத்தின் ஓசையினூடே எனது வார்த்தைகளையாவத உணர்வாயா? கலைக்கப்பட்டு விடாத, ஒரு அழகிய நறுமணமுமென்னை யழைக்கிறது.

பின் தனித்த மௌனத்திலிருந்து, இருளின் கண் நிழல்களோடு பேசியிருக்கின்றாயா? சில்லூறுகளும், சுவர்க்கோழிகளும், சில்லெனத் தொடர மௌனம் கலைந்து சில்வண்டின் நீண்ட கூவலில் காதுகள் கம்ம சுவர்க்கோழிகளும் இடைஇடையே ஓசையெழுப்ப அவதானமாக நின்று கேட்கலுமாகின. ரகசியமாக எரியும் நிலவின் நிழலில் நின்று கொண்டு நீ காதலின் சந்திப்பில் முத்தமுமிட்டாயா, அல்லது அவசரமிருகமாகி புணர்ந்தாயா? அதுவும் தவறின் பற்களை நீட்டும் பேய்களையாவது ரசித்திருக்கின்றாயா?

எப்படியாகினும் இவைகளை சத்தியமாக ரசித்தேன்.

தொடரும் இரவில் வாழ்வியலும், கனவுகளும் புதைந்த புலப்பட்டதை சத்தியமாக கண்டேன். நடுங்கி, நடுங்கி நகர்கையில் விழிகளுள் அழகிய தாமரையும் விரிந்து கிடந்தது. மனதும் சத்தியமாக விரிந்து கிடந்தது. நீ அதையாவது புரிந்தாயா? நீ எவ்வாறு கதறினாய்? அல்லமுது சிலந்திப் பின்னலில் சிக்கினாய்?

மனத்தடைகளையாவது திறக்க பூச்சி, கொசு, நுளம்பு இடைவெளியிடவும் சிக்குண்டு அது உணவுமாகிறகே தெரியுமா? கவனமாக அவதானித்தாயா? நீ நினைத்தவாறு கடுமையாகவோ, மென்மையாகவோ நிகழ சாத்தியமேயில்லை.

தாலீப்பினதும்[1]
அலிமினதும்[2]
காதல் வெளிகளிலிருந்து
ஞானமடத் திண்ணையின் ரகசியங்கள்[3]
ஆரம்பமாகிற்று
உள்வெளியின் ஆழத்துள் மூழ்கி
மனிதவதையில் உயிர்களைச் சிதைத்து

காலை முதிர்த்தும்
துயரச் செய்தியில்
மயிர்க்கான்களை விலத்தி
ஜன்னல் அருகே அமர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னுமொரு முறை உதடுகடித்து

தேய்நெடுவானில்
இழை பின்னி
ஒரு பொட்டுப்பூச்சியைப் போல்
குவிந்தது உள்வெளி

நட்சத்திர மினுப்புகளில் உறையவைத்த
என் முதல் முகப்பருக்களைப் போல்
நீ வேதனைப்படுத்தியெனது
நிழல் படங்களையும்
எழுத்துக்களையும் புதைக்கவிருந்த காலங்களில்

சிறகு முளைத்து
நட்சத்திர மினுப்புகளில்
பார்க்க முடியாதவைகளை மறுக்க.
தொல்லைப்படுத்த
அதன் வெளிப்பாடு எப்போதுவரும்.

அலைகளும்
ஒன்றையொன்று துரத்திக்கொண்டு
அந்தக் கரையினிலேயே
துயருடன் பிரிந்தும் விட்டன.

இனியும்
எப்போது மீள்தல் சாத்தியமாகும்

நினைக்க முடியாதளவு கடந்தயிருள் வெளியில்
நுழைந்த மீண்டும்

தாலிப்பினும்
அலியினதும்

ஞானமடக்காதல் வெளியில்
எனது நினைவுகளும் நிரம்பியாகிற்று.

செவிகளுக்குள் கனவுபாய்ந்தன
கடதாசிப் பூக்களும்
சிட்டுக் குருவியின் இறக்கைகளும்
தொடங்கவிடப்பட்ட

அந்த நான்குபக்கச் சுவர்களில்



மிக இருள் சூழ்ந்த நிலையில்
அதன் ஓவியங்களும் மங்கியே தெரிந்தன.

அப்போது நிர்வாண ஓவியங்களும்
மெல்லிய சுவர் நிழலும்
மனச் சுவரில் பதிந்திருக்கவுமில்லை
அது சந்தேகமானது
அவ்வெளிச்சம்
சூரிய வெளிச்சமாக இருக்க முடியாது
அதுவும் வேறு விதமானது
எப்படியும்
ஓவியங்களும் தெளிவில்லாமலும் போயிற்று . . .

எதைத்தான்
கனவுகளுக்குள் தேடுவது
ஓசைக் கவசங்களும்
செவிகளைத் தொடுத்தன
பாறை நெடுவாயே
உருவங்களில்லாத ஓவியங்களும்
ஓசைகளும்
மனச்சுவர் முழுக்க படர்ந்தன

குறிப்பு

1. புத்தி சுயாதீனமற்ற ஒருவன், 2. எப்படியாவது ஒரு பெண்ணின் உறவு கிடைக்க வேண்டுமென்று தாகித்துக்கிடக்கும் ஒருவன், 3. கவிதைகள் பற்றியும், தத்துவங்கள் பற்றியும் கருத்தாட நண்பர்கள் சந்திக்கும் எங்களது இருப்பிடத்தின் பெயர்.

எச்சில் விழுங்க முடியாமல் மனதின் விலங்கை உடைத்து வறண்ட நாவினால் அதன் இழப்பினையும் பாடுவேன். உலர்ந்த இரவின் இருளை நோக்கி கைகளுக்குள்ளிருந்த அதனையுமிழந்தேன். அதன் பின்னே உடல் உரு மயக்கிச் சென்ற இருள் வெளியில் கால்கள் பதித்து மிரண்டு திக்கற்று மலர்களும் பாடாத இருள் குவிந்த மௌனராத்திரியில் எந்தச் செல்லப் பெயரால் உன்னையும் அழைத்தேனோ அதே மயக்கும் சொற்களோடும் போய் வந்தாயிற்று இவ்விரவும்.

எப்போவோ
அதன் அடையாளங்களையும்
காரணங்களையும்
சொல்லியும் முடித்தாயிற்றே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னே ஏன் பின் தொடர்ந்தாய்
அது பற்றி மிக்க கவலை கொண்டாய்.
பிரார்த்தனைகளையேற்கும்
சில நிமிடங்களையாவது
உனக்கு தரமுடியாது போயிற்றே.

அதுவுமெப்படி
சொல்லி முடித்தவற்றை மீளசொல்லி முடிப்பது.
ஒரு புள்ளியிலிருந்த
உணர்வுக் கிண்ணங்களை
திருகி
ஒழுக்கவைத்தயிந்திரியமா ?

அப்போவோ
மேலே சொல்லி முடித்தவற்றிலென்று அல்லது
இன்னும்
உயிர் பற்றி விவாதிக்க போதுமாயிற்று

வாழ்வு பற்றிய காதலும்
மரணம் பற்றிய புலப்பாடும்
தெரிந்தேயாகிற்று
பின்னே யார்கேள்வி கேட்க
யார் பதில் சொல்லுவதும்


மினுக்குயெடுத்த நிலவில், என்னிடமும் ஒரு கனவுச் சுருளிருந்தது. அதுவும் இன்று தீய்ந்த போயிற்று. அதிகார சர்வபலமும், என்னையே குறித்த இலக்கும் வழமை போலவே தொடர உயிர்கொண்டு உடலுருகுமிரவில் மிக இறுக்கமான கையறு நிலையிலிருந்து வெகு தொலைவில் எண்ண அலைகளில் உள்மனது எதையுமே தெரிவிக்கவுமில்லை. ஆனால் மூச்சு அதிகமாகி தாள முடியாது தத்தளித்தது. பரிச்சயமற்ற இருளும் சத்தியமாக கனவுச்சுருளும் விரிந்து சிறகுகள் ஒடிந்த பறவைகளாய் விழுந்த கிடந்தன.

மறுபடியும் மௌனம் சதி கூடும் நேரத்தில் மனது புதையுண்ட தனிமையில் உயிர்த்தெழும் நியாயங்களையும் பாடிச் சென்றன.

எனது கவனங்கொண்ட உக்கிர வெளிப்பாடுபோது
படுக்கையறையின் ஜன்னல் கம்பிகளினூடே நகர்ந்து சென்றதையும்
பின் மின்மினிப்பூச்சிகளுடன் கூடாரமிட்டதையும்
நேற்றிரவும் பார்த்தேன்.
இன்றிரவும் அதே நிகழ்வுகளை
ஆவேசமான வெளிச்சக்கீற்றாக



சுழன்று தெறிந்தது கடந்து சென்றதை
நான் ஒரே நேரத்தில் பார்க்கவுமில்லை.

இடையில் நான்
ஒரு நடுத்தரப்பாடலையும் பாடிக்கொண்டே
மிக நெரக்கத்துடன் தொடர்ந்தேன்.
மெல்லிய குளிர்காற்று விரிந்து கிடந்தது

பின்னரும் தேடினேன்
திசை கிழிய புன்னகிக்கிறேன்
பின்னொரு நாளில்
அது பற்றிமிகத் தெளிவாக புரியவுங் கூடும்.

அப்போ
நீயும் கொக்கலிப்பாய்
தனக்காக அலைந்த கணங்களைத் தேடி.

மறுபடியும் விழிக்கத் தொடங்குகிறேன்
உள்ளார்ந்து
அச்சிறிய பாதையிலிருந்தே தொடர
நம்பிக்கை தரும் ஒளிச்சிறகுகளுடன்
என்று முடியுமோ இக்காலம்

மனது வலிக்காமல் மெல்லக் கிள்ளுகிறது.
எதிலும் பிடிமானங்களற்று
ஆசைகளை திரும்பிப்பார்த்தேன்
அது வானம் மாதிரியானதாயிற்று

இப்போதைக்கு
ஒரு ஊர்க்குருவி கூட உதவிக்கு வராது
வெறுமித்து கண்களை மூடிக்கிடப்பதுமல்ல தூக்கம்

மெய்யுணர்வுகளை யெல்லாம்
மனக்கிடங்கில் கிடத்தியெப்படி
துருவித்துருவி விசாரித்தாலும்
எளிதா விடைகளை தேடுவது

அக்கேள்விகள் மறுபடியுமெழக்கூடும்
ஒருவன்
இரவினில் காணும் கனவுகளை
பகலில் தேடுவதைப்போல

ஓசைகளும் காற்றிலுரச
பறவைகளினிறக்கைகளிலிருந்து
அவ்வற்புதங்கள்
நிலா வெளியிலும் மிளிரும்.

பிரமாண்டமான சாவின் படிகளில்
மிக நெருக்கமாயிருந்தவர்களும்
கடந்து போயும் மிக நாட்களாயிற்று

அழிக்க முடியாத வடிவில்
நானும் எங்காவது
எழுதிவிட்டுச் செல்வேன் அச்செய்தியை.

இன்றின் நடுப்பகலில் தீரா நிகழ்வுகளும், சூரியனை கலைத்து விட்ட கனவும் பொய்த்துப் போயின, தனித்த வாகைமர நிழலிலும் காற்று கூடாரமிடவுமில்லை. எந்த நாளையும் போல் இன்றும், கவலையில்லாமல் சதையிடுக்குகளில் மௌனமும் கலையாது தவம் செய்கிறது. மனம் மரத்துப்போய் கண்ணீர் விழும் கோடுகள் இன்னும் காயவேயில்லை. இத்தனிமையைபோல ஆறுதலுமில்லை.

உண்மையாக அமிழ்தலில் வாழ்வும் சிக்கியது,
மனது நொந்து போய்த்தான்
எதையாவது எழுத ஆரம்பிப்பேன்.
ஆயினும் கிள்ளியெறிந்து விடப்பட்ட
மென்மை கட்டாயமாக விடும் படியுமாகின.

நிகழக்கூடாத உறுத்தல்கள்
சத்தியமாகயிப்படியுமாகின
இனியொருபோதும்
இப்படியெல்லாம் நடக்குமென
கொஞ்சமாவது நம்பமுடியவுமில்லை.

அதுவென்பதுமிருக்கிற தோயில்லையே
அச்சம் தோய்ந்த முகத்தை சுடுமணலில்
பயங்கர அச்சத்தோடு காண்கிறேன்.
பறிபோகாத விழிகளில்
சிதைந்த கனவுகளையும் சபிக்கிறேன்.

மனம் திமிருகிற நேரத்தில்
மதுங் கொண்டலையும்
நா தொண்டையிலிருந்து கக்குகிறது.



ஒரு சாய்வு நாற்காலியும், வெள்ளை நாயும் விடியும் தருவாயில் யாரோ ஒருத்தியின் கடைசிப்பக்கங்களின் எழுதவேண்டிய குறிப்புகளும் சதாவர்வமும் தியானித்து பெறப்பட்ட கனவுகளிலிருந்து குயில்களோடும், காகங்களோடும், எஞ்சியிருந்த சில நிமிடங்களோடும் எழுத வேண்டும் நூற்றுக்கணக்கான கனவுகளும் சில குறிப்புகளாயிற்று.

அதிகாலையிருளில் வேதனை தொடுத்து
படபடவெனும் ஓசையில்
இறக்கைகளை விரியவிட்டு
மனது மயங்கிய ஒலியில்
வலிதொளாது மௌனமாய்
அது திறக்கவுமாகிற்று.

வெளிர்சிவப்பு வண்ணம் பூசி
பனிமுள்ளில் மோதி
மென்மையாகவுடைந்து குழைந்துபோயிற்று.

ஒரு
மையமிட்டு அழுத்தியவுணர்வும்
வெட வெடப்பில் துடித்து
எதுவுமேயில்லாது போயிற்று

முற்றத்து ஜன்னல்ச்சீலை விலகி
குளிர்காற்றுச் சுகத்தெளிவில்
இளகாத இறுகாத வடிவுமுமாகிற்று.

வாய்பிளந்து துளிருமிலையில்
நா சுழற்றும்
குரூரத்தின் உரு பூண்டுதிடுமென
பிணத்தைப்போல துவங்கி
அம்முகமும் திறந்தே கிடந்தது.

தினமும்
வாசல் வழியாக ஊளையிட்டுச் செல்லும்
வெள்ளை நாயும்
சுருண்டு பிடித்தபடி தலைமாட்டில்
கருவாய்தரித்த கேள்விகளுடன்
செத்தே கிடந்தது
காலை வெயிலும்

முன் விறாந்தையில் விா
ஒரு கைப்பிடியில்லாத சாய்வு நாற்காலியிலமர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிக்கணக்காக எழுதிய குறிப்புகளை
மீளவும் படிக்கவுமாகிற்று.

இனி மகளுமெழுந்து விட்டாள்.
மார்பில் சின்னஞ்சிறுவுயிரும் துடித்தது
இடைவெளிகளற்று மனம்
பீறிட்டுக் கிளப்புமுணர்வுகளை
யாரிடமாவத சொல்லியாகவுமாகிற்று.

ஆழ்துயிலிலிருந்து எழுப்பி
மனிதச் சதையை உயிருடன்தின்றன
விண்ணுடுக்களில்
ஆமைகளின் உரு
விண்ணிலிருந்து பெருமளவில்
வெவ்வேறுபட்ட பிரகாசத்துடன்
பல பல நிறங்களையுடைய ஆமைகளினுரு
விண் கங்கையில் நீராடி
தொலைவிலிருந்து மெல்லயிறங்குவது மாகின.

எளிதில் தென்படாத புதிய முட்டைகளவை
வெண்ணிறமுகிற் கூட்டம் வெடித்து
நீலம் சிவப்பு பச்சை மஞ்சள் நிறங்களில்
நீண்ட கழுத்துகளுடன்

மிகக் கூரிய நகமுட்களுடன்
அகன்ற கனா வெளியிலிறங்குவதுமாகின.



# நடுக்காட்டில் நின்று திசைகளில்லாத போது

மனிதத்துவக்குரலாக வெளிப்படுகிறது. இவ்வதிகாரம் சகதேசத்தவர்களுடைய மனசாட்சியின் முன் சிறு தகவல்களேயன்றி வேறில்லை. ரகசியமாய் தொக்கி நிற்கும் உங்களது சிந்தனை எனது வார்த்தைகளால் வேட்டையாடப் படுகின்றது.

வாழ் தேசத்துக்குரிய அடையாளங்களை அது இழந்து விடாது என்பதை ஒரு எழுத்தாளனாய் ஒரு கவிஞனாய் நின்று கூற விரும்புவதுதான் இது.

குறி சொல்லும் எழுத்தாளர்களிலிருந்த நான் பிரிந்து செல்கிறேன்.

சகதேசங்களை மதிக்கத் துணிந்து விட்ட ஒரு பேனாவுக்கு தனது தேசத்தின் பண்பாடு மீதான தாகம் அதிகரித்துக் கொண்டிருப்பது இயல்பானது.

பல குரல் சுதந்திரத்துக்கு மாற்றாகச் செல்லும் நிறுவன அமைப்பிலான சிந்தனை உருவாக்கத்தை சொற்களையாவது வீசி தகர்க்க விரும்புகிறேன்.

*ஒன்று*

உனது காரமான கேள்விகளை உணர்கிறேன்.
கவனி,
ஒரு நிலாக்காலம் வருகையில்
நான் நம்புகிறேன்.
காம நரம்பிறுகி உழன்றயிரவுகளில்
அவளுக்கு கொஞ்சமாவது வலியிராமலிராது.
சிறிதளவாவது மனிதத்துவமுண்டு
நான் எதிர்பார்க்கும்
ஒரு புள்ளியை அல்லத
ஒருமையத்தைக்குறித்து
நீயும் தேடிக் கொண்டதாக என்னால்
முழுமையாய்
நம்பமுடியவுமில்லை.

நிச்சயமாக உனது தேடல் வேறு
எனத தேடல் வேறு
ஆயினும் நம்முள் முரண்பாடாகா...

எதுபோலி? எது உண்மை?
தினந்தோறும் தொடரும்.
ஆழ்மனவுணர்களில்
என்னுள்ளும்
எவ்வாறு குமுறுதல் முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்முன்னேயே
மரண எச்சரிக்கையின்றியே
அது தென்றலைப்போலல்லாது
அது அழகிய நதியைப்போல்
வெகுதூர காதை வழியே
ஆந்தையின் கண்களைப் போலவே பயமுறுத்தின.

தொடர
உனது திடையும், கூந்தலும்
மல்லிகைவாசத்தோடு தேடிவந்தன.
காமப்போர் மேகம் மூடி.

*இரண்டு*

ஒருத்தியின் கேள்வியை தொண்ணூறுகளின்
நாட்குறிப்பேடுகள் ஞாபகமூட்டின...
"நிலா வழுக்கி கடலில் விழுமா ?"
"ஆம்" "நீதான்" விடை.

இனிய வாழ்வும் அவகாசமற்றதாயிற்று
நம்பிக்கைகள் யார் மீது
பூனைகளின் நீண்ட புணர்விலா ?
நன்கு கவனி
மனிதப்புணர்வில் கிடைக்குமதிர்வை விடவும்
சுவைத்து அதனுள்ளே முழுமையாக
மூழ்குவதே அதிகசுவையானது.

மிக ஆழமாக
மிக அதிகமாக குழம்பி விடாதே
அவதானமாய் கவனி
நீ திண்மமா ? திரவமா ? வாயுவா ?
விடையில்லாமல்
நான் எப்படி உணர்வுகள் பற்றியோ!

உள்ளுணர்வுகள் பற்றியோ
நானும் எப்படி புரியவைப்பதும்
வாழ்வுக்கோ மரணத்திற்கோ

அவகாசமுமில்லாது போயிற்றே
என்ன ?



திரும்பவும் குழம்பி விட்டேனா ?

அல்லது
யாரையும் குழப்பிவிட்டேனா ?
எது மையம் அல்லது புள்ளி
எது சுவை
எது கொடுமை
உயிரா ? உணர் கொம்புகளா ?
நீயாவது என்னையும் புரிந்து பேசு
விவாதிப்பதாயினும் விவாதிப்போம்
இன்னும் புனிதமான தாய் நிலத்தில்
நிறைய விரிவாகப்பேசுவோம்.

யாரோ ஒருத்தியின் எப்போதைய கேள்விகளிலிருந்து நீ நன்றாக புரிந்த கொள்ளவுமில்லை. ஒரு காலத்திலேனும் புரிதல் கூடும். சிறகுகள் முளையாத குருத்துப் பருவத்தில் நன்றாக இருள் நிறைந்த பூமியில் கால் பதிப்பதற்கான கேள்விகளையும் தொடர... கண்களினுள் அவ்வுரு தோன்ற விலங்கு நாவையும் ஊமை வார்த்தைகளையும் கண்டு கொண்டேன். அலை அலையாய் அதுவுமெழ நா வயிறுள்ள ஒரு மிருகமாகியது.

நீ அப்போவுமே நம்பமறுத்தாய்
அதுவுமெனக்குத் தெரியும்
என்னயிருக்கிறது போலியாக மறுக்க
ஒற்றையிரவினில்
இருளில் மூழ்கி நாதியற்று அல்லது உதவி கேட்டு அலற
என்னுள் மிக அதிகமான பயமும்
நீளமான
மனிதவிலங்கையும் காண
வானின் முட்டையுமுடைய
நிலாவுருகி மீள உருவாக வர்ணங்கலந்த கனவில்
நின்றயிடத்திலேயே கண்களால் தீமூட்டி
அதன் மீதான பிரார்த்தனைகளையும்
வெகு நீளமான மனிதவிலங்குகளைத் தாண்டி
மனம் மட்டும் தவித்து போராடியது.

இது
தொடக்கமா ?
அல்லது முடிவா ?

இது
இருத்தலா ?
அல்லது மறுத்தலா ?
சொல்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம் மட்டும்
அமைதி தொடாத நிலத்திலிருந்து தோன்றுதல்
எவ்வாறு சாத்தியமாகிற்று.

எவ்வாறு தியானம் கூடுமோ
அவ்வாறே அமைதியும் பெறக்கூடும்.
ஒரு
மையமனநிலையில் மூழ்கியமைந்து,
நிம்மதியாகிட நீண்ட பயணத்தில் என்னுள்ளிருந்த பின்னலில்
சிக்கி உள்ளுணர்வுகளும் முழுமையாய் தொட்டு விடமுடியாத
தவிப்பில் திக்கற்ற வெளியை அடைய ஞான வெளி
நிரம்பியாகிவிட்டது.

மென் காற்றின் நுனியில்
மிக ஆழமாகவே அது வருடி சுகப்படுத்தின
கனதியான ஒவ்வொரு நிமிஷத்திலும்
அதையே தொட்டு
மனம் வெறுமைப்பட்டு
எல்லாமே போலியுமாகின.

ஒரு ஆதிமனிதனின் வதைகளை
மீளவும்
எழுதத் தொடங்கலாயிற்று
அழகிய கனா வெளியில்
அவைகள் மீள வந்தபோது இன்றும்
வானமும், பூமியும் கும்மெனயிருட்ட
பூத்தாவும்
மென்காற்று எப்பவும் போலவே

குறுகிய இடைவெளியில்
புதிய நட்சத்திரவுருமினுங்க திகைத்தேன்.
உள் மனமும்
ஆயிரம் கேள்விகள் கேட்டது.
கடினமானதாக கூறும் கேள்விகளுக்கு
மிகப்பிழையான பதில்களைத்தான்
நான்
கேட்க வேண்டியுமாகிற்று.

கலைந்து பரவும் குளிர்வெளியில்
பெருங்கனவு உதிர்த்தும் துளிகளிலிருந்து
எதையுமே தேடவும் முடியாது போயிற்று.



எதையுமினி
பதில்களாக கேட்க முடியாது.
பிழைகளாக கேட்கவும் முடியாது.

லாந்தர் மினுங்கியுடைந்த கூடாரங்களுள்ளே
உயிர் குடிக்கும் சாத்தானின் புதிய நடமாட்டமும்
ஆதிச்சாத்தானின் உரு
நிமிர்ந்தெழுகிறத நிழலாக.

*எல்லாப் பண்பாட்டுக் கூறுகளிலும், புதியதொரு கலாச்சாரமாக சாத்தான்களின் கூடாரமும் அசைய உள்ளிருந்து இன்னும் அதிக அதிகமாக மிகப் பழமை வாய்ந்த சிற்பங்களும், எலும்புக்கூடுகளும், செம்மண்ணும், சாம்பல் பூவும் மேலெழ... மேலெழ நிலவு உருகும் காலமொன்றில் அவசர சாத்தான் குஞ்சுகளுமாகின. சிறியதும் பெரியதுமான கூடாரங்களுள் தீ கொதிக்க எனக்கு இரு சிறகுகளும் முளைத்துவிட்டன. உணர்கொம்புகளும் மிக நீளமாக நீண்டும் விட்டன. அதையும் நீயன்று மறுத்தும் விட்டாய். குறிப்பொன்றும் குறிப்பிரண்டும் சாடைகாட்டுவது தமிழ் ஈழப்போராட்டத்தில் முஸ்லிம் பள்ளிவாயல்களுக்குளில், வயல்வெளியில், கிராமங்களில் அனாதரவற்று உயிரிழந்த அப்பாவிப் பொது மக்களின் நினைவாகும். அதன் தகவல்களை கருத்தியல் தளத்துக்கு கொண்டு செல்லும் மனித நேசக்குறிப்புகளாகவேயிது பதிவாகிறது.*

தலைகோரித்தடவி வேதனைதொடுத்து
மனம் விம்மியழுது
உட்சுவரில் நிமிர்ந்தெழ
இருகைகோர்த்து வாழ்வும் காவுகொள்ள
ஆழமாக பிதற்ற

இறுகப் பிணைந்த உறங்குகையில்
சாமத்தில் கண்விரித்துயென்னுள் நடக்கும்
சாத்தியமில்லாது நடக்கும்
நிகழ்வுகளிலெல்லாம்
நம்பிக்கைகள்
காலங்கடந்த சமாதிகளைப்போல் பாசிபடிந்து
எல்லாவித விரோதிகளையுந்தாண்டி
மரிப்பை நேசிக்கும்
விழிகளுடன் உண்மையாகப் படபடக்கும்
உயிருடன் நானும்

தேடல்களும் எழுத்துக்களும் புலப்பட
இத்தனை நாட்களாய் தொடருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று மனித உருக்கள் மனிதத்தாவரங்கள், மனித விலங்குகள் மனிதப் பறவைகளென பூமிபிளந்து கொப்பளிக்கலாயின. காற்று நிரம்ப வெந்து உருகி துடிப்புகளுமாக பறவைகளின் காற்று வெளியும், பனித்தூவலும் ஆகாயம் நோக்கி துடிதுடித்து இறத்தலாகின.

ஒரு
தெளிவற்ற தொலை தூரத்திலிருந்து

அது
கிட்டுமோயில்லையோ
உள்ளுணர்வுகளுள் மூழ்கி
அது
ஆழமான இடைவெளிகளினுள்
வானங்களின் ஏழாம் வானத்திலிருந்து
மெய்யிழப்பின்
போலிகளும் வெளிப்படலாயிற்று
தனித்தலைய விரும்பும்
மனிதாபிமானியின் குரலிலிருந்து
புரிதல் பற்றிய சிக்கலான துயர்களும்
முற்றுப் பெறாது போயிருக்கக்கூடும்.

இன்றிரவு அதிக புறப்பாடுகளும்
மிகுந்த
புதிய வரவுகளும் நிகாவுமாகிற்று.

செவிகள் அடைபட்ட உணர்வதைகளினுள்
உயிர்களாய்
கண்களாய்
பூமியின் அசைவுகளினூடே
மீளெழுந்து
தூர வெளிகளிலேயே புலப்பட்டது.

நெளிவும்
அசைவுங்கொண்ட புள்ளிகளாய்
காற்றுவெளியில் அதிகமாகவே படபடத்துப் போயிற்று.

பின் விரிந்த சமுத்திரங்களிலிருந்து
உட்சுவாச பெருமூச்சிலிருந்து
உரு
இறுகலாகி வெளிப்படவுமாகிற்று.

மெய்ப்படாத வதை வாழ்வினது கண்பிடுங்கும்



பறவைகளைப் போன்றே
இன்றென்னுடன் நீ
மயிர் சிலிர்க்கப் பேசி முரண்பட்டுக் கொண்டாய்.

கேள் அன்றும் உதடுகடித்து
நீ அன்பியலில் தோற்றே போனாய்.
நட்சத்திரக்கோர்வையில்
உன் பற்களும் பிணைக்கப்பட்டிருந்தது.

நீ அடையாளமிடுவாய்
சொல்லியும் சாத்தியப்படாதவைகள் பற்றி
சிக்கலான கேள்விகளை
எப்படி மீளச் சொல்லுதல் முடியும் ?

இறுக மூடிய கண்திறந்த வர்ண வெளியில்
உருவற்ற தியானம்.
கடுமையாக நிகழ்ந்தே முடிந்தது.
மீள அது நினைக்க முடியாத கருவில் தொடங்க
மல்லிகையின் வாசத்தைப்போன்று
காலமும் தோற்றுவிக்க கூடும்
அல்லது அது
தோற்றுவிக்காது போகவும் கூடும்.

இங்கு வரும் காக்கிச்சட்டை பேரினவாத அரச இயந்திரத்தின் இலகுவான பொருளாகும் சாதாரண நிகழ்வுகளையே கலங்கச் செய்யும் சமிக்ஞை தனிப்பட்ட நபர்கள் அல்ல. நீயென்பது சிங்கள தமிழ் முஸ்லிம்களின் கடந்த, நிகழ்கால செயற்பாடுகளின் சித்தரிப்புகளேயன்றி வேறில்லை.

காக்கிச் சட்டைகளுக்குள்ளிருந்த பார்வைகள்
இடைவெளிகளை நிறைக்க
வீரக்கைகளையும் கால்களையும்
சிலுப்பிஇணைத்து நீட்டி சவட்டிமிதித்து
தலைமுடியை சாய்த்து
துளிரும் அரும்புகளை நசுக்கி விரல்மடித்துப் போயின.

நிறம்மங்கிப் போவதிலென்னுள் பயமதிகம்.
நிழலாகத் தொடரும்
மரணத்தைப்போல
மனமழுது தாங்கமுடியாது தாங்கும்
வாழ்வின்
ஒரு நள்ளிரவினில்
உன்னை சந்திக்கத் தோன்றியுமாகிற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பவும்
தெருக்களில் முன்புபோல்
சவப்போர்க்குரலொலிக்க
நிலா உதித்து
மெல்லிய கவனத்தில் படாதயிருள் வெளிற
நிலம் முழுக்க ரத்த ஆறுமாகிட

நீயும்
குறுக்குவழியால் நுழைகிறாய்
இது தவறான வழி
நன்கு கவனி
தியான முடிவற்ற வெளியில் எதைச் சொல்வாய்?

புரிய முடியாதவுனதியலாமைக்குரல் அதிர
மறுபடியுமென்னுள்
இன்னுமொரு ஞானக்கருத்தைச் சுமந்தபடி
வெளியினில்
எரிந்து சாம்பலாகின
வெயில் பூக்களைக் கருக்க
கொலை வெளிகொண்டேயென்னைக் காண்பேன்.

கால்கள் நீள பயத்தில் நீ நடுங்க
உன்னிலிருந்து எதையும் கேட்கவுமாட்டேன்.

எமது நிலப்பரப்பில் சுதந்திரமாக
பயணிக்கமுடியுமென்கிறாயா?

இது
மிகப்பொய்.

சொல்
அல்லது
அவைகள் பற்றியுமாவது வந்ததா?
உன்னால் முடியும்
நீ யெதற்காக முற்றாக மறுக்கிறாய்.
விலங்கிடப்படாத ஓநாய்க்கூடுகளுள்
எதுவுமே தெரியாது
துள்ளிக்குதிகரும் மான்குட்டிகளைப்போல்
திக்கற்ற வெளியில் அதன் நடமாட்டமுமாகின.

மிரண்டமனதில் அச்சமும் பயமுமாகின
முதிர் முதலைக்கூடுகளிலிருந்து



அது
பதற்றமுடன் தொடரலாகிற்று.

தலைகீழாகத் தொடங்கவிடப்பட்ட
ஒரு மனிதவுருவென்னுள் புலப்பட்டும் விட்டது.
மறக்க முடிந்தவுனது காதலையும் மதிக்கிறேன்.
நீயென்ன நினைத்தாயோ தெரியாது
பார்வை மட்டும் புரிந்தது
ஓநாய்க் கூடுகளும்
முதலைக்கூடுகளும்
நாதியற்ற வழிகளுக்குள் தவிப்புகளுமாகிற்று.

ஒரு சிறிய இடவெளியுள் மிகப் பெரியவுருவை எவ்வாறு அவ்வெளி நசித்து
மறுதலிக்குமோ அவ்வாறே போதையூட்டிய கண்களோடு தனித்த
கிளையிலமர்ந்து என்முன்னே அது உறவாடியது.

நா.

மனதின் வார்த்தைகளதிகமாகின உயிருடன் டயர்களிட்டு தீமூட்டி
எரியத்தொடங்குமொருவுயிர் எவ்வாறு நடக்கத்துணியுமோ . . . அவ்வாறே
ஒவ்வொரு பொழுதும் அனுபவிக்கின்றன இவைகளை இயல்பில்லாமல்
முக்கியெழுத முடியாது.

திரும்பவுமொரு குறுக்கீடு
இதன் ஆழ் ஊத்துப்புள்ளியிலிருந்து ஆரம்பமாகிற்று.
திக்கற்று
மல்லாந்து கிடந்து ஊளையிடும்
ஓநாயினழகைபோல்
உட்புகுந்தவிட்டன?
அது இறுகிக்கட்டியான நிலையில்
கண்கள் திக்கற்றுத் திகைத்து
மனமுழுவதும் படரலாகின
ஒரு பூனை பதுங்குவதை பார்க்கிறேன்
ஒரு அணில் கத்துவதைக் கேளாது...
அதுவுட்புகுந்த வேகத்தில்
உயிருடலெதுவென புலப்படுத்தின

எதுவுயிர்
எதுவுடல்
அப்போ நான் யார்?
அந்தரத்தில் மிதக்கிறேன்
பின் வெட்டப்படுகிறேன், தைக்கப்படவுமாகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு ஆலம் விழுது சிலந்தி மாதிரி கொடிமனதைச் சுற்றிய
காலங்களோ தெளிவான தடைக்கல் பாதைகளுமாகிற்று. மன
மெல்லையில்லாமல் திக்குமுக்காடியது. நீண்ட காதைவழியே

அழகியமலையும் மூழ்கியெழத்தொடங்கின.
ஒரு பயணக்குறிப்புக்காக.

தடை நீக்கப்பட்ட
அரசபடைக்காப்பரண்கள்
சிறு அழகிய ஓடைகள்
சிதைந்த முகங்கள்
சில சம்பவங்களென
தேடல்களினூடே நகரலாயிற்று.

ஒரு படகு பயம் உரையாடல் காதல்
கவிதையெனக் கடினங்கொண்டு
ஒரு கற்பாறையும் பேசியது.
சத்தியமாக
சப்பாத்துமிதிப்புகளில் தப்பிய
மெல்லிய செடிகள் துளிர்க்கலாயிற்று.

மேகங்கள் கருக்கொண்டு
பூமியை நனைக்கத்தொடங்க
துப்பாக்கிகளில்
முகம் பார்க்கும் முகங்களுக்கு
எது புரிந்ததோ எது புரியவில்லையோ...
கண்கள் விரிந்தன.

மூக்குத்தி, கம்மல், கம்பிக்காப்பு,
சின்னப்பொட்டு,
புருவத்தினருகில் மச்சம்.

மூச்சடைத்து திசைகளற்று திமிரலாகின
அந்த காக்கிச்சட்டையின் கேள்விகளுள்
நானும்
பலவீனங்களையடையாளங்கண்டு
நீள் பயத்தில் மூழ்கடிக்கப்பட்டு மிக நாட்களாகினும்
அது
கரு நிழலாய் தொடர்ந்தேயாகிற்று.

வாழ்வு கடினமானதுமல்ல
புரிதல் புலப்படானதுமல்ல



நீ சொல் வாழ்தல் கடினமானதா ?
அல்லது
உனக்குயின்னும் தோன்றவில்லையா ?
முன்புமொருமுறை சொல்லியிருந்தேன்

வாழ்வு கடினமானதென்று
அதுவுமின்று பொய்.

நீ
நின்றயிடத்திலேயே நின்று கொண்டு
எதைத் தேடப் போகிறாய் ?

தொடர...
கொஞ்ச நம்பிக்கையிருந்தது
அதுயின்றும் தோற்கடிக்கப்படவில்லை.

உனக்குப் புரிகிறதா ?
எதிலிருந்து வருகிறது நம்பிக்கை
முன்புபோல் நீ
எங்காவது கேள்வியுற்றாயா ?
முடிந்தால் தொடரு
எனக்குமின்னுமதிகமாய் கற்றுத்தா ?

உன்னை அலங்கோலமாகத் திட்ட
எந்த அழகிய வார்த்தைகளுமில்லை
ஆனாலும்
நீயின்னும் பொய் சொல்கிறாய்
அல்லது நன்றாக நடிக்கிறாய்
சந்திப்போம்
சத்தியமாக நாமொரு நாளில் சந்திப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குகைவாசிகளும் ஒற்றைத்தோற்றமும்

விதியைத் தீர்மானிக்கவெனவென்னுள் விரிகிறது ஒரு சமுத்திரவாழ் வெளியொன்று. வெளிச்சங்களைத்தாண்டி இருள்வாயொன்றினுள் புகுந்து, பதுங்கிக்கொண்டது. இன்னும் மிதக்கும் அந்தரத்தில் தாவியலல்லாடுகிறது. அதே ஒற்றைத் தோற்றத்துடன்.

இங்கிருந்துதான் விரிகிறது, அதன் குகைவாயினுள் நான் கண்ட கனவுகளுள் நீயும் குருடாகவே தோன்றினாய். எதையும் மறுக்காதே என்னையும் நம்பு, எதிலும் புரிதலுக்கு, அவகாசமுண்டு. என்னால் நிகழவிருக்கும், சம்பவங்களும் முரண்பாடுகளாகவே தோன்றியாகின.

நீ உறுதிமிக்கவனாய்
தனித்தவனாய்
ஆழமான அன்பை
மனதுள்மிதக்கச் செய்பவனாய்.
துயர்களைத் தருபவனாய்.
நான் கண்ட கனவுகளுள்
தோன்றியுமாகிற்றா.

உனது கடவுளிதுவெனவாதாட
எனது கடவுளிதுவெனவாதாட
இது
விவாதமுமல்ல.
வேகமான சிந்தனைத்தளத்திலிருந்து
மிக இயல்பாகப்பேசு

எது உன்னில் புலப்பட்டவை
எது என்னிலிருந்து புலப்படாதவை
ஒரே இயக்கத்திலிருந்தேதான்
சந்தேகங்களையும்
உருவாக்கியிருக்க வேண்டும்.

தீச்சட்டியில் விழுந்த புழுவாய் உழன்றுதுடித்து உருகி வழியவுமாகிற்று மனதும், நான் சிறுவனாகயிருக்கையில் வெட்டுக்கிளியடித்து சுடுமணலில் புதைத்து, தும்பிகள் பிடித்து, மாட்டுத்தொழுவத்தில் சாணமுருட்டிய வண்டுகளின் காலங்களிலும் கடதாசி கட்டிபறக்கவிட்டு காகங்கள் பிடித்து, கழுத்தில் சலங்கை கட்டி பறக்கவிட்டு தொண்டுவைத்து ஓணான் பிடித்து

புகையிலையும் பாக்கும் கொடுத்து ஆடவைத்து தொட்டாச்சிணுங்கி இலைகளைத் தொட்டு சுருங்கவைத்து, பப்பாசி மரக் குழாயில் சவர்க்கார முட்டைகளுமிட்டு, ஞாபக அலைகளில் மிதந்து மேலெழ தனிப்பட்டு மகிழ்வாக தொடரலாகிற்று.



சொற்களை முன்வைப்பதும் பிரிப்பதும் இணைப்பதும் கடினமானது. குழப்பவும் முடியவில்லை. இன்றைய சிந்தனையின் தெளிவுகள் ஒழுங்குபடுத்தவும் கூடும்.

குமைந்து குடைந்து
சொல்லவந்தவைகளை யிடைநிறுத்தி
கண்களும் கனவுகளும்
மனதின் நிழலாக
புதைக்கவைத்தவைகளாகவே யாகிற்று.

அந்தக்காலமும் கடந்துபோக
இன்றிலிருந்து
நீங்கள் யாருமென்னிடம் அதிக கேள்விகளும்
கேட்கவேண்டாம்.
நாவிலிருந்து தப்பித்துவிட
ஒரு சிறிய பதிலுமென்னிடமில்லை.

காற்றில் கவிவந்த சொற்களும்
பிரிந்து விட்டன
முதிர்பூர்வீகங்களுடன் பேச
துக்கம் விடுவதாகவுமில்லை.

சுதந்திரமாகிடாத உயிர்களை தகர்த்தழித்திட அதிதீவிர இடது போக்குச் சிந்தனையாகவும் அதிதீவிர நிலவாத போக்குகள் கொண்டு வெளிபிடித் தலைந்த காலங்களின் மீதிலிருந்து, பாலைவன அனல்கண்டு ஓநாய்கள் நாக்குநீட்டுவது போல் அலைந்து நடந்தவைகளிலிருந்து, இனி நான் அழைத்துச் செல்கிறேன். முடிந்தால் இன்னும் கேள்.

தேடல்கள் முழுவதிலும் புகுந்து விட்டன.
சுற்றிலும் இருள் சூழ்ந்த அவ்வெளியை
இன்னும்
யாருமே சொல்லித்ரவுமில்லை.

எம்மண் எங்களை முளைக்கச்செய்திருக்கும்
ஆன்மாவில் உயிராகமடியப்போட்டுள்ள
மனிதமுகங்களை.

யாரால்தான்
துயரமின்றி பிரிய முடியும்.

கடைசி மூச்சும்,
இலக்கு தவறிய பறவையாய் பறந்து திரிவதில்
நீ நிச்சயமாய்
அடையாளங்காண்பாயா ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது
விடியலில் கசங்கிச் சிவப்பாகி
படுத்தபாயும்
பளிச்சென்றுபுரியும்
அந்த சொற்கட்டங்களும்
தலை விரிகோலமாய்

மிதக்கச் செய்யும் அழகை
விடியலின் மென்தூட்டில்
மனது மட்டும் படபடத்தது.

அழகிய வார்த்தைகளால்
கனவிலும் அன்பூட்டினாய்
இக்கட்டுடைப்பை மதிப்பிடமுடியாது சிலாகித்தாய்.

ஒவ்வொரு நிலாக்காலங்களுள்ளும் கைவிரல்கள் நிலத்தில் படர்ந்து உருகிவடியலாகின. அச்சம் மட்டும் ஒன்றினுள் மூழ்கி புதிய வடிவங்களாக எல்லாயுகக் கனவலைகளில் நிரப்பிட பயணித்தலின் பேருந்தும் நகர்ந்து குருதியின் நிலம் தாண்டிட தொண்ணூறுகள் ஈழதேச போராட்டம் என்னையும் மனிதனாய் தண்டித்துவிட்டது.

எச்சந்தியில்வைத்து கைது செய்யப்பட்டேனோ அச்சந்தியில்வைத்தே,

சொற்களினை ஒடுக்குவதை நிகழ்த்தி முடித்துவிட்டேன்.

இனி,

விடுதலை பாடிகளாக மேலெழுகையில் கருவீழ்ந்து போன நாட்களும் பயணமும் முடிந்தது. நானின்றும் வறண்ட சொற்களோடும் வறண்ட சிந்தனையோடும் ஒரு சக்கரமாகவே உயிருடன் மல்லடித்து நாவறண்டு தாகம் தீராது எந்த சொற்களால் ஓவியம் தீட்டுவது, சுழிகள் குமைந்து புள்ளியில் தொடர அன்பை சொல்லும் மனங்களிலும் தடைகளாய் நின்றெழும்பின மூச்சு, இது தனித்த குருவியின் மெல்லிய பாடல்களின் சொற்கள் அழகிய ஓவியத்தின் தூரிகையாக, மனித நேயமிக்க கருவாக என்னுள் இதமாக விரிய தூரமும் தொலைவுகளிலில்லை.

உயிரூற்றும் இடைவெளிகளில்
இருளூற்ற ஞாபகங்களும்
முடிவுற்ற புதிய இதிலிருந்து
காற்று
சிறகுகள் விரித்து பறக்கவுமாகிற்று

மனம் தாழாத
இறுதியாத்திரையுமிதுவாகின.



தொடர முடியாத புதிய கட்டுடைத்தலில்
உள்மனதினுள்
ஆயிரம் வெள்ளிகள் முட்டின.

இருப்பினும்
வழிகேட்டு திணறிக்கொண்டபோது
மகள்
எழுந்து புரண்டு கருக்கலையும் விடிகாலையில்
பனி இழுத்துச் சென்றுவிட்டது.

இருள் கிழியாபயங்கரம்
மீளப்புதைய
மகளும் அழஆரம்பமாகினாள்.

கண்கள் காணாத
அறிமுகமற்ற திசைவெளியில்
அருவருப்பற்ற விரல்களில்
தடவி மெல்லிய கிள்ளலில்
மன நிழலும் பயமுறுத்தின.

மனதினுள் கொப்புளித்தெழும் ஒற்றைக் குகையினுள் முதமை வக்கரித்து அம்மர்மமும் அவிழ்ந்தது. வறண்ட யாத்திரையில் கவிதையெழுத கழுத்தை அறுத்தது காலம்.

சிறு தடயங்களோடு விரிந்துபரவிற்று. சூரியன் மறையும் செவ்வெளியை பகல் கொள்ளையும் நிகழ விரிந்து இருள்கிறது. உதிராக வெளிச்சக் கீற்றாகி வானின் திசையில் தொடர்கிறது.

சுவர் நிழல்களில் அறிமுகமற்ற கோஷங்களை உறுமி ஒரு கணத்திலேயே மனம் ஒன்றித்து சிறகுவிரிந்த குருவிக் கூட்டத்தில் நானும் தவங்கிடக்க வாயிற்று.

ஓடுங்காலத்தை நிறுத்தி அணை போட முடியாது போயிற்று. போலிகளின் மீது நழுவுகின்றத கைப்பிடியளவு மனதும்.

'ஊர் ஊராய் நிலவுவரும்
எளிதினில் புலப்படாத
ஒரு
வெண்குதிரை
இரண்டுகால்கள்.
ஒரு பாய்ச்சல்
சிறுகாற்றில் ஓடும் புல் வெளியில்
ஒரு பச்சைப்புல் இதழிலிருப்பேன்
அழகிய எனது சொற்கூட்டங்களில்
அழுகிச் சிதைந்தது இரவுகள்.'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொஞ்சமாவத நேரமில்லை. காலங்கடந்து வரும் கனவுகளுள் அத்துயரத் தீவையும் பார்த்திருக்கிறேன். நிகழாது போயிருந்தால், என்னுள்ளிருந்தது விரிய அதனுள் நுழைந்திருக்கவும் மாட்டேன்.

ஒரு வெளிச்சம் தோன்றயிருள் கலைந்து, பின் தொடர்ந்து ஒரு சில கேள்விகளையும் கடந்து சென்றன. வானத்தைப்போல் மூடி அவற்றினுள் சிறிது சிறிதாக சேர்த்து வைத்திருந்த கனவுகளும் மூழ்கிச் சென்றன.

நிலவும், நட்சத்திரக்கூட்டமும், முகில் கூட்டமும் என்னுள் நெருங்கி வந்தன. முன்பைபோல அல்லாது ஒரு பொழுது விடிந்து ஒரு பகலை மூடுகின்றன? என் மண் அழகாகயிருக்கிறது எடுத்துச் செல்ல முடியவுமில்லை கருகிக்கிடந்த புல்லிதழ்களிலிருந்து மீளும் எளிதினில் புலப்படாதவுரு வெண்குதிரை.

நிலம் எங்களுடையது.
எளிதினில் புலப்படாத
எனது வெண்குதிரை
இரண்டு கால்கள்
ஒரு பாய்ச்சல்.

இரண்டுகால்கள்
ஒரு பாய்ச்சல்
கடிவாளத்தையிழந்தவொரு வெண்குதிரை
வெருண்டு சிதைத்த
இந்த நிலம் எங்களுடையது.

இரண்டு கால்கள்
ஒரு பாய்ச்சல்
எனது நிலத்தைவிட்டு
அழத்தொடங்கிவிட்டேன்.

இரண்டு கால்கள்
ஒரு பாய்ச்சல்
காத்திருக்கின்றனயெனது துயர்
அவனுடைய நிலத்தில் பாய...

இரண்டு கால்கள்
ஒரு பாய்ச்சல்
கொல்லப்பட்ட ஸூ ஹதாக்கள்
எனதுவுருவில் உயிர்க்கின்றனர்.

இரண்டு கால்கள்
ஒரு பாய்ச்சல்
கைப்பற்றுவோம் எமது நிலத்தை.



## ஒரு செம்பொடையன் கழற்றியெறிந்த சட்டைகளின் மீதான இறுதிக்கட்டுடைப்பு

நீள் தூரப் பயணத்தின் பாதையின் இடையிடையே சில நாட்களில், ஞாபகத்தில் தனித்திருந்து விட்டுப்போகும் அவைகளைப் பற்றிய (மறைவான சில படிமங்கள்) மனப்பயணத்தில் அன்பு, மனிதன் அழிந்து விடுவதாயினும் இறக்கைகள் செயலற்றுப் போகும். அது பற்றிய குறிப்புகளே இங்கு வார்த்தை வழியே பதிவுகளாகி விட்டன.

அதுபற்றிப் பேசிக் கொண்டேயிருக்கின்றாய் நீ. நான், கேட்கத் தொடங்கவுமில்லை கைகளை அசைத்து, கண்களால் பேசி, முழு உடலாலும் நீ பேசிக் கொண்டிருப்பதாய் மெல்லிய காற்றின் ஓசைகளா லும், மரக்கிளைகள் நடனமிடுவதாயும் நீ பேசிக் கொண்டேயிருக்கிறாய்.

நானும் உனது பக்கத்திலிருந்து ரசித்துக் கொண்டுதானிருக்கின்றேன். யாருடைய மிக அழகிய சொற்களைக் கொண்டு நீ பேசிக் கொள்கின்றாய்.

சொல், யாருடைய மிக இரகசியமாக மறைக்கப்பட்ட அர்த்தங்களை, நீ தனிமையான குகைக்குள்ளிருந்து எதைத் தேடிக்கொண்டிருக்கிறாய்.

எப்போதோ கேட்ட சத்தத்தின்
எதிரொலியினூடே நீ
ஏன் ஓடிக் கொண்டேயிருக்கிறாய்.

அவ்வோசைகளும்
என்னிடம்
உன்னை அழைத்துவராது...

துடிக்கும் அலைகளின் நுரையினைப்போல்
நீ,
என்னிடம் வர நினைக்கிறாய்.

நாம்
பிரிந்து விட்டதாயின்னும்

நான்,
உன்னிடம் சொல்லவுமில்லை

நீ
ஏன்
என்னில் துயருற்றிருக்கின்றாய்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுடன் உனது மொழியால்
பேசவேண்டுமென்று சொல்லியுமிருக்கிறாய்

நானும்
ஒரு மெல்லிய பனித்தென்றல்
பாறைகளைப்பிளந்து வெளிவரும்
ஒரு அழகிய ஓடை
இலைகளுள் மெல்ல நுழையும்
குளிரற்றவெயில்.

நீ பேசிக்கொள்ளலாம்
நானும் பேசிக் கொண்டுதானிருக்கிறேன்.

**எனது மொழியும் உனதிடம் மௌனமாக வருவதாயும் சொல்கிறாய். இறுதியில் நீ விளங்கிக் கொள்ள முடியாது அல்லது கூடாது என்பதற்காக நானும் உன்னுடன் பேசிக் கொண்டிருக்கவில்லை. உண்மையாக கட்டுடைத்தலின் மீது சத்தியமாக நம்பு.**

1.

மீளவும் காற்றில் அலைகிறது கனவு
இருள் முனகும் பால் வெளியில்
ஒன்றுமற்ற சூனியமாய்
ஞானக்கயிறும் அறுந்து
குருடு விரிதல் கூடி நேரங்கடந்த பொழுதினில்
கடும் இருளின் உருவமாய்
நடு இரவில் குவிந்து அது சுவர் மீது குதித்து
எல்லாத் திசையிலும்.

மீளவும்
அறிவு வெளிச் சிறகுகள் அதிர

அதீத யாத்திரையும் ஊடுருவிற்று
ஒரு பகல் மட்டும் சில்லென்று
ஓயாத தூரத்தில் விரிந்தது
இனியும்
புதையாது அந்த முகமற்ற இருள்
நரம்பு மர்மம் அவிழ்ந்து பதற
காற்றில் அலையும் பறவைகளை
பிடித்து தின்கிறது கனவு.

பழைய மனத்திடலின் அந்தரத்திலும்
அழகின் கண்களாய்



புதிய கால தேவனும் ஊடறுத்துவிட்டான்.
துடிப்பற்று நிற்கிறது தசைகள்
எனது காண்டாமிருகப்பசிகளுள்
நீள் துயராய் நீயிருக்க வேண்டியுமில்லை.

உனது துரோகித்தலின்
கருகிய கண்களினூடே
கண்டது வெறும் கனவுகளுமில்லை
கவனம் மர்மமாய் புகைகிறது நா...
வார்த்தைகளை தடுத்து திசை திருப்பு
மீளவும் தொடரமாட்டேன்
போலிகளிலிருந்து
மீளவும் பேசமாட்டேன்
கடவுளின் பழைய வார்த்தைகளை.

தடைகளின்றிய குருதி நதியின்
உள் முரண்பாடுகள் எனதல்ல
இன்னும்
தாண்ட முடியாது தவிக்கும்
உனது முகமும்
எனது முகமும்.

எல்லாவற்றையும் விட
ஒரே ஒரு சொட்டாய் உருகிச்சொட்டுகிற

ஞானப் பெரு நதியுமல்ல நீ
யுக யுகாந்திரத்து
எண்ணில்லாத்துளிகளின்

நட்சத்திரக் கோர்வையுமல்ல நீ
எனது மனம்
நடுங்க கலங்க அன்டையும்
அரவணைப்பையும் தரவுமில்லை நீ
மேலும் எதையிட்டும் பயமுமில்லையெனக்கு.

உயிர் ஒரு நாளில் உறையும்
அதற்காக ஆன்மா பின்னடையாது
நேற்றைய நாட்களைப்போல்
வாழ்வும் அதிக வேகத்துடன் நகரமாட்டா
அதிசயம்
மனம் சுகந்தேடி அலையவுமில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது எனக்கு தேவையுமில்லை
தொலைவிலுள்ள வான் எல்லைகளை

தியான ஆனந்தத்தில் கேட்கவுமில்லை
இல்லாத ஒன்றை தேடவுமில்லை.

எதுவும்
எனது சந்ததிக்கு உறுதியாய் கிட்டாது
ஆசை தருங்கனவுகளும்
ஆதிலிருந்து வரும்
வர்ணங்களும் அழகாயிராது
இல்லாத எதையும் தேடவுமில்லை
இருப்பதைத்தான் நம்புகின்றேன்.

நீள் வெளி நோக்கி நகர்கிறத கனவு
அவளும் கருப்பு நிறத்திலிருந்த எழுகிறாள்

அன்று வெள்ளிகளும் பூக்கவில்லை
படு நிலவும் வானில் தொடங்கவில்லை
புகைகிறது கண்கள்

மீண்டும்
நாவறண்டு தாகிக்கின்றது
நீள் கனாவெளி தொடர
இனி
எனது இரவைத்தேடுகிறேன்
கிட்டாகவில்லை
எனது போர்வையை தேடுகிறேன்
கிட்டாகவில்லை.

இருளைத் தின்போனின் கண்முன்னே
வெறும் நட்சத்திரங்களை கணக்கிட்டு
எதனையுமே அன்று நியாயப்படுத்தவும் முடியாது போயிற்று.

மனம் பதிந்த நீண்ட நாட்களில்
தேங்கியிருந்த அமைதியில் யார் மூழ்கினாலும்
கனவுச் சுருள்கள்
விரிந்து கொண்டேயிருந்தது
குறுகிப்போகும் வாழ்பொழுதுகளில்
நிம்மதிவிட்டுத் தொடர
காலம் அவகாசமற்றும் போயிற்று.



எல்லாம்
நிகழ்ந்து கொண்டேயிருக்கிறது
எத்தனை பறவைகள் திசைகளற்று

சிறகுகள் உதிரிந்து
எதனைத் தேடியதோ
அதன் மீதான தேடல் தொடர

திக்கற்று வீசும் காற்றுடன்
உரசி உரசி பாடல்கள் எழுதிட
காலங்கள் நீடிக்குமோ தெரியாது
அச்சமாகவுமிருக்கிறது
ஒரு புதியகேள்வி குறித்து

நல்ல நடுச்சாமம்
நல்ல நிலா வெளிச்சம்
இருளைத் தின்போனின் கண்முன்னே
ஆத்மாவின் சிறகுகள் முளைத்தன.

வாழ்நிலை கொள்கின்றது மரணம் பொய்மைகள் நிறைந்த நிலையில் எத்துணை துயரம் மனிதச்சமநிலை குறித்த இருப்பை தேடலின் பய வுணர்வெது மற்ற மன உந்ததலில் எதுவும் நிச்சயிக்கப்படாதவொன்றை நோக்கி நமது சிந்தனையும் பலவீனப்பட்டுப் போயிற்று.

எதன் நிமித்தம் எண்ணங்களை பகுப்பாய்வு செய்ய வேண்டியுள்ளது மனித ஆதிக்கச் சிந்தனையாளர்கள் அதன் நலன் சார்ந்த கருத்துக்களையே இருப்பாக வெளித்தள்ளுகின்றனர்.

மதம், பண்பாடு, அரசியல் பற்றி ஆராய்ச்சிகள் தேவையானதுதான் எதோ ஒன்றின் மீது புரிதலைக்காட்டிலும், ஏதோவொன்றுக்காக மறுக்கப்படுகிறது. இனி மாற்று வழிகளின்றி சில கேள்விகளுக்கூடாக இரகசியங்களைத்தேட முன்பு மறைக்கப்பட்ட தரவுகளை வெளிக்கொணர முடியாமலுமல்ல, மொழியானது, புரிதலும் சுய சிந்தனைத் தேடலிலேயே தங்கியுமிருக்கலாம்.

வாழ்நிலை கொள்ளும் மரணம் பற்றி பின்புலமான பரிசோதனைகளில் பூச்சியத்தை நோக்கியின்றும் நகர்ந்து கொள்ள முடியாது தவிக்கின்றன.

என்னுள் தோன்றியதில்
எதை எதை சொல்லிமுடிப்பது

நீ எதை நினைத்தாயோ
உள் ஆழப்பரப்பில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவாக எதையிழந்ததாயோ ?
அவை எல்லாவற்றையும் விட
சுடுமணலில் நான் பதுங்கி
நீ தனித்து தேடியவைகள்
இன்று வரை புலப்படாது போயிற்று.

**வெற்றிட வெளி நிரம்ப மனம் மகிழுவுமாகிற்து. ஒருயுக ஆரம்பமும், ஒரு யுகமுடிவும் ஒரே நிகழ்வாக ஒரு சிறுவனாக பல நண்பர்களுடனு மிருந்தேன். கனவு மீள தினமும் ஒருத்தியையே சந்தித்தேன். அவளது கண்களிலிருந்த தினமும் வரும் காதலையும் மறுத்துவிட்டேன்.**

**தியானத்தனிப்பில் இருளின் புள்ளியை நகர்த்த முடியாது தனிமையிலேயே யிருந்தேன்.**

**ஒன்று**

நீ
என்ன நினைத்தாயோ
அதுவும் நிகழவில்லை
இருந்தாலும் சரி
நீ
செய்த தவறுகளை நான் செய்யவில்லை.
ஆன்மிகத்திற்கு
எல்லையே கிடையாது.

மறுத்து அல்லது ஏற்று
உனது காலடியில்
ஒரு இனிய இரவினில்
நானும் நீயுமாகி
எதைப்பற்றிப் பேசினோம்....?

உன்னைப் பற்றி
என்னுள்ளிருந்தது பயம்மட்டுந்ததான்.
அதுவும்
எவ்வாறு நிகழ்ந்தது
அதை எவ்வாறு காண்பது
இது
எப்போவோ நிகழ வேண்டியுமாகிற்றே . . .

முன் பொழுதினில்

தரையிறங்கவருகிறது பனிப்பளிங்கி
முத்து அது முதல் துளி



முற்றத்து துளசிச் செடியினில்
மின்மினி மாதிரி இலைகள் மினுங்கின.

செவ்வெறும்புகளும்
சிறு பூச்சிகளும்
உடம்பொங்கும் ஊர

திண்ணையில் நெளிகோடுகளைப் போல்
முன்பின் தெரியாத முகங்களோடு
குப்புறக்கிடப்பவனையும் பின்னியகயிறு
திருகித்திருகி கிடந்தது.

இறுதி நொடிகளில் மனம்
என்ன என்னவெல்லாம்
நினைத்ததோ ?
உச்ச வெளிச்சமேற்றுகிறது
குளிர்தாளாமல்
ஒரு சிலிர்ப்புடன் இயற்கை.
கைகாட்டியழைக்கிறது
ஒரு முகம் அல்லது ஒரு உரு
துயரின் இடுக்குகளில்.

**இரண்டு**

எங்கோ
ஆதிவாசிகள் வானத்திலிருப்பதைப்போன்று
பல நாட்களாக
ஒரு பெயர் குறிப்பிடாத சிற்பியின்
சிலையிலிருந்து
இருகைகள்
ஒரு உளி
கற்கள் செதுக்கிப்போகின்றன.

காற்றின் ஏக்கத்திலிருந்து
புதிதாய்
ஒரு இருளும்பயமூட்டின.

ஆங்காரமாய்
எழும் காற்றில்
நிலவும்
நட்சத்திரங்களும் மிதக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனவில்
மயிலிறகுவைத்து
அது குட்டிபோட்டிருக்குமா ? இல்லையா ? வென
தினமும் தூக்கத்தில்
துலாவுமெனது மகள் "சம்மிக்குட்டியின்"
பிஞ்சு விரல் சுருட்டியே கிடந்தன.
துயில் அரண்டெழுந்து

கனவில் நிகழ்ந்த
நிலாப்பழமும்
நட்சத்திரப்பழமும்
அடிநாக்குவரை இனித்துக் கொண்டேயிருந்தது.

நீள் தூரப் பயணத்தின் வழியை எப்படி மறப்பது? புதிதான ஆகாய வெளியில், புதிதான காற்றையும், மிகப்பழமையான ஆக்காட்டிப் பறவையையும், மிகப்புதிதான பெருத்த செம்பொடையனையும், மிகப் பழமை வாய்ந்த கள்ளிக்காட்டையும், மிக நவீன நதி நரம்புகளையும் நான் எப்படி பார்ப்பது எப்படி மறப்பது.

ஆக்காட்டிக் குருவிகளும், ஆகாய வெளியுமாகின. இன்னும், கனாக்காரி பூப்பெய்தம் விட்டாள். நிர்வாணமான பல ஒடைகள், பல உருவங்கள், பல கீதங்கள் இன்னுமாக ஒரு வேடன் ஒரு நாய் ஒரு தடி ஒரு புல்பத்தை ஒரு உடும்பு ஒரு முயல் என கனாக்காரி மிக நெருங்கியும் விட்டாள்.

அவள் அழுதாள் தவித்தாள் ஒரே நிமிடத்தில் மயக்கமானாள். படிமங்களுடன் சொற்களும் தீயாய் பற்றி எரிகிறத.

**ஒன்று**

ஒரு நதி
ஒரு மனது
தேவதூதர்கள் போல பின்னி விட்டுச் சென்றது
ஒரு சுகமான பரவசம்.

உயிர் எங்கும் பிரமிக்கட்டும்
அதி ஆழத்தெளிவு கொண்டும்
உயிரின் மேல் உயிரைச்சுமப்பதைப் போல்
எல்லா உணர்வுகளுள்ளும்
சொற்களே அதி வேகமாயிற்று.
குரல் வளையை நெரித்து
ஏராளமான கருவிகள் கொண்டு
நெஞ்சைக் கொத்திக் கொத்தி
துயரப்படுத்தியுமாகிற்று.



இன்றின் அவசரக்கனவும்
பலபலவற்றையெல்லாம் புலப்படுத்தின
இடையிடையே ஒரு ஆக்காட்டியும்
ஆகாய வெளியில்
விட்டுவிட்டு பயமுறுத்தியுமாகிற்று.

பிம்பத்திரளினூடாக மென் சிறகுகள்விரிய
சுவாசம் தடைப்பட்டு
ஒரு குகைக்குள் பின்னித் தொடர
அவசர முரண் கொண்டு
அப்புள்ளியைத் தேடி கத்திப் பறக்கும்
ஆக்காட்டிப்பறவைகளின் மிரட்டல் தொடர
கால அடையாளங்களையுமிழந்து போயிற்று.

இறுகிய பாறையொன்றின்
இடையில்
வளராது மடிந்து சுருளும்
ஓர செடியாக அனைத்தையுமிழந்துபோயிற்று

**இரண்டு**

ஏதோ வொன்று கூவலுற்றுத்திரும்ப
இக்கொடி நிழல் தோற்றமாகின
மனப்புலம்பலோடு
எழுந்து
என்னுள்ள பிளவுகளில் குழைவற்று
மன ஆழங்களிலிருந்த உட்சுவர் ஒடுங்க
சில புதிய பழைய சாம்பல் பூத்த
முகங்கள் நிலத்தில் படிந்தன.

எனக்கு முன்னமே தெரியும்
உணர் நீட்சிகளுடன் ஒன்றித்து
காலமும் தவிர்க்கமுடியாது போயிற்று.

மென் நாவிலும், மனதிலும்
திரவச்சுரப்புகளும் போதைக்குடைவுகளும்
உயிர் கொண்டு நெளிந்த
முடிவற்று நீளும் மண்மீது
வலிக்கத்தான் செய்யும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று

நீயெப்படி மறுப்பாய்?
ஆசைகளில் ஏழுகடல் தாண்டி எட்டாவது கடலைதாண்டுகையில்
அது
எழுதத் தூண்டியமிக இளகியபருவம்
மனதுள் புகுந்து அடைக்கப்பட்டுக்கிடந்த ஆசைகளை
இரவு முழுக்க கனவுகளில் சத்தியமாக காண்பேன்.

கண்கள் எரிந்தன உதடுகள் மடிந்தன
ஆனால்
காதலின் எல்லைகளில் கூடயிருக்காது
கவனமான கால நகர்வில்
ஏன்
துயரப்பட்டேன் துடித்தேன்

இனி எப்படியாவது சந்திக்க வருகையில்
ராக்குருவிகள் கீச்சிட்டு தெருநாய்விரட்டி
விரல் தடவி
முகம்புதைத்து உதடு உறுஞ்சி
தொடர்ந்த நட்பை நீ யெப்படிமறுப்பாய்

**மெல்லத்தடவிச்செல்லும் காற்றும், தொடுகையோடு உணர, இடவெளி களை நிரப்பும் வன்மங்களோடும், வானமும் பூமியும் ஊளரிக்குமுற தூர இடவெளிகள் ஆர்ப்பாட்டக் குரலெடுத்து உரக்க அதிர்வூட்டி தாழ்வாய்ப் பறக்கும் கண் சிவந்து, இறகுகள் முதிர்ந்த கழுகு இது. காலத்தைக் கனவாக்கிச் செல்கின்றன. கழுகு என்ற சொல் குறியீடாக குறிப்பிடுவதே இங்கு படைப்பாகிறது.**

ஒன்று

இந்த கழுகுக்கு உணவாக
நகயிடுக்குகளில் பாம்புகளிருந்தன.
அதிக
மிக  அதிக பாம்புகளில்
பின்னிப் பின்னி மிகுந்த சுமையுடன்
தனது துயருடன் குந்தயிடமின்றி
வட்டமிட்டு வட்டமிட்டு அலையலாகின.
எல்லாப் பாம்புகளும் மரணப்பயமடைந்தன
தொடர்ந்த போராடமுடியாதும்போயிற்று.

நகயிடுக்கிலிருந்து ஒன்றுமட்டும்



அதி நம்பிக்கையோடு சீறியெழுகிறது
கழுகின்...
கழுத்தை கண்களை கொத்திதுப்பிக்க முயன்றது.

வானம் கழுகுகருக்கொண்டு மழையாய் கொட்ட
மரக் கிளையிலமர
நகயிடுக்கிலிருந்த பாம்புகள் சில விழுந்தன.
சில செத்து விழுந்தன. சில மெல்லியதாக ஊரின?

இதில் நான்மேல் சொன்ன சொற் கூட்டம் மட்டும்
சீறியெழுகிறது
எதிர்க்க அதுட்ட கண்கொத்த.

இரண்டு

பனியிறங்கும் புல்வெளியில்
கூடுகட்ட தேடிய பறவைகளின் கள்ளிகளிலிருந்து
மனம் படபடக்க
தூக்கணாங்குருவிகாற்றிலலைய
நிலவில்
கயிறு கட்டி ஏறும் வெறுமையில் வரம்
காதல் ஊற்றையும் கடந்தே ஆக்வேண்டும்.
படைப்புகள் நிகழ, சொற்கள் உடைய
கேள்விகளாகப்பிரிகையிலும்
எது பதில் ஞானம் காதல் தியானம்?
கட்டுடைப்பை நிகழ்த்தி வெகுநாட்களுமில்லை.

தனித்து கைளும் கால்களும் கட்டப்பட்டு
கண்மூக்குவாய் செவி உணர்விழக்கப்பட்டு
அனுமதியின்றி அல்லது அவகாசமற்றுப் போயிற்று

நீயும் நானும் அல்லாடித் தவிக்கையில்
ஒரு நாள் வரும்
அன்று நீ எதுவாகவும் புரியாது போகும்.

**ஒழுக்கும் நிழலில் நின்று நிலா கண்களின் ஆயிரம் ஓவியங்களை ஒரே நேரத்தில் பதிய வைத்தன. தாவணி, பாம்புச்சட்டை போல் நழுவ காற்று வந்து அளவில்லாத விரசக்கவிதைகள் சொன்னது.**

மென்சிறகுகளில் குளிர்ந்த
கண் இமைகள் படபடக்கலாகின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு அப்பாவியைப்போல்
முழுணர்வுகளையும் தூண்டினாய்.

நீ நிழலாகி விடுவது நிச்சயமற்று
முடிந்துவிடவுமில்லையெனது தேடல்
அதி
நம்பிக்கையோடு காத்திருக்கிறேன்.

தனித்த தோல்விகளை
காதலில் பேசுவது நியாயமுமில்லைதானே
அக்காலத்தை உனதாய்
காணவும் முடியாது போயிற்றே...

அதில் கொஞ்சத்தையேனும்
நான் காண்பேன் அல்லது
தனித்திருந்தேனும் காண்பேன்.

**காதலின் மர்மங்களில் அதிகமானவை உன்மீதே அழுத்தின. புதைந்தது சிந்தனை. உட்புகுந்த காதலின் வெறுமைகளில் வாசிப்பு நிறைய நிரம்பி விட்டன. அச்சொற்கள் பூக்களாக, லீலைகளாக, புணர்வுகளாக, நையாண்டிகளாக அழுத்தி மறுத்தும் விட்டன. என்ன செய்ய ஏமாற்றங்கள் ஏதுமில்லையே.**

ஒரு பட்டாம்பூச்சியின் சிறகுகளில்
நான்
வர்ணமாகப் பறக்க

நண்டுகளின் புணர்வை ரசிக்க
சூரியனோடு விவாதிக்க
நிலவின் வெளியை மடியில் சுமக்க
பைத்தித்தேடல்களில்

பெண்
ஆணாதிக்கத்திலிருந்து விடுபட
பட்டமரங்கள் அசிங்கமாகவே உருப்பெற்றன
கனவு முடிகிறது அதிகாலை.

மண்படுக்கை
உப்பன் காற்றில் போர்வை
கொட்டப்பாக்கன் குருவியின் குரல்
பனி கீழ்படிய
அழுது குவிந்தன கனதுயர்.



பின்...
படபடவென பறந்து திரியும்
குருவிகளின் அழகிய சிணுங்காரகத்திலிருந்து
காலங்கள் மீதினில்
அதன் மீதான காதலையுமிழ்ந்தேன்.

பின்...

ஒரு மெல்லிய படபடப்போடு
மனக்குழியும் சொற்கூட்டமாய்.
நிரம்பியாகின நடக்கைகளிலிருந்து

மீள...மனம் கொதித்தெழும்பின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வின் மீதான எளிய பாடல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சரிகாணின் பிணங்கள் கண்டதும் காகங்கள் பூக்கும் தென்னையாய்" ஈழம் "எண்ணிக்கையற்ற முகங்களிலிருந்தும் பிரியமில்லாத போராட்டத்திலிருந்தும் இணைய முடியாத மதங்களிலிருந்து எங்கோ... நெடுந்தூரத்திற்கு மனிதத்துவமும் தொலையலாயிற்று" என்ற நிலை. எனினும் கவிதையே இருந்தலாய், ஜீவித்தலாய்க் கொண்டு மரணத்தின் கருநிழலிலிருந்து தப்பிக்கக் கணந்தோறும் போராடி வருகிறார் ஒரு இளங்கவிஞர். முப்பதுகளையே இன்னும் தாண்டாத மஜீத். அவரது 15 கவிதைகள் 'ஏறுவெயில்' என்ற தலைப்பில், தேசிய கலைஞர் பேரவையின் அனுசரணை யோடு, இலங்கையிலுள்ள 'மூன்றாவது மனிதன் வெளியீடக'த்தால் 1997 ஜனவரியில் வெளியிடப்பட்டன. அக்கவிதை களோடு அதன் பிறகு மூன்றாண்டுகளாக அவர் எழுதி வந்த கவிதைகளும் இத் தொகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளன. இவற்றில் சில கொழும்பிலிருந்து வெளிவரும் 'சரிநகர்' ஏட்டில் வெளிவந்தவை.

தனது சொந்தத் துயரங்களை எண்ணி அல்ல, தன் தேசத்தின் 'நதிகள் கல்லானதை, பறவைகள் அழுததை, அடர்ந்த காடுகள் சிறகசைத்துப் பறந்ததை' எண்ணி எண்ணி மனமுருகும் மனிதநேயர் மஜீத்.

கவித்திறன் கூடி வருகையில் காலம் அவரைப் பறித்துக் கொண்டுவிடுமோ என்ற பதற்ற உணர்வோடு அவசரம் அவசரமாய்க் கொண்டு வரப்படுகிறது இத்தொகுப்பு. 'ஏறுவெயில்' தொகுப்பிற்கு அவர் 'எழுதிய முன்னுரையும் இதில் சேர்க்கப்பட்டுள்ளது.

எஸ்.வி. ராஜதுரை

சென்னை
06-09-2000



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காத்துமுள் வார்த்தைப் பட்டம்

கவிதை, உணர்வுகளிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளவில்லை. அது நகர்த்தப்படுகிறது சிலரால். அழித்து விடமுடியாத அனுபவத்தின் பேரிரைச்சல், சிதைந்து விடாமல் உருகி உறைந்து உயிர் கொள்கிறது. உள்மன உளைச்சலை, உணர்வின் தீராத அதிர்வுகளை உள்ளுளைச்சல் கசிந்து விடாமல் மனதின் பின்னங்கள் தாக்கமுற்று வியாபிக்கும் விளைவுகளை - மிச்சம் மீதிகளை அதன் இயற்கைத்தன்மை குறையாமல் மொழியுள் நிறைத்து அருந்தக் கொடுப்பது கவித்துவம். "பல்வகைக் கலவை உணர்வுகளின் இடைவிடாத தீவிரக் கொந்தளிப்பின் வெளிப்படுகை" கவிதை.

சரி செய்யப்பட்ட அழகும் சவரம் செய்த படிமமும் கோர்க்கப்பட்ட குறியீடும் ஒழுங்குபடுத்தப்பட்ட உணர்வலைகளும் இன்னும் கவிதையை ஆக்கிரமித்துக் கொண்டுதானிருக்கின்றன. நவீன கவிதையும் தன்னை அதற்குள் சிறையிட்டிருக்கிறது. நவீன கவிதை தனக்குப் போதுமான எல்லா வசதிகளையும் பெற, இயல்புதன்மை நெகிழாமல் உயிர்வாழ மரபுதன்மை விட்டுவிடாது. கவிதை தனது முழுமையை எப்போதும் அடையாது.

கவிதையில் மட்டுமே மரபு - நவீனம் என சுதந்திரத்தின் இயல்பு பற்றிப் பேசுவது தவறானது. மன உணர்வோடு கலந்த - பின்னிய தவிர்க்கமுடியாத அடித்தளம் கொண்டது கவிதை.

மனதில் ஒழுங்குபடுத்தப்பட்டு தோன்றுவதில்லை உணர்வு. பல வகையாய் மன உருக்கொள்ளும். ஆனால், தனது வடிவங்கள் முழுவதையும் சுமக்க மொழியின் முதுகு போதாது. தனது வடிவத்தை அறிந்து கொள்ள போதுமான பொறிகளை அது உரச வேண்டும்.





குளத்து விரிப்பு
காத்துப்போர்வை
பனித் துளிகளின் தொந்தரவு
நிலவின் பழைய அல்லது புளிச்சபால்
இனி உறங்கப் போகாது
எனக்குள் தவிக்கும் ஒரு துளி ஓசை
காத்துமுள்
வார்த்தைப் பட்டம்
பூவின் சங்கிலிப் புன்னகை
வான மெங்கும் குருனல்
மேகத்துக்குள் கஞ்சி
பசித்தும் உண்ணாமல் தடுக்கும் இரக்கம்
என் கவிதையை உண்டு
அல்லது
என் கவிதையை நினைத்து
புதுப்பால் சுரக்கட்டும் நிலா

இப்படி நானும் கவிதா பிரகடனங்களோடு வரவில்லை. மனதின் நுட்பமான வெளியில் அசையும் சிறு உணர்வுக்குரலோடு திசைகளைச் சுழட்டிப் புள்ளியிலிருந்து விரிய வருகிறேன்.

எனது கவிதைகளைப் பற்றி எதுவும் நான் சொல்ல விரும்பவில்லை. நீங்கள் விளங்குவது உங்களுக்கு நீங்கள் ரசிப்பது உங்களுக்கு. நீங்கள் வெறுப்பது உங்களுக்கு. என் கவிதைகளை விரும்புகிறவர்களுக்கும், வெறுப்பவர்களுக்கும் எதுவும் நினைக்காதவர்களுக்கும் என் இதயபூர்வ நன்றி. ஏனென்றால் நீங்கள் நினைக்கும் எதற்காகவும் எழுதப்பட்டதல்ல இது.

மேலும், "இயல்பானது எதுவும் இயல்பத்தை இழக்காது"

என்றும் அன்புடன்
மஜீத்

763, கடற்கரை வீதி
அக்கரைப்பற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோடுகள் பின்னிய வெளி

எனக்குள் அசைவற்ற
நெடுந்தூரத்தில்
வெறுமை முற்றிக்கிடந்து கசிந்த வெளியில்
மெல்லிய காற்றாய் உசுப்பிய நிகழ்வது

வெள்ளை மண் துகளொன்று
இரண்டு பூக்களைச் சிறகு கட்டி
பறந்து திரியாத கால மொன்றில்
காற்று தனக்குள் மனனம் செய்யாத
வெடி ஓசை யொன்றின் சுயசரிதம்

சங்கீதமென்றில்லை
ஒப்பாரிகளையும் கக்கத்தில் இடுக்கிக் கொண்டு
பூக்களில் சுழித்து
கூடவமுடியாமல் காற்றின் தொண்டையில் சிக்கிய
சிறியதோர் ஓசையது
அது
ஒரு கணத்தில்
எல்லா ஓசைகளினதும் நாவறுத்த
சிறு ஓசை
ஓசைகளை மௌனத்தால் மூடிய ஓசை.

முன் பின்னாய் எழும்
உணர்வலைகள் கலங்கிய சிறு புள்ளியில்
உறையும் ஒரு செதிலென
நிலவின் பின்புறம் ரசிக்க நீளும் விழியாய்
எனை வாட்டிய துயரது.

எனக்குள் உருண்டது அப்புள்ளி
மனதிலிருந்து
துயரப் பரப்பின் இரக்க வெட்டு முகம் வரை
ஜீவிப்பின் இருத்தலை விழுங்கி ஏப்பம் விட

மீண்டும்
மீண்டும்



மஜீத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்புள்ளி சிதறி கோடுகளாகி பாம்பாய்
நெளிந்தது
என் உணர்பகுதியெங்கும்
நெளிந்து பின்னிப் பின்னி
திசைகளை முறித்துப் போட்டது.

மீண்டும்
உறைய மறுத்தது புள்ளியாய்
இனியென்ன செய்வது
நாளைய பொழுதில்
ஒரு அழகான உயிர் உதிர்வதை.



## வேரறுந்த வாகை

சொட்டும் இலையின் நிதானத்தில்
வாகையிலை முழுதும் மினுங்கும்
காக்கைப் பொன்னென வெளிறி

காற்று
ஊர் சுற்றி அலைந்து தாவித்துடித்து
தெத்திக் கோடாடிக் குதித்து
ஓய்ந்து உட்கார முறித்திடும் மரக்கிளை

பூவாய் காயாய் பிஞ்சாய்
கருவாய் கன்னியாய் குருத்தாய்
முத்திக் கட்டையாய்
குலைந்து இறந்தது அம்மரம்.

நிலத்துள் விரல் வளர்ந்து
நகம் வளர்ந்து
பாறையை கீறித்துளைத்து பரவலாக்கிடும் உறுதி

ஆழத்தில் மறைந்திடும் நீட்டில்
வேர் முடிச்சில் வளருமா குறை ?

கூழாங்கற்கள் கொதித்திட
மெல்ல இடறி ஆமை நடை நடந்திட
ஆடித் தோங்கித் தானே விழுந்து கரைந்து
அழிந்திடும்
அலைகள் பூத்திட்ட நீர்த் தோப்பில்
நிழல் விட்டு முகம் பார்க்க வரவில்லை உனக்கு!

கோடை குடித்திட ஈரத்துள் கருகி
கருவாடாய்ப் போகுமே வேர்
சலசலத்து ஓயாது விழுந்து விழுந்து அழுதிடும்
கருகிட்ட இலை
செத்தாலென்ன முளைக்காதா
இன்னொரு வாகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீயாவது
பிறந்து வளர்ந்த இடத்திலேயே
சொந்தங்களின் கூட்டுள்ளே
அழுது கதறி விழுந்து இறந்தாயென
ஆறுதல் பட்டதென் மனம்!!!



## என்னருகில் வீழ்ந்த அழகின் முட்டை

வானிலிருந்தோ அன்றி
புல்லிதழுக்கும், தண்டுக்குமிடையிலுள்ள
இடுக்கிலிருந்தோ
என்னருகில் வீழ்ந்தது
அழகின் முட்டையொன்று
அழகு முட்டையிடுமா ?
ஆனால் என்னருகில் வீழ்ந்தது
நுண்ணுணர்வுகளும் லயித்திருக்க

ஒரு கணத்துப் புன்னகைபோல்
உள்ளத்தின் கடைசித் தட்டில்
எடுக்கமுடியாத சுரங்கப் பகுதியில்
எடுத்தாலும் முழுமையாய் வரமுடியாத ஆழத்தில்
பதிந்து விட்டது
நேற்றுக் கண்ணாடியில் வீழ்ந்த விம்பம் மாதிரி
சொற்களுக்குள் அடுக்கியோ அல்லது
ஓசைக்குள் நிரப்பியோ தர இப்பாத்திரம் போதாது
சொல்லொண்ணா அழகு
அருகில் வீழ்ந்த அழகின் முட்டை

ஒரேயொரு வழிமட்டுமுன்று
அழகின் முட்டைபற்றி உங்களுக்குணர்த்த
வானத்தில் குறுனல்களை ஆதிக்கிழவி கொட்டிவிட
நிலாக் கோழி கொத்திக் கொத்திப் பொறுக்கும் ராவினில்

எல்லா உணர்வுகளையும் மறக்கடிக்கச் செய்த
அழகொன்றை மீள எடுத்துச் சுவையுங்கள்.

இனி வாருங்கள்

அழகின் முட்டை பற்றிச் சொல்கிறேன்
எல்லாப் புலன்களின் இயக்கங்களும்
எனக்குள்ளே நுழைந்து இறங்கிவிட்டன
எனக்கு வெளியேவிட்டு விட்டு
கற்பனைகளைப் பின்னிப் பூக்கள் செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூக்கூடையில் உறங்கும் அழகின் முட்டை
ஒவ்வொரு நாளும் என்னுள்,
இப்படி எனக்குள்ளே வசித்தேன் பலவருடம் நான்.

மரங்களிலும் சுவர்களிலும் உரசி
ஓரம் தேய்ந்த காற்றைப் பற்றியும்
பனித்துளி "பாரசூட்"களில் இறங்கி வரும்
மேகத்தின் மென்மையான முத்தங்கள் பற்றியும்
விமர்சிக்க...
கோள்காவ
ரகசியமாய் அனுபவிக்கவும்
கவனிக்க நேரமில்லையெனக்கு
என்னுள் கடும் வேலை.

அழகின் முட்டையின் மேல் கால்
போட்டுறங்குவதும்
விரல்களைப் பிடித்துக் கொண்டு
மூளையிலிருந்து இதயத்திற்கும்
இதயத்திலிருந்து தோலுக்கும்

நரம்புவழியே சுற்றித் திரிவதே வேலையாய்ப் போச்சு.

அதிர்ந்தேன்
நானில்லாமலாகிய கணமே நானிருந்தேன்
அழகின் முட்டை பொரித்தன்றுமல்ல
"தமிழீழம்" என வானதிர அது கூவிய அன்று
என்ன செய்வதந்தக் குஞ்சை ?
கொல்லுவது சிருஷ்டிக்குரிய வேலையல்ல
உள்ளங்கையில் தூக்கியெறிந்தேன்
காற்று வெளியில்
கடலில் போய் வீழ்ந்ததோ
கல்லில் வீழ்ந்து சிதைந்ததோ
பொந்தில் போய் நுழைந்ததோ... ?

எண்ணத்தைத் திறந்தேன்
அழகெல்லாம் செத்துக் கிடந்தது
இனிப் போகப் போவதில்லை
என்னுள் வாழ நான்.



## என் நரம்பெங்கும் ஊர்ந்து திரியும் பெண்புழு

என் உச்சந்தலையில்
நீ கொளுத்திவிட்டுப் போன நெருப்பில்
சமுத்திரங்களைக் கவிழ்த்தாலும்
தணியாது.

என்னுள்ளிருக்கும் படுகுழிகளை
அதன் சாம்பல் நிரப்பாது
என்னிலிருந்து
இனி வேதனைகள் உதிராது
என் பாலை வனத்தில்
உயிரினங்களெதுவும் வாழ முடியாது
என் மூளையின் மணல் வெளியில்
மலைகளை வளர்த்து விட்டு
வெடிவைத்து
தகர்த்து விட்டுப் போயிருக்கிறாய்.

நான் மறந்து விட்டேன்
என் சதையெங்கும்
ஊடுருவவைத்த இன்பங்கள்
ஒரு கொடியில் மணக்கும்
பூக்களைப் போல்

மிக அழகாக பூத்துக்கிடந்ததையும்
முயல்கள் துள்ளி விளையாடும்
புல் வெளியைப் போல்
பசுமையாய் விரிந்து கிடந்ததையும்

என் நரம்பெங்கும்
ஊர்ந்து திரிந்த பெண்புழுவே
என் முள்ளந் தண்டில்
உன் வாழ்க்கையைப் போல்
விசித்திரமான கவிதையொன்றை
ஓவியம் தீட்டி வைத்திருக்கிறேன்.
இனியாவத
என் நெஞ்சு துளுக்க....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிலாச் சோறு

சிறு விரல்களை விடவும்
எனது கைகள் குள்ளமானவை
எனது கால்களும் குள்ளமானவை
தேய்ந்து சுவடற்றுப்போகும்.
எப்படியிருப்பினும்
வெறும் மனபலத்துடன் நின்று
நிலவை வேரோடு பிடுங்கி
இறக்குவேன் பூமியில்

காற்றோடு காற்றாய்க் கலந்து பறந்து
வானுக்குத் தாவி
நட்சத்திரக் கற்களில் இளைப்பாறி
சூரியப் பளிங்கை உடைத்தேனும்
பூமியில் இறக்குவேன் நிலவை

இரவுகள் நிறத்தை இழக்கட்டும்
நதியினதும் கடலினதும் அலைகள்
அவைகளின் தலைகளிலே விழட்டும்
மேகம் மொத்தமாய் விழட்டும்
வெறும் வெள்ளமாய்

ஆயினும்
நிலவைப்பிடுங்கிப் பூமியில் இறக்குவேன்.

மரங்கள் தலைகீழாய் முளைக்கட்டும்
பட்சிகள் அடைய இடமின்றி
அந்தரத்தில் குறுக்கும் நெடுக்குமாய்ப் பறந்து
திட்டித் தீர்க்கட்டும்
இருந்தும் இறக்குவேன் பூமியில்
நிலவை.

இரண்டாய் மூன்றாய் முறித்துப் போடலாம்
மனிதர்களை
நகர்த்த முடியாமல் இழுத்துப் பிடிக்கலாம்
மின்னல் கண்ணில் விழுந்து



நரம்பில் நுழையலாம்
முண்டமாயிருந்தேனும்
வெறும் மன பலத்துடன் இறக்குவேன்
நிலவைப் பிடுங்கிப் பூமியில்.

பேய்கள் தெரியுமா பேய்கள்
இருட்டினில் வருமாமே
காணும் நெஞ்சுக்கு மட்டும்
கண்கள் முளைத்து
ரத்தம் குடிக்கத் தேடி வரலாம்

விஷ ஜந்துக்கள் இருளில்
நீண்ட பற்களோடும்
தீட்டிய நகங்களோடும் தேடி வரலாம்.

இன்னும் நான்
சிறகுகளை விரிக்கவில்லை அண்டவெளிக்கு
பூமியிலிருந்து
கட்டியிறக்க பலமான கயிறுமில்லை
ஆனாலும்
வெறும் முண்டமாயிருந்து
வெறும் மனபலத்துடன் நின்று
இறக்குவேன் பூமியில் நிலவை.

இறக்கப்படும் ஒரு நாள் அது
என் குழந்தைக்குக் காட்ட.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏறு வெயில்

யாரும் தன்னை இழந்து ரசித்துக் கிடந்தாலும்
காண வெறுத்து நச்சரித்தாலும்
என்றைக்கும் புள்ளி வைத்த கோலமே
வானில் "மொடன்" ஓவியம் வரைந்திட
யாரால்தான் முடியுமென்று விவாதித்துக் கிடந்தாலும்
ஊன்றி அழித்துவரும் வெயில்.

நிழல் தேடாமல்
பூத்துக் குலுங்கும் ஒரு கிளையுள்
ஓடிப்போய் ஒதுங்கிக் கொள்ளாமல்
ஒளியாய் சந்தனம் குழைத்து காலைத் தடவும்.
மதியம் தீ குழைத்து அப்பும்.
மேற்குக் கடலில்
சந்தனத்தினதும் தீக்குழம்பினதும் சட்டி கழுவ
உச்சந்தலையில் "ஐ.சி.ஈ" வைக்கும் பின்னேரம்.

நிமிஷயங்களின் மீதேறிப் பறந்து
தாவரங்களில் பொன் தடவி துள்ளிமினுங்கி
மேகவண்டிகளில் தாவித்தாவி தவண்டு
எப்படிப் போயினும்

பன்னிரண்டு நேரத்தில் கடத்திடும் பகலை வெயில்
ஆசையாய் வளர்த்த பறவை பறந்த பிறகு
உதிர்ந்து கிடக்கும் சிறகுகள் மீது வருமே
அதிகமான நேசம்
அதுபோன்றே வெயிலின் மீதும் எனக்கு

மரங்களைத் தாண்டி
முள்வேலியில் சிக்கிக் குத்துப்பட்டு
ஜன்னல் இடுக்குகளால் நுழைந்து
முதுகைச் சொறண்டிச் சொறண்டி எழுப்பிவிடும்
வெறுப்பும் வரும் சிலநாளில்

காத்திருப்பேன் நிழலாட்டம் ஆடிட
குதிகாலால் என் நிழலின் தலை தொட



நடப்பேன் – ஓடுவேன் – துள்ளிப் பாய்வேன்
நிழலும் செய்யும் அப்படியே
பிடிப்பேன் அந்தப் பகலுக்குள் மீண்டும் தப்பிடுமே
நிழல்........

எனக்குள் பரந்து கிடக்கும் என்னை
பிரபஞ்சத்துள் செலுத்தி அனுபவிக்கும்
நுட்பம் தந்தது வெயிலே
நேசிப்பேன் இனியும்

போய்
ஆற்றலாய் கிடக்கும் நதிக்கரையில்
அணியாய்ப் பொங்கி வந்து
ஒன்றன் பின் ஒன்றாக ஒழியும் அலைகள் வரண்டு

பாதம் கொப்பளிக்க எரியும்
மணல் திட்டாய் மாறுகையிலும்

செல்லமாய் கோதித் தடவிடும்
புற்கள்
வாடிக் கருகையிலுமே அவதி
வெயிலின் மீது சொல்லொண்ணாத எரிச்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காகங்கள் பூக்கும் தென்னை

என்னை சிலுவையில் அறை
கைகளை வெட்டி
கால்களை வெட்டி
தலையைப் பேத்து
உரியானாய்
வானத்தில் கட்டித் தூக்கு

என்னிலுள்ள
ஒவ்வொரு ஓட்டைகளுக்குள்ளாலும்
சங்கிலியிட்டுக் கோர்த்து
கட்டித் தூக்கு

ஓலைப் பெட்டியுள் அடை வை
நசல் கோழியுடன் என்னையும்
கூந்தல் கட்டி
சொத்தையில் நீரெறிந்து விரட்டு

அன்றி
கவணைக்குள் கட்டிப்போடு
புல்லும் வைக்கோலுமிடு
தவிடுட்டு மலங் கழிப்பதைத் தடு

அசைபோட கயிற்றை நுழை
அல்லது இறுக்கு
லாடன் கட்டு
மூக்கணம் குத்து
முதுகில் ரத்திவை
சூடுபறந்த வாழ்க்கையை
குலைதள்ளிய குறையில் கொத்தி சரித்திடு
என்னை

தலையைக் கொத்தி மூளை குடி
வறுத்துண்ணு
விரும்பின் எலும்புகளையெல்லாம்
சேர்த்து சூப்புக் காய்ச்சலாம்



பின்னிரவில் நிலாப்பார்த்திட்டே
சொட்டுச் சொட்டாய்க் குடித்து ரசம் தட்டு
உன் விருப்பத்திற்கேற்பவே

மொத்தத்திலிது ஈழமில்லை
சரிகாணின் பிணங்கள் கண்டதும்
காகங்கள் பூக்கும் தென்னை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்பவும் இப்படியும்

என் பேனாவின் மையும்
இல்லாது போகலாம்
என் கைகள்
இரும்புக் கம்பிகளால்
பிணைக்கப்பட்டிருக்கலாம்
என் குரல்வளை
அன்னிய விரல்களால்
நெரிக்கப்படலாம்
என் விரிந்த மார்பை
துப்பாக்கிக் குண்டுகள்
துளைத்துச் செல்லலாம்
இடி வந்து
என் தலையில் விழலாம்
எரிமலைக் குழம்பு
என்னை எரித்து வீசலாம்.

சூரியனைத் தூக்கி
என் தோற்களில் வைத்து
இவர்கள் தெருத் தெருவாக
இழுத்து வரலாம்

அடக்குமுறைகளால்
நான் சிந்தும் ஒவ்வொரு
ரத்தத்துளிகளிலும்
இந்த அயோக்கியர்கள்
கால் கழுவலாம்.

எனக்கு கவலைகளேயில்லை
எப்போதாவது ஒரு நாள்
எழுந்து வருவேன்
எனக்கு நம்பிக்கையிருக்கிறது
நான் எழுந்து வருவேன்.

எனக்காக அழுது கதறும்
என் அம்மாவைப் பார்க்க



## நான் சொட்டும் தீத்திரவம்

உச்சந்தலையில் புல்லாய்
நிமிரும் மயிர்கள்
தனித்தனியே எரியும்
படபடத்துயர்ந்து கொழுந்து விட்டும்
குருடாயும்

குடற் பாதையிலும் வழிந்தோடி
என் அடியில் உறையும் தீத்திரவம்.
கால் விரல் வரை விரிந்து
ஊத ஊத எரிவேன்
கலங்கள் நரம்புக் கணுக்கள்
கழன்று ஓசையுடன் எரியும் பொறி தெறிக்க

மூளையின் கால் நீளும்
உடம்பெங்கும் சென்று வரும்
உணர்வுச் சுவாலையின் நிழலில் அமரும்
காமத்தின் தோலொன்றை உரித்துப் போர்த்தும்

விரல்கள் சுருண்டு
உள்ளங்கையைத் துளைக்கும்
அரை வேக்காட்டு எலும்பெழுந்து

கடித்துறுஞ்ச வாய்தேடும்
சதையெங்கும் விழுதிறங்கும்
உன்னை என்னோடு இறுக்கிப் பிணைக்க
சுருண்டும் நிமிர்ந்தும்
உன்னை என்னோடு இறுக்கிப் பிணைக்க
சுருண்டும் நிமிர்ந்தும்
பின்னியும் கோர்த்தும்
எனக்குள் தொடர்ந்திடும் இவை.

துளியாய் நீ சிறுத்தால்
நிரப்பும் என் தொப்புள்
வேர்வைக் கான்கள் நாக்கு நீட்டி
ரசம் தட்டி அருந்தும் உனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நரம்பரைத்து பிழிந்து சாறூற்றி
எலும்பு உரைத்து குழம்பு பூசி
உணர்வுக் குளத்தில் நீராட்ட
அறிவாய் நீ ஆண் சுவை
நறுக்கிப் போட்ட நகமும் தவிக்கும்
இன்னேரம்......



## இன்னமும்

பின்னிப் பிணைந்து வரும்
தென்றலின் தொடுகை
உணர்வு பற்றி
பாதங்களால் பிசைந்து
மிதிபடும் மணல் வெளியின்
வெறுமைகள் பற்றி
ஒத்தையாய் சோடியாய்
காலோவியம் வரையும்
நண்டுகள் பற்றி
துயர் நிறைந்த பலரின்
இதயங்கள் பற்றி
அலைகளுக்கு மட்டுந்தான் தெரியும்
கடலுக்கு அலைகள் உயிர்
அலைகள் என்பது
நமக்கு மனிதாபிமானம்

நீ மனைவியாக
நான் கணவனாக
கலத்தலின் வெற்றிடத்தில்
நாமாகி நிறைந்தது பற்றி
அல்லது
நீ நதியாக அல்லது நான் கடலாக
நான் கடலாக அல்லது நீ நதியாக
கலந்து நிறைந்தது பற்றி
நானுனக்குச் சொல்ல வேண்டும்
ஒருத்தியின் அடர்ந்த
கூந்தலைப் பற்றி
ஒருத்தியின் அழகிய
விரல்களைப் பற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனவெளிக்கப்பால்

மரணம் துரத்தும் போதும்
வாழ்வு குறுகும் போதும்
பூமியின் எல்லையை இழந்து
வீடு வாசல் உறவுகள்
எல்லாவற்றையும் இழந்து
தனிமையாய் ஓடு .....

இடையினில்
சொர்க்கம் நரகம்
பயங்கர இடிமுழக்கம்
எல்லையற்ற இருள்கோளங்கள்
அனைத்தையும் தாண்டி ஓடு .....

எதிரில் வரும்
மலை மேடுகளிலும்
மணல் மேடுகளிலும்
முட்டி விழுந்து
எழுந்து ஓடு .....

ஆத்திரமும் அவசரமுமின்றி மூச்சுவிடு
பூமியிலிருந்து
கடலுக்குள் மூழ்க
கரை தட்டினால் எழு
ஓடு ....

வரும் நீண்ட தூரத்தில் காய்ந்து வறண்டு
புழுதிக் காற்று முத்தமிடும்
ஒரு வெட்ட வெளி

அங்கு
துப்பாக்கிகளொன்றும் உற்பத்தியாகாது
மண்டையோடுகள் குவிந்திராது
சமாதிகள் முளைத்திராது
இருந்தாலும்
நீ அதிசயப் படுவாய்



சிலர் தலையையிழந்து
சிலர் கண்களையிழந்து
சிலர் கால்களையிழந்து
வெளிறிய மனிதர்களாய்
மிதந்து மிதந்து வாழ்வர்
அப்போது நீ
நினைக்கலாம் இது
இன்னொரு கிரகமாகத்தான்
இருக்க வேண்டுமென்று
அப்படித்தான் ....

எண்ணிக்கையற்ற
முகங்களிலிருந்தும்
பிரியமில்லாத
போராட்டத்திலிருந்தும்
இணையமுடியாத
மதங்களிலிருந்தும்
எங்கோ ....
நெடுந்தூரத்திற்கு மனிதத்துவமும்
தொலையலாயிற்று ....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவை வருமே பாம்புக் குகையுள்

மனிதச்சதை மலைகளும்
இரத்த ஓடைகளும்
நிறைந்து கிடந்தும்
நெறிந்து ஓடியும்
அதில் குழந்தைகளேறி
பட்டம் விட்டும்
காகிதத் தோணி விட்டும்
பூமி நகரத்தான் செய்கிறது

ஒரு காலம் வரும்
தாயை உண்பதும் சுவைதான்

சகோதார மனிதனே
என் சுதந்திரங்களை
விலங்கிலிட்டாலும்
நசுக்கி நாய்க்குப் போட்டாலும்
காயவைத்து
இறப்பில் சொருகினாலும்
ஆள் காட்டிக் காலில் கட்டி
வயல்வெளிச் சுரியில் மொத்தினாலும்
வேப்பங்குலையில் தொங்க விட்டு
பேய்க்குக் கொடுத்தாலும்

என் கவிதையுள்
கருக்கட்டும் சுதந்திரம்

பாக்குவெட்டியிலிட்டு நறுக்கினாலும்
மனையரிவாளில் செதிலடித்து
மீன்போல் வெட்டினாலும்
கடுமணலிலிட்டுக் கொத்தி
சிராய் சிராயாக பேத்தாலும்
நெருப்பிட்டு எரித்தாலும்
பத்திப் பதறி
செருப்புக் கிழியக் கிழிய ஓடிவந்து
என் கூட்டுள் விழும் நிலா



தட்டுக் குத்தியிட்டுத் தடுப்பினும்
கட்டிட்டு சவுக்கால் தண்டிப்பினும்
காற்று வந்து வணக்கம் சொல்லும்
நான் வசிக்கும்
பஞ்சான் பொந்தினுள்ளும்
பாம்புக் குகையினுள்ளும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புள்ளி

வண்ணத்துப் பூச்சிக்கிருப்பதைப் போன்றதொரு
இறக்கையுனக்கு
படபடத்துத் துடித்தது
தண்ணீரில் பட்டை பிரித்து வடித்த முகம்
தளம்பிற்று மனங் கலங்கி
கண்ணிலிருந்து மண்டியோடு இருதுளிவிழ

அந்த நான்குபக்கச் சுவருக்குள் உறைந்தாய்
திரவியமாய்
அச்சிறு அறையினுள்
ஜன்னல் கம்பிகளை ஊடறுத்து
வெறித்த வானத்தைத் தழுவி அங்குமிங்கும் நடந்தாய்
ஆனால் நீ கடந்தது
வேதனையின் பாலைவனத்துத் தூரங்களைத்தான்
வானத்தைப் போல் இன்னொரு பங்கு அதன் நீளம்

வண்ணத்தியின் சிறகு போன்ற
உன்னிதயத்தை
கசங்காமல் உள்ளங்கையில் வைத்து
நேசிக்கமாட்டேனென்று
மீண்டுமொரு முறை நம்பிற்றாயோ என்னவோ

நீ மடித்தவிரல்களினுள் துடித்த என் உயிர்
நீ குடியிருக்கும் மல்லிகைப் பூவிலும் மொய்க்கா
போய்வா

இச்சிறு அறையை விட்டு
இருண்ட பொழுதுகளின் வெறுமையை விட்டு
உனக்குள் நீ உணர்ந்த தனிமையை விட்டு

இந்த நிகழ்வும்
நான்கு பக்கச் சுவர் அறையும்
வேதனையாகயிருந்தாலுமின்று
பிற கொரு நாளில் நாம்
பிரிந்தாலும் இணைந்தாலும்
எல்லா மதங்களும்
ஒன்றான தென்று நினைத்து இன்புறுவோம்.



## நிழலோடு வருதல்

அதுவரும்
எல்லோருக்கும் வரும்
அதிசுகத்தோடு
எரிவேதனையோடு
ஆத்மாவில் உள்ளிருந்தும்
அதுவரும்

தாயின் கருப்பையிலிருந்தும்
துப்பாக்கியின்
குழாயிலிருந்தும்
நண்பனின் சிரிப்பிலிருந்தும்
அதுவரும்

இயற்கையின் ஏக்கத்தோடு
பெருமிடியின் சினத்தோடு
புயலின் பெருமூச்சோடு
மேகத்தின் கண்ணீரோடு
சிற்றருவியின் ஓசையோடு
வைகறையின் பிறப்போடு
கடலலையின் அழுகையோடும்
அதுவரும்
எனது கடைசி நிழலையும்

பறித்துப் போக
இன்னமும் வருமது
மூங்கில் காட்டின் ராகத்தோடும்
சிட்டுக்குருவியின் பாடலோடும்
இரவின் மௌனத்தோடும்
நிலவின் அழகோடும்
என்னிடம் வரவேண்டுமது

கடைசியாக
எனது கடைசி நிழலையும்
பறித்துப் போக வரட்டும்
அது ......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகதியாய்ப் போகிறேன்

இந்த தேசத்தை விட்டும்
இங்கேயிருக்கும் தாவரங்களையும்
பூக்களையும்
புல்பூண்டுகளை விட்டும்
மிருகங்களையும்
எனக்கு அநியாயம் செய்தவர்களை விட்டும்
நான் போகிறேன்

எனது இருதயத்திற்கும்
உங்கள் இருதயத்திற்கும்
தூரமென்று விலக்கிவிட்டீர்களே
அதனால் போகிறேன்

நான் உடல் குளித்த ஓடைகளே
கிழிந்த களிசனோடு
நான் பிடித்த தும்பிகளே
வண்ணத்துப் பூச்சிகளே
இந்த காற்றில் கலந்திருக்கும்
நல்லவர்களின் சுவாசத்தின் வாசனைகளே
நான் போகிறேன்.

சொந்த தேசத்தில் என்னால்
அந்நியனாய் வாழ முடியாது
இந்த தேசமும் துரோகிகளும்

நாசமாகட்டும்
மனம் பத்தி எரியும் சுவாலையில்
இவர்களெல்லாம் எரிந்து சாம்பலாகட்டும்
இளம் குழந்தைகளின் ஈரல் குலைகளை
அயல் தேசத்தில் விற்று
வயிறு நிரப்பட்டும்
இடிவிழுந்து புயல் அடித்து



தூள் தூளாய்ச் சிதறி இந்த தேசம்
மண் போல் போகட்டுமென்று
என்னால் சாபமிட முடியாது
எனது நாகரீகம் வேறு
நான் போகிறேன்.

இந்த உலகத்தில் எந்த மூலையிலாவது
ஒரு பிச்சைக்காரனாக
ஒரு அநாதையாக
ஒரு அகதியாக வாழ்ந்து
மரணித்துப் போகிறேன்

எந்த தேசத்திலும்
இந்த வானமும்
இந்த நிலவும் தானிருக்கிறது
வாழ்ந்து மரணித்துப் போகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவன் போராளியாக இருக்கக் கூடாது

என்னைப்போல் நிறத்திலும் உருவத்திலும்
ஒத்திராத அவனை இன்னும் நான்
அடையாளப்படுத்த முடியவில்லை
அந்தி இருளுக்குள் மிக வேகமாக வேகமாக
கடக்க நேர்ந்தது அவனை.

மிகச் சுறுக்காவும்
பயத்தின் ஜாக்கிரதையுடனும்
கடக்க நேர்ந்தது அந்தத் தெருவையும்

வீடு திரும்பும் அவசரத்தினாலும்
ராணுவத்தின் பயத்தினாலும்
அவனை
அடையாளங் காண முடியவில்லை

அவன் போராளியாக இருக்கக்கூடாது
யாரும் அவனை அடையாளங்காணவும் கூடாது
பயப்படுகிறேன்.

ராணுவ வதைமுகாமுக்குள் வதைபடுதல்
மிதித்துத் துவைபடுதல்
உச்சிவெயிலில் முட்டுக்காலில் கிடத்தல்
கட்டாயப்படுத்தி
மண்ணையும் அசுத்த நீரையும் குடித்தல்
இப்படி
கடுமையான வதைகளைவிட
பெரிய பயம் அவன்
போராளியாகயிருக்க கூடாது என்பதே.



## அது

அதுயென் கனவில் வந்தது
சாவும் வாழ்வும் அதுவாகவேயிருந்தது
மௌன முறைந்த குடிசையின்
பெரிய சுவர்ப்பகுதியை உடைத்தேவிட்டது

பார்க்கும்போது பயமாகயிருக்கிறது
இனி ஜன்னல்களையும் மூடியாகிவிட்டது
இரவின் இன்னொரு ஜன்னல் வழியாக
அது பாய்ந்து மிரட்டுகிறது

இந்தக் கணப் பொழுதில்தான்
எல்லாமே யென்மனதில்
முளைத்துக் கொண்டன போலும்
விரிந்து செல்கிறது பார்வை
பூட்டியிருக்கும் ஜன்னலின்மீதும்
எரிந்துமுடிந்த மெழுகு வர்த்தியின் மீதும்.

உருகிவழியும் இரவுகளுள்
கனவு கண்டதுதான் மிச்சம்
தங்கக் கம்பிப் பின்னலில் கூடு
உள்ளே சிறகடித்து சிறகடித்துச் சில முகங்கள்
எனக்குத் தெரிந்த ஒரு தடியனும்
தன் பெயருக்குள்ளே விலங்கிட்டுப் போனான்.

கனவுக்குள் மனம் பெருமூச்சுவிட்டு
ரகசியமாய் சொல்லிற்று
இருந்தும் என் அவா குறைந்தபாடில்லை
தவறோ சரியோ
என் எதிரிகளுக்கெல்லாம் நெஞ்சுக்குள்
ஒவ்வொருத்தராய் வந்தும் போய்விட்டனர்.
முகம் தெரியாத சிலரின் பெயரையும்
மனம் உச்சரித்துக் காட்டிற்று.

அவர்களை உயர்ந்த மிருகமாய்
மனம் சுட்டிக் காட்டியும்
ஒரு துப்பாக்கியைவிட
பெறுமதி குறைந்தவர்களாய்த்தான்
என்னால் நினைக்க முடிகிறதென்பது
என் துக்கத்துக்குரிய சந்தோசம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உறைந்த இருள்

இரு இருட்டு
எல்லைகளில்லாத இருட்டு
கொடூர இருட்டு தொடர்கையில் ஓடு ஒழி
வெளிச்சத்துள் வெளிச்சமாய் ஒழி
தாயின் முந்தானையுள் பதுங்கு
முடிந்தால் முட்டையுள் இறங்கு
கண்ணை மூடு உள்ளே வரும்
மங்கலிருட்டுள் ஊன்றிப் புதைந்து கொள்
மேலும் இதுவே இருட்டு ராவின் மந்திரமென
ஆழப் பதிந்துறையும்
வானத்தை இழுத்து மூடு
நெலவைக் கசக்கி குப்பையில் போடு
நட்சத்திரங்களைக் கோப்பையிலிட்டு கலக்கிக்கரை
வறண்டு பொறுக்கும் தொண்டையுள் ஊத்து
இப்போதைக்கு இங்கே எதுவும்
பிரயோசனமில்லை
கண்ணை மூடு உள்ளே வரும்
மங்கலிருட்டுள் ஊன்றிப் புதைந்து கொள்.



## அகன்ற வெளியில்

நீ இன்னமும் கனவில் மிதக்கின்றாய்
வாழ்வுக்காக ஏங்குகின்றாய்

உனது அன்புக்கும்
எனது உயிருக்குமிடையிலான
அகன்ற வெளியில்
நீயோ நானோ
நிர்கதியானதற்கு நிறையவே காரணமுண்டு

உனது கரிய உதடுகளில்
எனது துயரக் கவிதைகளையோ
உனது நிர்வாண மேனியில்
எனது குளிர்ந்த தேடலையோ
கொட்டித் தீர்க்க என்னால் முடியாது
எனது துயரமும் இதுவல்ல

அவள் சொன்னது
சரியாய்ப் போயிற்று
இது சித்திரக் கனவல்ல
நெஞ்சுக்குள் புதைந்ததுபோன
வலி நிரம்பிய
வாழ்வின் மீதான நிறைபுள்ளி

நான் கடக்க விரும்பினேன்
நிறங்களற்ற
புள்ளிகளைத் துறந்து
நான் நேசிக்க விரும்பினேன்
என்னுள்ளிலிருந்து என்னை
நான் பறக்க விரும்பினேன்
திக்கற்ற ஒரு பறவையைப்போல

இத்தனைக்குள்ளும்
இறுக மூடினேன் மனவெளியை
மீண்டும் என்னுள்ளிருந்து
அசைந்து அசைந்து
மேலெழுவதாயிற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானும் புரிந்து கொண்டேன்
இனியென் அறைச் சுவரில் பல்லிகள் புணரும்.

நடந்ததென்ன என்பதை
இப்போதைக்கு முழுமையாய்
சொல்லவும் முடியாது
தலையின் உச்சியிலிருந்து
சிலந்திகள் இறங்குவதாயிற்று

பறந்து பறந்து வட்டமிடுகின்ற
வல்லூறின் காலிடுக்கிலிருந்தும்
சிலந்திகள் இறங்கலாயின

மீண்டும் மீண்டும் அபாயங்கள்
என்னுள்ளே நெருங்குவதாயுமுள்ளன

நீள் தலைப் பாம்பொன்று
உச்சியிலிருந்து தோல் வழியே இறங்கியும்
நுரையீரல் பூ வொன்று
கருகி வீழ்ந்தும்
மிரட்டும் கண்களையுடைய
மிருகமொன்று
இருள் கடக்கும் சமவெளியில்
தடுப்பதாகவுமுள்ளன

இம் மனச் சிதிலங்களிலிருந்து
பயம் மட்டும் படபடக்கிறது
நான் பிரார்த்திக்க விரும்புகிறேன்.



அதன் மீதான வெறுப்பு
என்னுள்ளும் தொடர்வதாயிற்று

நேற்றின் திசையின்றிய ஒரு நண்பனும்
இன்று
வாழ்வு பற்றி
வாழ்வின் துயரம்பற்றி
அவனது அம்மாவின் அரவணைப்பு பற்றி
காணாமல் போன நண்பர்களைப் பற்றி
ஈழதேசப் போராட்டம் பற்றி
இன்னும் இன்னும்
அதிகம் அதிகம்
பேசி முடித்தாகி விட்டான்

இப்போ
எனக்குள் நான் ஒரு பைத்தியம்
மல்லிகை வாசமும் மிதந்து வருகிறது
நான் விரும்பும் எல்லா அழகுகளும்
உள்வெளியில் அமர்ந்தாகிவிட்டது
எல்லாமே அடிவானத்தின் சிற்பம் போல்
உள்வெளியிலும்
முழுமையாய் இறங்கி விட்டது
இறைவனே இன்னும்
மௌனம் அதிகமான என்னை
மேலும் மேலும்
தடவித் தடவி
அதன் மீதான தேடலையும்
அதிகமாக்கி விட்டாய்

இனி என்ன செய்ய முடியும்
என்னை வழி நடாத்து.

ஆழமான பள்ளத்தாக்கைப் போல்
உன்னெல்லாத் துயர்களையும்
"ஒருகைப்பிடிக்குள் இறுகிய காலங்களினை
வர்ணங்கள் அழிந்த ஒரு வண்ணத்துப் பூச்சியாய்
காண மறுக்கிறது மனம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தின் சிறியதொரு கேள்விக்கு
எத்தனையோ பதில்களைச் சொல்லி முடித்தாயிற்று
பிழையாய்,
நேர்கோட்டுக்குள்ள பரப்பளவே எனக்குள்ளும்
கவிதை
ஒவ்வொருத்தரும் கேட்க
நான் எதைச் சொல்ல ?
தூண்டில் புழுவாய்க் குத்தி வாழ்க்கைக்குள்
வீசிற்று காலம்
விரிந்து செல்லும் பாலைவன வெறும் வெளியில்
எத்தனை முறைமழையாய் விழுந்தேன்
என்குடிசைக்குள் ஒழுகும் மழையோடு
எத்தனை முறை கரைந்தேன்
எறும்பின் அழகிய தொடர் நடையாய்
இதயத்தின் மொழியை வார்த்தையில்
அடுக்கினேன் ஒரு நேர்கோடாய்
வர்ணமற்றுப் பிறந்தது கவிதை
இனி எப்போதுமே
"ஒரு கைப்பிடிக்குள் இறுகிய காலங்களினை
வர்ணங்கள் அழிந்த ஒரு வண்ணத்துப் பூச்சியாய்
காண மறுக்கிறது மனம்"



## உள்வெளிப்பரப்பினில்

துயர்களின் மென் இடைவெளிகளுக்கிடையே
அதுவும் நிகழ்ந்தாகிவிட்டது
அழகிய கண்களின் வழியே
ஒரு செங்கால் நாரையாய்
இனியெதுமென் தோளில் அமர்தல் கூடும்

நிகழ்ந்தது பற்றி
புதியதாய் எதுவும் கூறுவதற்கில்லை
அதன் உள்வெளியின் பின் கதவினூடே
தாழ்மனப் பரப்பின்
தளம்பல் விசையினூடே
என் நிஜத்தின் பலம் பற்றிய வீரியம் நழுவி
விரல் அசைவுகளில்
இமை வெட்டுகளில்
குதிகால் கசக்குதல்களில்
ஒருபுழுவாய் அல்லது
குப்பை எரியும் கணத்துப் புகையாய்
கழன்று கழன்று மேலே கிளம்புகையிலும்
உணர்வுகளின் நம்பிக்கை மழைமேகமொன்று
நொருங்கி விழுதல் குறித்தும்
உண்மையும் பொய்யும் மிக ஆழத்தில்
பிரிக்க முடியாதபடி இணைந்திருப்பது குறித்தும்
துயர்களின் மென் இடைவெளிகளுக்கிடையே
கடவுளிடமென் மனம் பாடிக்
கொண்டேயிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தனித்தலில்

தனிமை பற்றிய அச்சம் என்னையும்
அறுப்பதாயிற்று
வெயிலுக்கும் காற்று வெளியிற்கும்
தொலைவில் பிறந்த கானல் போன்று
அழகாயும்
நெருங்க நெருங்க அதிபயரங்கமாயும்
எனக்குள் இறுகப்பற்றிற்று
தனிமை பற்றிய அச்சம்.

அந்தக் குளத்தின் கரையையும் அலைகள் மூழ்கின
மீண்டுமெனக்குள் போராளியானேன்.

போர் மனப்போர்
போரை உன்னதமாய் ஆக்கிற்று
இருத்தலின் அச்சம்.



## வாழ்வின் மீதான எளிய பாடல்கள்

தளம்பிய நம்பிக்கையின் அடிவாரத்தில்
ஊன்றப்பட்ட கால்கள் தளர்ந்தபின்னும்
காத்திருப்பதே விதியாயிற்று

நான் உரைத்த அனைத்து விதியிலும்
இன்று இதுவும் கேள்வியாயிற்று
எனது சுவரில் இனி எந்த ஓவியத்தையும்
தேடித் தோற்காதே
வார்த்தைக்குள் அறையப்பட்ட இசையாயிற்று
என் சுவாசமும்
சிறுகுழந்தையின் கையெழுத்துப் பிரதியாய்
கமா முற்றுப்புள்ளி அரைகுறையாய்
வரையப்பட்டிருக்கிறது எப்போதும்
திருத்தப்படலாம்.

உன் கண்களிலிருந்து விழும்
வாழ்வின் மீதான மிக எளிய பாடல்
குழம்பிக் கிடக்கும் இதயத் துடிப்பின்
சங்கீதத்தோடு இணையுமா ? அது முரண்
சிதைவுகளிலிருந்து மீண்டபின்னும்
துயரம் பற்றிய புலம்பல்களே எனக்காய் எஞ்சும்
ஓய்வே அற்ற எனது நெடும்பயணத்தில்
ஆறுதலே அற்ற குளத்தை நோக்கி
ஆன்மாவின் தாகங்கள் சுரக்கும்
என்னதான் செய்வேன்.

கலந்துபின்னிக் கிடந்த ஒருமையில்
வலிந்து பிரிக்கப்பட்ட புன்னகையாய்
நான் இறப்பதும்
நாதியற்று நீ வாழ்வதும்தான்
முடிவாயிற்றோ என்னவோ

சலனங்கள் நுழையும் கணங்களின்
பிளவுகளினூடே
வாழ்வின் விமோசனங்களுக்காய்
இன்னமும் காத்திருப்பதே விதியாயிற்றே. . .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆழ் ஆன்மாவின்
## தொழுகையெல்லாம் இதுவே

எனது துயரத்தைச் சொன்ன
எந்த இரவுகளிலும் நீ
தனித்திருந்ததில்லை
உன் மீதிருந்த நம்பிக்கைக்காவது
நீயெனது பிரார்த்தனைகளையும்
துயரங்களையும் கேளாமல் போனதினாலும்
உன்மீதெனக்குக் கோபமில்லை
உனது தீர்ப்புகளிலெல்லாம்
மிகக் கொடுமையான தீர்ப்பு
எனது நம்பிக்கையும்தான்
உனது கோபம் எப்படியோ
எனது ஆழ் ஆன்மாவின்
தொழுகையெல்லாம் இதுவே.

"யாருமே அறிய முடியாதபடி
ஒரு சிறகு முளையாத சிட்டுக்குருவியை
நசுக்குவதுபோல் நீ
என்னையும் நசுக்கிவிடு"

வாழ்தலில்முன் கற்பிதங்களேயன்றி நீ
என்னோடு கைகோர்த்துக் கொண்டாய்
நான் என்ன செய்ய
வெறும் நம்பிக்கைமாத்திரமே
போதுமென்றிருந்த காலமது
இன்றுதான் அதுவும் புரியலாயிற்று
வாழ்தலுக் கெல்லாமே பொய்யான
கற்பிதங்களென்று

நமது காதலின் வெற்றியும்
வாழ்வின் போராட்டமும்
இத்தவரையில் ஒன்றுதான்
நான் புரிந்து கொண்டேன்
நீயும் புரிந்து கொண்டிருப்பாய் தானே

சூரியன் தொடும் வெறும் நிலத்திலும்
நீயும் நானும்



நீண்டதூரம் பயணித்து விட்டோமே.
ஆனாலும் நமது எல்லாத் துயரத்தினூடேயும்
எல்லா அனுபவத்தினூடேயும்
எல்லா வெறுமையினூடேயும்
உனது அன்பும் அரவணைப்பும்
இன்னுமென்னைப் போராட் தூண்டுவதாயிற்றே
நான் என்ன செய்ய ?

இன்று எனது பிறந்தவீடும்
தாய் நிலமும்
உன்னிடம் உனது படையிடம்
பறிபோயிருக்கலாம்
இன்னும் கடல் தள்ளும் அலையினூடே
றப்பர் டையர்களினூடே
நீளமான வாவிகளினூடே
பதுங்கு குழியினூடே
போராட்டம் குறித்த காயங்களோடும்
கனவுகளோடும்
எனதையும் நீ ஒதுக்கி விடலாம்.

உண்மையிலேயே யாரையும் யாரும்
காப்பாற்ற முடியாதும் போகலாம்
ஆனால் இவைகளுக்கப்பாலும்
இரவின் துவாரம் கிழிந்து
இன்னொரு ரத்தக் கட்டியை உதிர்த்தும்

அது உன்னையும் உனது படையையும்
எனது மண்ணிலிருந்த விரட்டியடிக்கும்.

முன்னிராப் பொழுதில்
பிந்தி வந்தது காற்று
உடலும் காது நீட்டும்படி
மெல்லிய ராகமொன்றைச் சுமந்து
அள்ளி அள்ளி வீசியது
நீண்ட நேரமாய்
இலைத் தட்டெங்கும்
பூவுக்குள் ஊத்தியும்
மெதுவாய் மூடிற்று
மொட்டாய் காற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறகுகளை உரசி உரசி
பறவைகளும் பாடும்படி
வரத்தெரிந்த காற்றுக்கு
இன்று என்ன நடந்தது
சற்று முன்னமே வந்திருந்தால்
வழக்கம் போலவே
மனதின் வேதனைகளையும்
வாழ்தல் மீதான நம்பிக்கைகளையும்
குடிசையின் சிறகுகளையும்
அள்ளிக் கொண்டு
கடலில் கொட்டியிருக்கலாம்
தாமதமாயிற்று காற்று.

நதிகள் கல்லானதை
பறவைகள் அழுததை
அடர்ந்த காடுகள் சிறகசைத்துப் பறந்ததை
நீ உனது கண்களால் கண்டதுண்டா ?
அல்லது
யாரும் சொல்லிக் கேட்டதுண்டா ?

முன்னைய கடவுள்கள் புதையுண்டதையும்
புதிய கடவுள்கள்
இருண்ட இரவில் ஆகாயத்திலிருந்து
உடல் நிர்வாணமாகவும்
உடல் கவசங்களோடும்
கடும் கோபமாகவும்
கடும் மகிழ்ச்சியாகவும்
இறங்கியதை
நீ உனது கண்களால் கண்டதுண்டா ?
அல்லது
யாரும் சொல்லிக் கேட்டதுண்டா ?

சத்தியமாக நான் சொல்வதை நீ கேள்
என் மனதில் பெரும் பதட்டம்
என் உடலில் நீண்ட நடுக்கம்
எல்லாவற்றிற்கும்
எனது கண்களே சாட்சி
எல்லாவற்றிற்கும்
எனது செவிகளே சாட்சி
இவைகள் நடந்தே ஆகின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னெச்சரிக்கையாய்
யுத்தத்துக்கு
சொற்கள் புறப்பட்டுச்
சென்றுவிட்டன
அவர்களின்
கொலைவெறிக்கு முன்பாக
ஆக்கிரமிப்புக்கு முன்பாக
கொடூரங்களுக்கு முன்பாக
அச்சுறுத்தலாக
வெடிக்கத்தொடங்கிவிட்டன.

எதிர்
வெளியீடு

₹ 150

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org